இ.சு.முரளிதரன்

# தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்

## வணிகமாக்கப்பட்ட வலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்

## வணிகமாக்கப்பட்டவலிகள்

இ.சு.முரளிதரன்

ஜீவநதி வெளியீடு
கலை அகம்
அல்வாய்
2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்
வணிகமாக்கப்பட்டவலிகள்

ஆசிரியர் : இ.சு.முரளிதரன்

முதற்பதிப்பு : யூன் 2013

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு :
ஜீவநதி
கலை அகம்,அல்வாய்

அட்டை வடிவமைப்பு: தானா. விஷ்ணு

வடிவமைப்பு : க.பரணீதரன்

அச்சுப் பதிப்பு :
மதிகலர்ஸ்
நல்லூர்

பக்கம் : 92

விலை: 250/=

Tamil cinemavin parvaiyil eelam
vanikamakapata valikal

Author:
R.S.Muraleetharan

First Published:
June 2013

Copy Rights:
R.S.Muraleetharan

Published by:
Jeevanathy
Kalaiaham, Alvai

Cover design:
Thana.vishnu

Type setting:
K.Bharaneetharan

Printed at:
Mathi colours, Nallur

Pages: 92

Price: 250/=

ISBN : 978-955-4676-08-4

ஜீவநதி வெளியீடு:27




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்



"அத்தான்" இ.வேலாயுதன்
"அக்கா" வே.பாக்கியம்
ஆகிய இருவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

ஆளுமை மிகு கட்டுரைகளால்
அருட்டுணர்வை நிகழ்த்தி
என்னையும் எழுத வைத்த
*சாரு நிவேதிதா* அவர்களுக்கும்

திரைப்படிமப் பிரதிகளை
தந்துதவிய
***S.குகசேந்தன்***
M.***செல்வதாஸ்*** ஆகியோருக்கும்

அறிமுகக்குறிப்பு வழங்கிய ***குப்பிழான் ஐ.சண்முகன்***
அட்டைப்படத்தினை வடிவமைத்த ***தானா.விஷ்ணு***
நூலை வடிவமைத்துப் பதிப்பித்த ***க.பரணீதரன்***
அழகுற அச்சமைத்து தந்த ***மதிகலர்ஸ்***
மற்றும்
என் குடும்பத்தினருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 27 ஆவது வெளியீடாக இ.சு.முரளிதரன் அவர்களால் சினிமா பற்றி "ஜீவநதி"யில் எழுதப்பட்ட பதினைந்து கட்டுரைகளும் "தவிர"வில் எழுதப்பட்ட ஒரு கட்டுரையுமாக மொத்தம் 16 கட்டுரைகளை உள்ளடக்கி "தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம் வணிகமாக்கப்பட்ட வலிகள்" கட்டுரைத் தொகுதி வெளிவருகின்றது.

அனைவராலும் நன்கு அறியப்பட்ட கவிஞரான இ.சு.முரளிதரன் சினிமா பற்றி ஜீவநதியில் தொடர்ந்து எழுதி வருகிறார். இவரது சினிமா பற்றிய கட்டுரைகள் ஏனையோரது சினிமா பற்றிய பார்வையிலும் பார்க்க வித்தியாசமானவை. மிகவும் நுணுக்கமாகவும், கலைநயத்தோடும், தீவிர ஈடுபாட்டோடும் சினிமாவைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றை இந்நூலில் கட்டுரைகளாக தந்துள்ளார். இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகள் யாவும் பார்வையாளனை நன்கு சிந்திக்கத்தூண்டும். தனியே தமிழ் சினிமாவுடன் மட்டும் நின்று விடாது இவரது பார்வை யப்பானியத் திரைப்படம், சிங்களத்திரைப்படம், ஈரானியத்திரைப்படம், ஆப்கானிஸ்தான் திரைப்படம், வங்கத் திரைப்படம், இத்தாலியத் திரைப்படம், ஆங்கிலத் திரைப்படம் என விசாலித்து இருப்பதை இங்குள்ள கட்டுரைகள் புலப்படுத்துகின்றன.

இவரது இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகள் யாவும் வாசகனையும், சினிமாப் பார்வையாளனையும் சிந்திக்க வைக்கும் என்பதில் ஐயம் இல்லை. நூலாசிரியரின் முயற்சிகள் சிறக்க வாழ்த்துகின்றேன்.

*க.பரணீதரன்*
*ஆசிரியர் ஜீவநதி*
*2013.06.08*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. தமிழ்த் திரைப்படத் தலைப்புகள் ஒரு குறும்பார்வை

2. திரைப்படங்களில் நகலெடுப்பு

- கமல்ஹாசனை முன்வைத்து -

3. தமிழ் சினிமாவின் பார்வையில்

ஈழம்வணிகமாக்கப்பட்ட வலிகள

4. தமிழ்த் திரைப்படங்களில் குறியீடு

- ஆழமறியாத ஒரு தேடல்-

5. தமிழ்த் திரைப்படங்களில் கலை இயக்குநரின் வகிபாகம்

- வணிக சினிமா நோக்குநனின் நுனிப்புல் மேய்ச்சல் -

6. மணிரத்னம் சினிமாவில் நிஜமாந்தர்களின் நிழல்

7. கனதியான முயற்சிகளின் கால்கோள்

- பதேர் பாஞ்சாலி

8. கனவுருவ வரைபுகளால் கருத்தியல் திருட்டு

9. கொண்டாட்ட தேவதை "ஸ்ரேயா கோஷல்"

10. உண்மையின் பன்முக வடிவம் - Rashomon -

11. ஈரத்தின் வசீகரம் சுவற வைத்த ஈரானிய சினிமா

12. புனிதம் தகர்க்கும் "புறஹறந்த களுவற"

13. நகரும் படிமங்களில் நாகேஷ

14. வர்மக் கலையும் தமிழ் சினிமாவும்


-கால்கோள் நிலைக் குறிப்புகள்-

15. அகிலத் தரமான ஆப்கானிஸ்தான் சினிமா

16. தெவிட்டாத திரைப்படிமம் - Bicycle Thief -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்த் திரைப்படத் தலைப்புகள்

## ஒரு குறும்பார்வை

வெகு மக்களை எளிதாக ஈர்க்கக்கூடிய ஊடகமாக திரைப்படம் அமைந்துள்ளது. தோமஸ் அல்வா எடிசனிடம் கருத்தரித்த சிந்தனை லூமிரே சகோதரர்களால் பிரமிப்பூட்டும் வகையிலே திரையிலே வெளிப்படுத்தப்பட்டபோது உலகமே வியந்தது. கூத்து, நாடகம் என்பவற்றின் இன்னொரு கட்ட வளர்ச்சி யாகவே திரைப்படம் நோக்கப்படுகிறது. வீரியம் மிகுந்த விமர்சன அம்புகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் போதும், கவலையின்றிப் பயணித்துக் கொண்டிருக்கும் நூதன சாதனமாக அமைந்துள்ளது. கலை இலக்கிய வடிவங்களின் தலைப்புகள் உள்ளடக்கத்தினை அடையாளப்படுத்துவதாகவும், தனித்துவமான தன்மை யோடும் அமைந்திருப்பது வழமையாகும். எனினும், தமிழ்த் திரைப்படங்களின் தலைப்புகளோ காலந் தோறும் சூத்திரப் பாங்கிலேயே சுற்றிக் கொண்டிருப்பது நோக்குதற்குரியதாகும்.

**1. வடமொழித் தலைப்புகள்**

வடமொழிக் கலப்பானது தமிழிலே தவிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத நிகழ்வாகி விட்டது. ஆரம்ப காலத் தமிழ்த் திரைப்படங்களின் தலைப்புகளில் வட மொழிச் செல்வாக்கு அதிகமாகவே காணப்பட்டுள்ளது. முதற் படமான காளிதாஸ் (1931) தொடங்கி புஷ்ப ஹரணம், லங்கா தகனம், மாயா பஜார், ஸ்வர்ணலதா, அதிர்ஷ்டம் என்ற வாறாக ஆதி முயற்சிகள் பல சமஸ்கிருத வார்த்தைகளையே தலைப்பாக்கிக் கொண்டன.

### 2. இடைச் சொல் இணைந்தவை

ஆரம்ப காலத் திரைப்படங்களின் தலைப்புகளில் "அல்லது" என்ற இடைச் சொல்லின் செல்வாக்கும் "&" என்ற மேலைத்தேய இணைப்பிடைக் குறியீட்டின் செல்வாக்கும் அதிகளவிலே இடம்பெற்றுள்ளது. நவீன கவிதைத் தலைப்புகளில் தற்காலத்தில் காணக்கூடிய "அல்லது" பயன்படுத்தும் வழக்கத்தினை தமிழின் ஆரம்ப காலத் திரைப்படத் தலைப்புகளில் அவதானிக்க முடிகிறது. சந்திரசேனா அல்லது மயில் இராவணன் திரைப்படத்திலே தொடங்கிய இம்மரபு பல படங்களிலே தொடர்ந்தது. சந்திரமோகனா அல்லது சமூகத் தொண்டு, வசந்தசேனா அல்லது மிருச்சடிகா, பாலா மணி அல்லது பக்காத் திருடன், விக்கிரம ஊர்வசி அல்லது ஊர்வசியின் காதல், ஆராய்ச்சி மணி அல்லது மனுநீதி சோழன் போன்றன சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். இதே போல பக்த ராம்தாஸ் & மிளகாய்ப் பொடி, உஷா கல்யாணம் & கிழட்டு மாப்பிள்ளை, ராஜசேகரன் & ஏமாந்த சோனகிரி போன்ற பல படங் களில் "&" என்ற குறியீட்டின் ஆதிக்கத்தினைக் காணலாம்.

### 3. ஆங்கில மொழித் தலைப்புகள்

தமிழர் பண்பாட்டிலே ஆங்கில மொழி மீதான ஈடுபாடு அதிகமாகவே இருந்து வருகின்றது. நவீன இலக்கிய வடிவங்கள் பலவற்றுக்கு ஆங்கில மொழித் தலைப்பிட்ட தன்மையினை அவதானிக்க முடிகிறது. ஆங்கில மொழியின் செல்வாக்குத் திரைத் துறையிலே அதிகரித்து வருகிறது. மிஸ் கமலா (1936) திரைப் படத்திலே தொடங்கிய அரை ஆங்கிலப் பிரயோகம் "டேஞ்சர் சிக்னல் (1937)" என முழுமையடைந்தது. இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்த் திரைப்படத் தலைப்புக்களின் ஏகபோக உரிமையினை ஆங்கிலம் தத்தெடுத்துக் கொண்டது. 2004இல் வெளிவந்த திரைப்படங்களின் தலைப்புகளை நோக்கினால் இவ்வுண்மையினைப் புரிந்து கொள்ளலாம். நியூ, ஷாக், ட்ரீம்ஸ், ரிமோட், இமேஜ், ஆட்டோகிராப், கம்பஸ், சுப்பர்டா, சவுண்ட் பார்ட்டி, செவின் – ஜி – ரெயின்போ – காலனி என்பன அவ்வாண்டு வெளிவந்த படங்களில் சிலவாகும். தொடர்ந்து இயக்குநர் S.J.சூர்யா தனது படமொன்றுக்கு B.F என்று பெயரிட, தமிழுணர்வாளர்கள் பொங்கி எழுந்தனர். போராட்டங்கள் பல நடத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக முதலமைச்சரே தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் நிகழ்ந்தது. தமிழ்த் திரைப்படங்களுக்கு தமிழில் தலைப்பு வைத்தால் வரி விலக்கு அளிப்பதாகத் தமிழக அரசு அறிவித்தது. பொருளாதார நன்மை கருதி அனைத்துத் திரைப்படத் தலைப்புகளும் தமிழுக்குத் தாவின. எனினும் 2011இல் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தால் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறும் வாய்ப்புகள் தென்படுகின்றன.

### 4. இயக்குநர் தனித்துவம்

உலக சினிமா இயக்குநர்கள் சினிமா சார்ந்த வெளிப்பாட்டு முறைகளில் தனித்துவத்தினை உணர்த்திக் கொண்டிருந்த காலத்தில், தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சிலர் தலைப்பிடலில் முத்திரை பதிக்க முயன்றுள்ளனர்.

### 4.1. T.ராஜேந்தர்

அடுக்கு மொழி, தாடி, நாயகியைத் தொடாத நடிப்பு என்பனவற்றோடு ஒன்பது எழுத்துத் தலைப்பும் இவரது அடையாளமாக அமைந்துள்ளது. தங்கைக் கோர் கீதம், என் தங்கை கல்யாணி, எங்க வீட்டு வேலன், ஒரு வசந்த கீதம், மைதிலி என்னை காதலி , காதல் அழிவதில்லை, மோனிஷா என் மோனலிஷா போன்ற பல படங்களில் எண் சோதிட முறையில் அமைந்த ஒன்பது எழுத்துப் பிரயோகத்தைக் காணலாம்.

### 4.2. கௌதம் [வாசுதேவ] மேனன்

பாடல் வரிகளில் தன்னைக் கவர்ந்த சொற்றொடரினை படங்களிலே தலைப்பாகப் பயன்படுத்தும் முறையினைக் கையாண்டு வருகிறார். மின்னலே, காக்க காக்க, வாரணமாயிரம், வேட்டையாடு விளையாடு, விண்ணைத் தாண்டி வருவாயா போன்றன சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### 4.3. S.A.சந்திரசேகர்

சட்டம், நீதித் துறைகளின் ஊழல்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் திரைக்கதையினை வெளிப்படுத்தியதால் இவரது திரைப்படங்களின் தலைப்புகளும் அவை சார்ந்தே அமைந்தன. சட்டம் ஒரு இருட்டறை, சாட்சி, நீதியின் மறுபக்கம், இது எங்கள் நீதி, சட்டம் ஒரு விளையாட்டு, நாளைய தீர்ப்பு போன்ற சிலவற்றை உதாரணமாகக் கூறலாம்.

### 4.4. விசு

இவரது சில திரைப்படங்களின் தலைப்புகளில் ஓசை நயம் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திசைவினைத் தரிசிக்க கூடியதாகவுள்ளது. சம்சாரம் அது மின்சாரம், வேடிக்கை என் வாடிக்கை, திருமதி ஒரு வெகுமதி, வரவு நல்ல உறவு போன்றவற்றில் அப்பண்பினை அவதானிக்கலாம்.

### 4.5. பேரரசு

இவரது திரைப்படங்கள் அனைத்துமே தமிழகத்தின் இடப்பெயர்களைத் தலைப்பாகக் கொண்டன. திருப்பாச்சி, சிவகாசி, திருப்பதி, தர்மபுரி, பழனி, திருவண்ணாமலை என்பன அவ்வகையில் குறிப்பிடத் தக்கன.

## 5. நடிகர் தனித்துவம்

குறித்த திரைப்படமொன்றின் வர்த்தக ரீதியிலான வெற்றிக்கு தலைப்புக்கும் நடிகருக்குமான பொருத்தமே பிரதான காரணமெனக் கருதி, அதே பாணியில் ஏனைய திரைப்படங்களுக்கும் தலைப்பிடும் முறை திரையுலகில் காணப்படுகிறது.

### 5.1. சிவாஜி கணேசன்

முதற் படமான பராசக்தியின் வெற்றியினைத் தொடர்ந்து பல படங்கள் பகர வரிசையிலே அமைந்துள்ளன (சிவாஜி கணேசனின் பிரத்தியேக இயக்குனராக பீம்சிங் பா வரிசைப் படங்களையே தந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.). பாகப் பிரிவினை, பாவ மன்னிப்பு, பார்த்தால் பசி தீரும், பலே பாண்டியா, படித்தால் மட்டும் போதுமா, பார் மகளே பார், படிக்காத மேதை, பந்தம், பட்டிக்காடா பட்டணமா, பாரத விலாஸ், பாபு, படிக்காதவன், படையப்பா என அவரது பகர வரிசைப் பட்டியல் காணப்படுகிறது.

### 5.2. விக்ரம்

"சேது"திரைப்படத்தின் வணிக வெற்றியோடு இரு எழுத்துப் பொருத்தம் இணைந்து கொண்டது. காசி, கிங், சாமி, பீமா, தில், தூள், மஜா எனப் பல படங்களினை ஈரெழுத்திலே தொடர்ந்தார்.

### 5.3. ராமராஜன்

கரகாட்டக்காரனின் வணிக வெற்றியானது ராமராஜனோடு "காரன்" விகுதியை இணைக்க முயன்றது. எங்க ஊருப் பாட்டுக்காரன், தெம்மாங்குப் பாட்டுக்காரன், வில்லுப் பாட்டுக்காரன், எங்க ஊருக் காவல்காரன் என்றவாறாகத் தலைப்பிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.4. டாக்டர் ராஜசேகர்

இவரது திரைப்படங்கள் வன் சொற் பிரயோகத்தோடு தலைப்பிட்ட படங்களாக அமைந்துள்ளன. இது தாண்டா பொலிஸ், அசெம்பிளிரௌடி, எவனாயிருந்தால் எனக்கென்ன போன்ற படங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### 6. பிரபலங்களின் பெயர்கள்

ஆரம்ப காலத் திரைப்படங்கள் இதிகாச, புராணங்களில் புகழ் பெற்றோர் பெயர்களைத் தலைப்பாக்கி கொண்டன. கோவலன், சத்தியவான் சாவித்திரி, நந்தனார், பிரகலாதா, நல்ல தங்காள், பட்டினத்தார், மார்க்கண்டேயர், அம்பிகாபதி, அருணகிரிநாதர் போன்ற படங்களைக் குறிப்பிடலாம். உலக வரலாற்றில் புகழ் பெற்ற ஹிட்லர், அலெக்சாண்டர், கேப்டன் பிரபாகரன் போன்றோர் பெயரிலும் திரைப் படங்கள் வெளிவந்தன. அன்புள்ள ரஜனிகாந், ப்ரியமுடன் பிரபு என நடிகர்களது நாமங்களைச் சூடிய தலைப்புகளும் இடம்பெற்றுள்ளன.

### 7. வெற்றிப் பட வார்த்தைகள்

வர்த்தக ரீதியாக வெற்றியடைந்த திரைப்படங்களில் அமைந்த வார்த்தையினைப் பின் வந்த படங்களும் பின்பற்றும் நடைமுறை காணப்படுகிறது. சின்னத் தம்பி (1991) வர்த்தக ரீதியாக வெற்றியடைந்ததைத் தொடர்ந்து "சின்ன" என்பதை சேர்த்தால் வெற்றி கிடைக்கும் என்ற மூடக் கருத்து வலுப் பெற்றது. சின்னக் கவுண்டர், சின்ன மருமகள், சின்னச் சிட்டு, சின்னத்தாயி, சின்னவர், சின்னப் பசங்க நாங்க, சின்ன ஜமீன், சின்னக் கண்ணம்மா, சின்ன மாப்ளே, சின்ன மேடம், சின்னமணி, சின்ன வாத்தியார் என்றெல்லாம் பெயரிட்டனர்.

"காதல் கோட்டை"யின் வர்த்தக ரீதியிலான வெற்றியால் "காதல்" என்ற வார்த்தை பல படங்களின் தலைப்புகளில் இணைந்தது. காதல் தேசம், காதல் மன்னன், காதல் FM, காதல் கவிதை, காதல் வைரஸ், காதல் டொட் கொம், காதல் ரோஜாவே, காதல் சரிகம, காதல் சடுகுடு, காதல் கிசு கிசு, காதல் கொண்டேன், காதல் கிறுக்கன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

புது, புதிய என்னும் அடைகளின் செல்வாக்கும் தமிழ்த் திரைப்படங்களின் தலைப்பிலே இனங் காணப்படுகிறது. புதுக் கவிதை, புது வசந்தம், புதுப் பாடகன், புது மனிதன் என்பனவும் புதிய பாதை, புதிய பறவை, புதிய பூமி, புதிய வாழ்க்கை, புதிய தோரணங்கள், புதிய கீதை, புதிய பூவிது, புதிய தீர்ப்பு, புதிய வானம், புதிய மன்னர்கள் என்பனவும் குறிப்பிடத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடா திருடா, அன்பே அன்பே, கிருஷ்ணா கிருஷ்ணா, காக்க காக்க என்பனவும், டிக் டிக் டிக், சில்க் சில்க் சில்க், டார்லிங் டார்லிங் டார்லிங், டும் டும் டும் என்பனவும் அடுக்குத் தொடர் தலைப்பிலே இடம் பெற்றமைக்கு உதாரணங்களாகும். விரலுக்கேற்ற வீக்கம், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே போன்ற தலைப்புகள் பழமொழி சார்ந்து காணப்படுகின்றன.

## ௯. வித்தியாசமான முயற்சிகள்

வ, ஜி, தீ, பூ என்றவாறாக ஓரெழுத்துத் தலைப்புகளையும் பயன்படுத்தியுள்ளனர். "ராஜாதி ராஜ ராஜ குலோத்துங்க ராஜ மார்த்தாண்ட ராஜ கம்பீர காத்தவராய கிருஷ்ண காமராஜன்" (1993) என்பதே தமிழ்த் திரைப்படங்களில் மிக நீண்ட தலைப்பாகும். குடைக்குள் மழை, ஒரு கை ஓசை போன்று முரண் அணியிலும் தலைப்புகள் அமைந்துள்ளன. எந்திரன், 7ஆம் அறிவு என மாறுபட்ட சொல்லாட்சிகளும் இடம்பெற்றுள்ளன. தரமான திரைப்படங்களை உருவாக்கிய இயக்குநர் பாலு மகேந்திரா சுவைஞர்களின் மூன்றாந் தர இரசனையினை பூர்த்தி செய்ய உருவாக்கிய திரைப்படத்திற்கு "நீங்கள் கேட்டவை" எனத் தலைப்பிட்டார்.

## 10. தலைப்பு மாற்றங்கள்

பல்வேறுபட்ட காரணங்களுக்காகத் தமிழ்த் திரைப்படத் தலைப்புகள் மாற்றப்பட்டிருக்கின்றன. கருணாநிதி – எம்.ஜி.ஆர். இருவரது வாழ்க்கைச் சம்பவங்களின் பின்னணியை மையப்படுத்தி உருவான "ஆனந்தன்" திரைப்படம் தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றிய காலத்திலே வெளிவந்ததால் "இருவர்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது (படத்தில் ஆனந்தன் கதாபாத்திரம் எம்.ஜி.ஆருக்கு உரிய தாகும்). வேறு நடிகர்களுக்காக உருவாக்கப்பட்ட மனைவி, நீலாம்பரி என்னும் தலைப்புகள் நடிகர் ரஜனிகாந்த் நாயகனானதால் முறையே மன்னன், படையப்பா என மாற்றப்பட்டன. சாதிப் பெயரை அடையாளப்படுத்தியதாகச் சர்ச்சை எழுந்ததால் "சண்டியர்" என்ற தலைப்பானது "விருமாண்டி" என மாற்றப்பட்டது. நடிகர் விஜய் சார்ந்த மத அடையாளத்தால் "கீதை" என்ற தலைப்பு "புதிய கீதை" என மாற்றப்பட்டது. ஈழப் போர் சார்ந்த அரசியலால் வேறு அர்த்தம் கொள்ளப்படலாம் என்ற அச்சத்தாலும் சாருநிவேதிதாவின் விமர்சனத்தாலும் "தலைவன் இருக்கிறான்" என்ற தலைப்பு "உன்னைப் போல் ஒருவன்" என மாற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் தமிழ்மொழியில் சந்தி விகாரங்களின்றி எழுதும் மரபும் பின்பற்றப்படுகின்றது. தமிழ்த் திரைப்படத் தலைப்புகளில் இத்தகைய பண்பினையும் இனங்காணக் கூடியதாகவுள்ளது. மாநகரகாவல், இதயகோயில், கனாகண்டேன், கண்ணாடிபூக்கள், நாய் குட்டி போன்ற பல திரைப்படங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இலக்கண வழுவோடான தலைப்புகளும் இடம்பெற்றுள்ளன. கருப்புப் பணம்(கறுப்புப்பணம்), கருப்பு நிலா(கறுப்பு நிலா), சிகப்பு ரோஜாக்கள்(சிவப்பு ரோஜாக்கள்), நீ எந்தன் வானம் (நீ என்றன் வானம்), மங்கையற்கரசி (மங்கையர்க்கரசி), நாகரீகக் கோமாளி (நாகரிகக் கோமாளி) எனக்கொரு மகன் பிறப்பான் (எனக்கு மகன் ஒருவன் பிறப்பான்), நான் மகான் அல்ல (நான் மகான் அல்லன்) போன்ற பல திரைப்படத் தலைப்புகளில் செம்மையற்ற மொழியாட்சியை அவதானிக்க முடிகிறது. அவ்வை சண்முகி, அய்யர் I.P.S, மவுன யுத்தம் போன்ற திரைப்படங்களில் மொழி முதற் போலியையும் மதுர முதலிய படங்களில் மொழி இறுதிப்போலியையும் காண முடிகிறது. எங்கேயோ கேட்ட குரல், ஒரு புல்லாங்குழல் அடுப்பூதுகிறது, கடலோரக்கவிதைகள், பூவுக்குள் பூகம்பம் போன்று திரைக்கதையோடு பொருந்திப் போகும் சில வசீகரமான தலைப்புக்களை கார்த்திகைப் பிறை கண்டது போலத் தரிசிக்க முடிகிறது.

திரைப்படத் தலைப்புகள் "பிலிம் சோம்பரில்" பதிவு செய்யப்படுகின்றன. "வித்தகன்" என்ற தலைப்பினை நடிகர் விஜயகாந் பயன்படுத்த விரும்பியபோதும், அதனைப் பதிவு செய்து வைத்திருந்த நடிகர் பார்த்திபன் கொடுக்க மறுத்து விட்டார். எனவே விஜயகாந் தனது படத்திற்கு "விருதகிரி" எனப் பெயரிட்டார் (கவனிக்க : வித்தகன் – விருதகிரி என்ற தலைப்புகளின் எண் சோதிட அமைப்பை).

உத்தம புத்திரன் என்ற தலைப்பானது 1940, 1958, 2010 ஆகிய வருடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றினை நோக்கும்போது, தமிழ்த் திரையுலகம் பொருள் பொதிந்த தலைப்பிடலில் கவனஞ் செலுத்தாது மூட நம்பிக்கையில் மூழ்கிப் போயுள்ளமை புலப்படும். பொதுப் புத்தியைக் கேலிக்குள்ளாக்காது தரமான தலைப்புகளோடு எதிர் காலத் திரைப்படங்களாவது வெளிவருமா என்ற ஏக்கத்தோடு நிறைவு செய்கிறேன்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரைப்படங்களில் நகலெடுப்பு
## – கமல்ஹாசனை முன்வைத்து –

இந்திய சினிமாவின் பன்மொழிப் பரப்பிலே தனக்கான விம்பத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் ஆளுமையற்ற நிலையில், உலகத் தரமான படைப் பொன்றில் கூடப் பாத்திரப் பங்களிப்பினை நிகழ்த்தாத சூழலில் ஒரு நடிகருக்கு "உலக நாயகன்" என்று பட்டங் கொடுத்து "ஆழ்வார்ப்பேட்டை ஆண்டவா" என வழிபாடு செய்கிறார்கள். உலக சினிமா, இந்திய சினிமா என்ற ரீதியில் கமல்ஹாசனின் பங்களிப்பை உயர்த்திப் பேசுதல் மிகை மனோபாவத்தின் விளைச்சலேயாகும். எனினும் தமிழ் சினிமாவில் அவருக்கான இடத்தினை எவருமே மறுதலிக்க வில்லை. தமிழில் மாற்று சினிமாவை உருவாக்கும் பிரயத்தனங்களில் ஈடுபட்டவர். அதே வேளை மூன்றாந்தர சினிமாவின் நச்சு வட்டத்திலிருந்து மீள முடியாதவாறு தன்னை ஆழப் புதைத்துக் கொண்டவர். மொழி, தேசம் என்ற எல்லைகளைத் தாண்டிக் கருத்துரைப்பவராக அடையாளப்படுத்தப்படுகிறார். திருமணம் என்ற அமைப்பில் நம்பிக்கையற்று நிராகரித்து தமிழ்ச் சமூகத்திற்கு அதிர்ச்சி தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் முறையைக் கடைப்பிடித்து வருகிறார். சினிமா சார்ந்த தொழில்நுட்ப அறிவும், ஓரளவு இலக்கியப் பரிச்சயமும் உடையவர். உலக சினிமா பற்றிய தேடல் மிகுந்தவர். இத்தகைய தேடலின் விளைவாக உன்னத திரைப்படங்களை உருவாக்கு வதை விடுத்து நகலெடுப்பதில் அதிக நாட்டங் கொண்டுள்ளார்.

தமிழ்த் திரைப்படங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே மாற்று மொழித் திரைப்படங்களில் நகலெடுக்கும் பணியைச் செவ்வனே செய்து கொண்டிருக் கின்றன. இந்நிகழ்வு தமிழ் சினிமாவின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிப் போயிற்று. "கம்ப ராமாயணம் கூட நகலெடுப்புத் தான்" என்று கூறி கமல்ஹாசன் தமது தரப்பை நியாயப்படுத்தி வருகிறார். நகலாக்கம் செய்யக் கூடாதென்று படைப்பாளிக்கு யாருமே கட்டளையிட முடியாது. ஆனால், மூலப் பிரதியை இனங் காட்டாது மறைத்து விட்டு நகலின் புனிதத்தை விதந்துரைத்தல் நாகரிகமானதன்று. மேலும் கம்பனின் படைப்பாளுமை போலவே தமிழ் சினிமா இயக்குநரின் நகலாக்க ஆளுமையும் அமைந்திருந்தால் தமிழ் சினிமாவின் தரம் உச்சத்தைத் தொட்டிருக்கும்.

படைப்பொன்றினை நகலாக்கம் செய்யும் தருணத்தில் மூலப் பிரதியைக் குறிப்பிடுதல் கம்பீரமான நேர்மையாகும். James Cameron 1985இல் Sylvester Stallone நடிப்பதற்காகத் திரைக் கதை ஒன்றினை உருவாக்கினார். எனினும் அவரது இயக்கத்தில் Sylvester Stallone நடிக்கவில்லை. அக்கதையில் பல மாற்றங்களைச் செய்து Sylvester Stallone தானே இயக்கி நடித்தார். Rambo II என்ற அப்படத்திலே திரைக்கதை ஜேம்ஸ் கமரூன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இயக்குநர் ராஜசேகரின் "மலையூர் மம்பெட்டியான்" திரைப்படத்தை மீட்டெடுப்புச் செய்த போது, கதை–திரைக்கதைக்குத் தியாகராஜனின் திருநாமத்தைப் பயன்படுத்தியது எவ்வகையில் நியாயம்? சின்னஞ்சிறு காட்சிகளைக் கூட ஆங்கில சினிமாவி லிருந்து திருடி விட்டு சொந்தச் சிந்தனை போலப் பாராட்டுப் பெறு கிறார்கள். E. T. திரைப்படத்திலே Steven Spielberg குழந்தை உளவியலை வெளிப் படுத்த வேற்றுக் கிரகவாசியைப் பொம்மைகளின் நடுவே மறைத்து வைப்பதான காட்சியை வடிவமைத்துள்ளார். அதைப் பிரதி செய்து "கில்லி" திரைப்படத்தில் த்ரிஷா பொம்மைகளின் நடுவே ஒளிவது எவ்வகையான உளவியலோடு சம்பந்தப் படுகின்றது? Universal Soldier 2 திரைப்படத்தில் மாடிப் படிகளில் தவழ்ந்து உராய்ந்து கீழிறங்கும் வில்லனின் முதுகில் நாயகி அமர்ந்து பயணிக்கும் வன்முறை "வில்லு" திரைப்படத்தில் நகலெடுக்கப்பட்டபோது எவ்வாறு நகைச்சுவையானது? ("வில்லு" திரைப்படத்தில் பசுவிற்கும் வடிவேலுக்கும் நடக்கும் சண்டை உட்படப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகள் நகலாக்கம் தான்!)? கை விரல் இடுக்குகளில் தோட்டாவை வைத்துத் தீயில் சூடு காட்டி வெடிக்க வைத்து எதிரியைக் கொல்லும் Shoot em up திரைப்படக் காட்சியின் அப்பட்டமான நகலாக்கத்தை "நியூட்டனின் மூன்றாம் விதி"யில் பார்க்க முடிகிறது.

கமல்ஹாசன் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான திரைப்படம் "களத்தூர் கண்ணம்மா". இத்திரைப்படம் வர்த்தகரீதியாகப் பெருவெற்றியடைந்தது. அந்நாளில் ஜனாதிபதியாக இருந்த இராதாகிருஷ்ணனிடமிருந்து குழந்தை நட்சத்திரத்திற்கான விருதினை கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார். "அம்மாவும் நீயே அப்பாவும் நீயே" எனக் கமல்ஹாசன் தோன்றிய பாடற்காட்சி, தமிழ் சினிமா மேய்ப்பர்களின் நினைவுகளில் நீங்காது மீட்டெடுக்கப்படுகின்றது. No body's child என்ற ஆங்கிலப் படத்திலிருந்தே "களத்தூர் கண்ணம்மா" நகலெடுக்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு Time பத்திரிகை உலகின் சிறந்த 100 திரைப் படங்களில் ஒன்றாக "நாயகன்" திரைப்படத்தினைக் குறிப்பிட்டது. தென்னிந்திய வரலாற்றில் வேறெந்தப் படங்களுக்கும் கிட்டாத பேறாகத் திரையுலகத்தினர் விதந்துரைத்தனர். மாஃபியா கும்பலின் தலைவனான வரதராஜ முதலியாரை மையமாகக் கொண்டு இயக்குநர் மணிரத்னத்தின் புனைவுகளோடு உருவான படமே நாயகனாகும். இத்திரைப்படம் God father என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் நகலாகும். கமல்ஹாசனுக்குத் தேசிய விருதைப் பெற்றுக் கொடுத்த "வேலுநாயக்கர்" என்ற பாத்திரம் தலை கோதும் பாணி கூட God father படத்தின் கதாநாயகன் மார்லன் பிராண்டோவிடமிருந்தே பிரதி செய்யப்பட்டுள்ளது.

கமல்ஹாசன் எதிர்மறை நாயகனாகப் பாத்திரமேற்பதில் விருப்புடையவர். எனினும் அத்தகைய கதாபாத்திரம் இடம்பெறும் படங்களில் அவரே நாயகனாகவும் காணப்படுவார். "இந்திரன் சந்திரன்" "ஆளவந்தான்" போன்ற பல படங்களில் இப்பண்பை அவதானிக்கலாம். இந்திரன் சந்திரன் திரைப்படமானது Moon over padardor என்ற ஆங்கில சினிமாவின் நகலாக்கமாகும். மனநிலை தவறிய ஒருவனின் மாறுபட்ட குணாம்சத்தை வெளிப்படுத்தக் கிடைத்த வாய்ப்பை, வர்த்தக சினிமாவின் மோகத்தால் சிதைத்து வியாபாரரீதியிலும் படுதோல்வி அடைந்த படமாக "ஆளவந்தான்" காணப்படுகின்றது. இத்திரைப்படம் Silence of lambs என்ற ஆங்கிலப் படத்தின் நகலாக்கமாகும். "சூரசங்ஹாரம்" சினிமாவானது Eye witness படத்திலிருந்தும் "எனக்குள் ஒருவன்" சினிமாவானது The rein carnation of Perter Pround படத்திலிருந்தும் பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணா, தெனாலி போன்ற படங்களிலும் மனநிலை பிறழ்ந்தவராக கமல்ஹாசன் பாத்திரமேற்று நடித்துள்ளார். தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தினை தலைப்பிலே அனுசரித்த முதற்படமாக "குணா" அமைந்துள்ளது. கமல்ஹாசனின் படைப்புகளில் மிகைப்படுத்திப் பேசப்படும் இப்படம் "டைமி அப் டைமி டவுன்" என்ற திரைப்படத்தின் நகலாகும். அதே போல யாழ்ப்பாணத் தமிழனாக (?) பாத்திர மேற்று நடித்த "தெனாலி" What about Bob? என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் நகலெடுப் பாகும். தெனாலி திரைப்பட இயக்குநர் கே. எஸ். ரவிக்குமார் தான் கமல்ஹாசனுக்கு "உலக நாயகன்" என்ற பட்டத்தை வழங்கிய "பெருந்தகை (!)" ஆவார். கே. எஸ். ரவிக்குமாரின் இயக்கத்தில் கமல்ஹாசன் பெண் வேடத்தில் தோன்றிய "அவ்வை சண்முகி" திரைப்படமானது "ரோபின் வில்லியம்" நடித்த Mrs. Doubt fire என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் நகலாக்கமாகும். (Mrs. Doubt fire திரைப்படம் ஒப்பனைக்கான ஒஸ்கார் விருதைப் பெற்றுள்ளது.)

"ராஜ்கமல் பிலிம்ஸ் இன்ரநஷனல்" தயாரிப்பில் வெளிவந்த மகளிர் மட்டும், நளதமயந்தி திரைப்படங்களில் கமல்ஹாசன் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளார். "9 to 5" என்ற திரைப்படம் மகளிர் மட்டும் எனவும் "Greed Card" என்ற திரைப்படம் நளதமயந்தி எனவும் நகலாக்கம் செய்யப்பட்டது.



உலகமயமாக்கலை விமர்சிப்பதோடு பொதுவுடைமைச் சித்தாந்தத்தை யும் போதிக்கும் படமாக "அன்பே சிவம்" அமைந்துள்ளது. மக்கள் ரசனையின் உளவியல் புரியாத புதிராகவே தோன்றுகிறது. "அன்பே சிவம்" வெளிவந்த காலத்தில் வர்த்தகரீதியில் பாரிய தோல்வி கண்டது. எனினும் பின்நாட்களில் இறுவட்டுகளில் அதிகமாகப் பார்க்கப்பட்டது. அற்புதமான கலானுபவத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ள இத்திரைப்படத்தில் கமல்ஹாசனும் மாதவனும் "bench"இல் அமர்ந்திருக்கும் காட்சி முதற்கொண்டு Trains திரைப்படத்தில் மிக நேர்த்தியாகக் காட்டப்பட்டவை தான்! பன்முக ஆளுமை மிக்க நடிகரான நாகேஷிக்குக் குணச்சித்திர பாத்திரத்திற்கான தேசிய விருதைப் பெற்றுக் கொடுத்த படம் நம்மவர். இத்திரைப்படத்தில் கல்லூரியின் துணை முதல்வராக கமல்ஹாசன் நடித்துள்ளார். இத்திரைப்படமும் To sir with love என்ற திரைப்படத்தின் நகலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநர் பாலுமகேந்திராவின் நெறியாள்கையில் கமல்ஹாசன் நடித்து வெளிவந்த நகைச்சுவைத் திரைப்படம் "சதிலீலாவதி". அலாதியான உடல் மொழியினையும் நுணுக்கமான உச்சரிப்பில் கோவை வட்டார மொழியினையும் வெளிப்படுத்தி நடித்துள்ளார். "ஷி டெவில்" திரைப்படத்தின் பாதிப்பை இப்படத்தில் காணக்கூடியதாக உள்ளது. கௌதம் மேனனின் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த "வேட்டையாடு விளையாடு" விடுப்பார்வத்தைத் தூண்டும் வகையில் வேகமாக நகரும் திரைப்படமாகும். "மேடர் ஒப் த மெமரீஸ்" என்ற திரைப்படத்தின் தாக்கத்தை இப்படத்திலே காணலாம்.

மரண தண்டனையை மறுபரிசீலனை செய்வதாகவும் தேவர் – நாயக்கர் சமூகத்தினரின் வன் முறையைப் பதிவு செய்வதாகவும் "விருமாண்டி" திரைப்படம் அமைந்துள்ளது. நாயக விம்பத்தைத் தகர்த்து விட்டு சற்று நுணுக்கமான தரிசனத்தோடு எடுக்கப்பட்டிருந்தால் உச்சப்படைப்பாக அமைந்திருக்கும். எனினும் கமல்ஹாசனின் தன்முனைப்பால் சிதைந்துவிட்டது. உத்தியில் யப்பானிய திரைப்படமான "ரஷோமோனையும்", காட்சியமைப்பில் "ஜெயில் பிரேக்" "ஸ்பாட்டகஸ்" திரைப்படங்களையும் கலந்து பின்னப்பட்டுள்ளது.

1972இல் அமெரிக்காவில் வோஷிங்ரன் நகரில் நடந்த கருத்தரங்கில் "லோரன்ஸ்" என்ற விஞ்ஞானி "Does the flap of a butterfly's wing in Brazil set off a tornado in Texas?" என்ற வினாவை எழுப்பினார். இவ்வினாவிலிருந்து "பிறேசிலில் ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு டெக்ஸாசில் ஒரு பூகம்பத்தை உருவாக்கலாம்" என்ற வண்ணத்துப்பூச்சி விளைவு தோற்றம் பெற்றது. இது Chaos Theory இன் ஒரு பகுதியாக அமைந்தது. இச்சிந்தனையின் தளத்திலே பத்து வேடங்களை ஏற்று கமல்ஹாசன் நடித்த படமே "தசாவதாரம்". கதைக்கு வேறொருவர் உரிமைகோரி நீதிமன்றம் சென்றமை, இசை வெளியீட்டில் ஜாக்கி சான் கலந்து கொண்டமை போன்ற விடயங்கள் வணிகக் குதிரையின் வேகத்திற்குத் தீனியாக அமைந்தன. ஜூன் 15–2008இல் சர்வதேச Box office Top 10 பட்டியலில் தசாவதாரம் ஏழாவது இடத்தைப் பிடித்தது. அப்பட்டியலில் இடம்பிடித்த முதற் தமிழ்த் திரைப்படமாக அமைந்தது. இத்திரைப்படத்தில் Angel and demons என்ற படத்தின் தாக்கத்தைக் காணலாம்.

கமல்ஹாசன் நடித்த திரைப்படங்களில் ஆங்கில சினிமா மட்டுமன்றி பல ஹிந்தித்திரைப்படங்களும் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. "அர்ஜுன்" என்ற ஹிந்திப் படத்தின் நகலாக்கமே "சத்யா" திரைப்படமாகும். ஹிந்தியில் சஞ்சய் தத் நடித்து வர்த்தக ரீதியாகப் பெருவெற்றியடைந்த முன்னாபாய் M.B.B.S. என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தின் மீள் உருவாக்கமே வசூல்ராஜா M.B.B.S.! இறுதிக்காட்சியில் பின்வாங்கும் போது சஞ்சய்தத் நெகிழ்வோடு காட்டிய உடல் மொழியை கமல்ஹாசன் வெளிப் படுத்தவில்லை என மூலப் பிரதியோடு ஒப்பிட்டு பல பத்திரிகைகள் விமர்சனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.


A Wednesday என்ற ஹிந்திப் படமே "உன்னைப்போல் ஒருவன்" என மறு உருவாக்கம் செய்யப்பட்டது. நஸ்ருதீன்ஷா என்ற ஹிந்தி நடிகரின் நடிப்போடு கமல்ஹாசனை ஒப்பிட்டுப் பலர் விமர்சனம் செய்தனர்.

சினிமா மீதான கமல்ஹாசனின் காதலை எவரும் உதாசீனப்படுத்தி விட முடியாது. எனினும் ஆரோக்கியமான சினிமாவின் வரவுக்குப் பல்வேறு காரணிகள் பின்புலமாகின்றன. பகுத்தறிவுவாதம், "மய்யம்" சிற்றிதழ், இலக்கியப் பரிச்சயம், உடல் தானம் (2002 – ஆகஸ்ட் – 15) போன்ற செயற்பாடுகளால் சக நடிகர்களிடமிருந்து தன்னை மாறுபட்டவராகவே இனங்காட்டிக் கொள்கிறார். நட்சத்திர விம்பத்தைத் தகர்த்து எறிந்து விட்டு, சூத்திரப்பாங்கினை உடைத்து நம்பகத்தன்மையோடு உலகத் தரமான படைப்பினை வெளிக்கொணரும் வகையிலே "கமல்ஹாசன்" இனியேனும் செயலாற்றுவார் எனில் தமிழ் சினிமாவின் அடையாளம் சர்வதேச அரங்கிலே ஆழப்பதியும். கமல்ஹாசனுக்குள் புதைந்திருக்கும் "விஸ்வரூபம்" நீர்த்துப்போன போலி ஒளிவட்ட விம்பமாக வெளித்தெரிவதில் திருப்தி கொள்ள முடியாது.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்
## வணிகமாக்கப்பட்ட வலிகள்

வன்மத்தின் வாசனை வீசிய அதி பயங்கர நிகழ்வுகள் குறித்த ஆழமான புரிதல் இன்றி, வணிக வெற்றியின் சமன்பாடுகளுக்கு கச்சிதமான கலவை யாகத் தென்பட்டதனால் ஈழத்தின் வலிகள் தமிழ் சினிமா மேய்ப்பர்களின் வாத்சல்யத்திற்கு உள்ளாகின. தமிழர்களின் பண்பாட்டுக் காப்புப் போலிமையின் இறுக்க இடைவெளிக்குள் நுழைந்த உச்ச நிலை மகிழ்நெறிக் கொண்டாட்டமாக சினிமாவே திகழ்கிறது. போர்ச் சூழலில் பன்னாடுகளிலும் பரவியுள்ள ஈழத்தமிழர்களின் நீர்த்துப் போன உணர்ச்சிகளை உரசிப் பங்காதாயம் தேடும் நுட்பத்தோடு சில தமிழ் திரைப் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புரையோடிப் போய் சீழ் வடியும் புண்ணை சலன படிமங்களில் நுண் தரிசனமின்றி வெளிக்கொணர்ந்து விழுமிய அந்தஸ்த்தை அவாவி நிற்கின்றன. உலக சினிமாவில் யுத்தம் சார் படைப்புக்களின் வெளிப்பாடுகள் மனித தர்மங்களின் மதிப்பீடுகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி அதிகார அரசியலின் கோர முகமூடிகளை கிழித்துக் கொண்டிருக்க, ஒற்றைச் சாளரப் பார்வையில் சலவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட சமரச நிகழ்வுகளையும், எதிரியின் தனித்துவத்தை அங்கீகரிக்காத இனத் தூய்மை மேதா விலாசங்களையும் போரியல் சினிமாவாக முன்னிறுத்துவது கலையின் இருப்பினை கேலிக்குரியதாக்கி விடுகின்றது. சிங்கள சினிமாவில் நிகழ்ந்து வரும் அற்புதங்களை உலக அரங்கில் சிலாகித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழின் மிகை மனோபாவக்காரர்களோ "போர்க் களத்தில் நின்று கொண்டு புல்லாங்குழல் வாசிக்க முடியாது" (படம்–காற்றுக்கென்ன வேலி) எனக் காவிய வசனம் புனைகிறார்கள். ஈழம் குறித்த பாசாங்குத்தனமற்ற படைப்புருவாக்கம் நிகழாத சூழலில், இது வரையான விண்ணான விம்பங்களின் வீரியத்தை இக் கட்டுரையில் பதிவு செய்ய முயன்றுள்ளேன்.

கருப்பொருளாக, துண்டுக்காட்சிகளாக, வசனங்களாக, பாடல்களாக, பாத்திரங்களாக பல்வேறு பரிமாணங்களில் ஈழத்தின் கவர்ச்சிகரத் துன்பியல் தமிழ் சினிமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. காற்றுக் கென்னவேலி, உச்சிதனை முகர்ந்தால், இராமேஸ்வரம், கன்னத்தில் முத்தமிட்டால், ஆயுதப் போராட்டம் ஆகிய படங்களில் முதன்மைக் கருவாக ஈழம் குறித்த வெளிப்பாடுகள் அமைந்துள்ளன. நந்தா, தெனாலி, புன்னகை மன்னன், நான் அவனில்லை 2, பில்லா 2 ஆகிய படங்களில் துண்டுக் காட்சிகளாக இடம் பெறுகின்றன. பாலை, ஆயிரத்தில் ஒருவன் ஆகிய படங்களில் மாறுபட்ட நிகழ் களத்தில் விவரிக்கப்படுகின்றன. 7ஆம் அறிவு திரைப்படத்தில் வசனங்களாக வணிகமாக்கப்பட்டுள்ளது. குப்பி, குற்றப்பத்திரிகை என்பவற்றில் ஈழ ஆயுத தாரிகள் தமிழ் நாட்டில் இந்திய அரசியல் தலைவர் மீது நிகழ்த்திய தற்கொலைத் தாக்குதல் என்னும் கோணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்த திரைப்படங்களின் அளிக்கைகள் சுவைஞனைச் சலனப்படுத்தும் எழில் ததும்பும் தருணங்களின் தொகுப்பாக அமையாததால், நமத்துப் போன தீக்குச்சி போல் பலரது ஞாபகப் பரப்பிலிருந்து தூக்கியெறியப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

### 1) ஈழம் முதன்மைக் கருவாக உள்வாங்கப்பட்ட திரைப்படங்கள்

#### (அ) காற்றுக்கென்ன வேலி

பரந்தன் தாக்குதலில் காயமடைந்த மணிமேகலை தமிழகத்தில் சிகிச்சை பெறுகிறாள். தகவல் அறிந்த காவல் துறையினர் மருத்துவரான சுபாஸ் சந்திர போஸை (ஸ்ரீமான்) கைது செய்து "பொலிஸ்" பாணியில் விசாரிக்கின்றனர். காவல் துறையினரிடம் பிடிபடாது மணிமேகலை இலங்கைக்குப் புறப்படுவதோடு படம் முடிகிறது. "அண்ணல் காந்தியே இப்ப உயிரோடு இருந்தாலும் நான் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனோ அதைத் தான் செய்திருப்பாரு" என மருத்துவர் கூறும் அரை வேக்காட்டு வசனங்கள் உட்பட பல்வேறு காட்சிகளை இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் பலவீனத்தோடு பதிவு செய்துள்ளார்.

சங்கீத ஆசிரியை(குஷ்பு) பாரதியார் பாடலைப் பாடும் போது பாடல் எழுதப்பட்ட காகிதம் காற்றில் பறந்து போராளி ஒருவனின் (அருண் பாண்டியன்)கரங்களில் சிக்க, அவன் தொடர்ந்து பாடுகின்றான். போராளியின் பாடும் திறனை சங்கீத ஆசிரியை பாராட்டுகிறார். "எங்களுக்கு பாடுறதுக்கு நேரமில்லை" என அவன் குறிப்பிடுவது நெருடலாகவே அமைகிறது. மெல்லிசைப் பாடல்களின் வழியே கட்டியெழுப்பப்பட்ட நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவர் அனைவரையும் பொதுமைப் படுத்திப் பேசுவது பொருத்தமாக அமைய வில்லை.

காயம்பட்ட காலை வெட்டி அகற்ற வேண்டாம் என மணிமேகலை பிடிவாதம் கொள்கிறாள். எரிச்சலூட்டும் தர்க்க நியாயம் ஒன்றையும் முன் வைக்கிறாள். ஈழத்தில் இருந்த காலத்தில் போராளிக்கு அடைக்கலம் வழங்கியதால் சங்கீத ஆசிரியை படையினரின் வன்புணர்வுக்கு உள்ளாகி தற்கொலை செய்ததாக வும் உடன் இருந்த தன்னால் ஓடக் கூடியதாக இருந்ததால் தப்ப முடிந்ததாகவும் கூறுகிறாள். மாற்றுத் திறனாளியான ஆசிரியையால் செயற்கைக்காலோடு ஓட முடியவில்லையாம்! மணிமேகலை ஓடித்தப்புவதே யதார்த்தத்துக்கு முரணானது. நிஜமான கால் இருந்திருந்தால் ஆசிரியை தப்பியிருப்பார் என நியாயப்படுத்துவது எவ்வகையில் ஏற்புடையது? மேலும் தமிழ் சினிமா கற்புக்கோட்பாட்டுக்கு கொடுத்து வரும் அழுத்தமே வன்புணர்வின் பின்னராக தற்கொலைக்கு முகாந்திர மாகியுள்ளது. இத்தகைய அனுதாபம் சம்பாதிக்கும் காட்சிகளை விட்டு விடுதலையாதல் சாத்திய மில்லைப்போலும்!

சேதுமாதவன் என்ற அமைதிப்படை வீரர் ஈழத்தை சகோதர பூமியாகக் கருதி(!) கண்ணிவெடியை அகற்றும்போது நிகழும் விபத்தில் பார்வையினை இழக்கிறார். விழிப்புலனற்றதால் அத்தை மகளும் மணம் செய்ய மறுத்து விடுகிறாள். இச்செய்தியை அறிந்த மணிமேகலை விசும்பத்தொடங்குகிறாள். இயக்குநர் "பயங்கரவாதியில்லைப் போராளி" என்றெல்லாம் "பஞ்ச் டயலொக்" புனைந்து விட்டு ஒட்டுமொத்தமாகக் கொச்சைப்படுத்தி விடுகிறார். மணிமேகலையின் விசும்பல் தனி மனிதன் ஒருவனுக்கு நிகழ்ந்த விபத்துக் குறித்த மனிதாபிமான அழுகை அல்ல. இந்திய அமைதிப்படை மீதான போராளிகளின் தாக்குதல் நியாயமற்றது என்னும் அடிப்படையில், அந்தப் பாவங்களுக்கு நிகழ்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவாயாகவே கண்ணீர் சுரக்கிறது. போராட்டத்தில் முதன்மைப் பிரதிநிதிகளுக்கு உரிமமான காதல், இறுதி நிலைப் போராளிகளுக்கு மறுக்கப்பட்டது என்ற தவறான புரிதலையும் படம் உருவாக்க முனைகிறது.

"காற்றுக்கென்ன வேலி"யில் இத்தனை அபத்தங்களுக்கிடையிலும் நேர்த்தியான சில காட்சிகள் இருக்கவே செய்கின்றன. சிறுமியின் உல்லாச உலகின் குறியீடாக வரும் ஊஞ்சலும், போராளிகளின் நிர்ப்பந்தத் தலை முழுகலின் பின் ஊஞ்சலில் ஆயுதம் ஆடும் காட்சியும் விதந்து பாராட்டத்தக்கது. தமிழ்நாட்டு அரசியல்வாதியிடம் வெளிப்படும் போராளிகள் குறித்த தரிசனமும் சிறப்பாகவே அமைந்துள்ளது.

ஆ] உச்சிதனை முகர்ந்தால்

"காற்றுக்கென்ன வேலி" திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜின் மற்றொரு படைப்பே உச்சிதனை முகர்ந்தால்! இலங்கை மட்டக்களப்பு பிரதேசத்தில் படையினரின் குழுவன்புணர்வால் கர்ப்பமடைந்த 13 வயதுச் சிறுமியின் கருக்கலைப்பிற்கு உள்ளூர்க் கிராமிய வைத்தியம் பலனளிக்காத சூழலில் தாயாருடன் சட்டவிரோதமான முறையில் தமிழகம் செல்கிறாள். பேராசிரியர் நடேசன்(சத்யராஜ்) அடைக்கலம் கொடுக்கிறார். தந்தை மரணம், தாய் காணாமல் போதல், நடேசனின் மாமியாரின் வெறுப்பு, ஆரோக்கியமற்ற மேனியால் வயிற்று உபாதையைப் பொறுத்துக் கொள்ள முடியாதிருத்தல், H.I.V தொற்று என்று அவலங்கள் வியூகம்வகுக்க ஈற்றில் மரணத்தைத் தழுவுகிறாள். சிறுமியான புனிதவதியை (நீநிதிகா) மையப்படுத்தி துயரங்கள் தொடர்ந்து குவிவது கதையின் நம்பகத்தைன்மையைப் பாதிக்கிறது. அதேபோல அனைத்துக் கதா பாத்திரங்களும் (நடேசனின் மாமியாரைத் தவிர) புனிதவதியை அதீத வாஞ்சையோடு அணுகுவதும் இயல்பாக இல்லை.

பேராசிரியர் நடேசனின் பாத்திரப் படைப்பு சீமானை நினைவு படுத்துகிறது. அதே நேரம் சீமான் காவல்துறை அதிகாரி வேடத்தில் வருகிறார். புனிதவதியின் சட்டவிரோத வருகையினை அறிந்த பின்பும் அமைதியோடு இருக்கிறார். புனிதவதி மீது அளவு கடந்த அன்பினை பொழிகிறார். இயக்குநரைப் பொறுத்தவரையில் அவர் "சாள்ஸ்" என்னும் பொலிஸ் அதிகாரி இல்லை. "அக்கினிப்புயல்" சீமான் தான்.

புனிதவதி புத்திக்கூர்மையோடு உரையாடுகிறாள். "பதுங்கு குழிக்குள் நிலவொளியில் புத்தகம் படிக்கணும்" எனப்பாடுகிறாள். நடேசனின் மனைவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சங்கீதா) வயிற்றிலுள்ள குழந்தையைக் கற்பனையில் வரைகிறாள். இருந்த போதும் அறிவு வளர்ச்சியடையாத மழலையாகவே சில இடங்களில் சுட்டப்படு கிறாள். பெண் போராளிகளோடு பின்வருமாறு உரையாடுவது பாத்திர முரணை உணர்த்துகின்றது.

"இன்டைக்கு எங்கட வீட்டில சாப்பிட வாறீங்களா?"
"எங்கள சாப்பிட நீங்க யாரு?"
"எங்கள காப்பாற்ற சண்டை பிடிக்க நீங்க யாரு?"
"எங்களுக்கு சாப்பிடுறதுக்கு நேரமில்லை"
"அப்ப உங்களுக்காக வேற ஆக்கள் சாப்பிடுவாங்களா?"

பாதிப்படத்திலேயே முடிவு தெரிந்து விடுவதால் சுவாரஸ்யம் அகன்று விடுவதோடு, புனிதாவின் மரணம் பார்வையாளனிடம் சிறு சலனத்தைக் கூட நிகழ்த்தாது போய் விடுகிறது.

பாடற்காட்சிகள் படத்திற்கு பெரும் பலவீனமாக அமைந்துள்ளன. பாலியல் வன்முறையின் போதும் பாடல் இடம்பெறுவது அக்காட்சியின் அழுத்தத்தைச் சிதைத்து விடுகிறது. "சுட்டிப்பெண்ணே" பாடலில் பெண் போராளிகளை தமிழ்சினிமாவிற்கே உரித்தான உடற்பயிற்சி நடனம் புரிய வைக்கும் இயக்குநரின் மேதாவிலாசம் அருவருப்பிற்குரியது.

புனிதாவின் தந்தை மீது நிகழ்த்தப்படும் வன்மத்தில் சிறு தீவிரத்தை உணரமுடிகிறது. தற்கொலைப் போராளியின் பிரிவுநேர முகபாவம், திருநங்கை குறித்த காட்சிகள், இனவாதங் கடந்து புனிதவதியின் சிசு மீதான பற்றுதல் போன்றன சிறப்பாகவுள்ளன. நான் வன்னிப்பிரதேசப் பாடசாலை ஒன்றில் 13 வயதுப் பிரிவினருக்கு பாடம் நடாத்திக் கொண்டிருந்தேன். விமான இரைச்சல் கேட்டது. மாணவர்களின் விழிகளில் மிரட்சி தெரிந்தது. பதற்றமடைந்தனர். எனினும் மறுகணமே யுத்தம் முடிவுற்ற சூழலை உணர்ந்து இயல்பிற்குத் திரும்பினர். "உச்சிதனை முகர்ந்தால்" படத்தில் புனிதவதியிடமும் இப்பண்பு வெளிப்படுகிறது. மிகைப்படுத்தலை நீக்கிவிட்டுப் பதிவு செய்திருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

**இ) இராமேஸ்வரம்**

யாழ்ப்பாணத்திலிருந்து 36 மைல் என்ற உப தலைப்போடு "இராமேஸ்வரம்" என்ற தலைப்பு திரையிலே தோன்ற நிமிர்ந்து உட்கார்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தவரை "இராவணன்" என்று ஏசிவிட்டு, பார்வையாளனை கும்பகர்ணனாக்கும் பெருமுயற்சியோடு அதரப்பழசான காதல்கதையினை நகர்த்தி வெறுப் பேற்றிப்படம் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் நல்லூரில் வசிக்கும் கனகசபை சிவசங்கரன்பிள்ளை (மணிவண்ணன்) பேரனான ஜீவனுடன்(ஜீவா) இராமேஸ்வரம் தனுஷ்கோடிக்கு அகதியாக வருகிறார். ஊர்ப் பெரும்புள்ளி(லால்) சீதையம்மன் கல்லறைக் கோயிலில் தஞ்சமளிக்கிறார். தஞ்சங் கொடுத்தவரின் தங்கையான வசந்திக்கும் (பாவனா) ஜீவனுக்குமிடையே வளரும் காதல் எவ்வாறு வெற்றியடைகிறது என்பதே படத்தின் கதையாகும்!

யாழ்ப்பாண அகதியான ஜீவன் "பொலிஸ்ரேசனை" அடித்து நொருக்குகிறான். நம்ப முடிகிறதா? இயக்குநரைப் பொறுத்தவரையில் அவன் Mass Hero! இயக்குநர் அமைத்த "செட்டுக்குள்" துணைநடிகர்கள் அடிவாங்கி விழுகிறார்கள். அவ்வளவு தான்! ஈழ அகதி ஒருவருக்கு இராமேஸ்வரத்தில் உறக்கம் வரவில்லை. "கண்ணி வெடிச்சத்தத்திலும் துவக்குச் சூட்டுச் சத்தத்திலும் உறங்கிப் பழகிப்போச்சு" என்று கூறிச் சிரிக்கிறார். மயான தேச வாழ்வின் கணங்களை இப்படியா மலினப்படுத்துவது?

"ஒரு நாள் ஒரு பொழுதை கூட நீங்க தாங்க மாட்டீங்க எங்க வாழ்க்கை அவ்வளவு கொடுமை யானது"

"T.V யிலயும் பேப்பரிலயும் பார்க்கிற மாதிரி இல்ல வந்து அனுபவிச்சாத்தான் தெரியும்"

நாயகிக்கு Hero. "class"(!) எடுக்கும் காட்சியில் – பரவாயில்லை! இருபது விழுக்காடாவது இயக்குநருக்கு தெரிந்திருக்கிறதே என வியக்க, நாயகியின் பதிலில் அனைத்துமே அடிபட்டுப் போகிறது! சிறிய கத்தியால் கையை கிழித்துவிட்டு "எனக்கு வலிக்காது. பயமில்லை. உங்க ஊரில குண்டு வெடிச்சா, சண்டை நடந்தா பயப்படாமல் இருப்பேன்" என்கிறாள். இதைவிட யுத்தபூமி குறித்த மோசமான புரிதல் யாரிடமாவது இருக்குமா?

**ஈ) கன்னத்தில் முத்தமிட்டால்**

இலங்கை மாங்குளம் பிரதேசத்தை சேர்ந்த திலீபனுக்கும் சியாமாவுக்கும் திருமணம் நிகழ்கிறது. காதல் வாழ்வில் போர் குறுக்கிட "துவக்குச் சத்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்துச் சத்தமும் கேட்கக் கூடாது" என்று முடிவெடுத்து திலீபன் வனம்புகுகிறான். யுத்த சூழலால் இராமேஸ்வரம் செல்லும் சியாமா(நந்திதாதாஸ்) முகாமில் குழந்தை ஒன்றினைப் பெற்றெடுத்து, அங்கேயே விட்டுவிட்டுத் தாயகம் திரும்புகிறாள். எழுத்தாளர் இந்திரா(மாதவன்) அக்குழந்தையை தத்தெடுத்து வளர்க்கிறார். குழந்தையை தத்தெடுப்பதற்காகவே நிஜ இந்திராவை (சிம்ரன்) திருமணம் செய்கிறார். சிறுமியின் ஒன்பதாவது பிறந்த நாளின் போது தத்தெடுத்த உண்மையை அவளிடம் தெரிவிக்கின்றனர். சிறுமியான அமுதா(கீர்த்தனா) தாயைப் பார்க்க வேண்டுமென அடம்பிடிக்க, இலங்கை வருகின்றனர். ஹெரால்ட் விக்ரமசிங்கே (பிரகாஷ்ராஜ்) ஆற்றுப்படுத்த பல இடர்களைக் கடந்து சுப்பிரமணியம் பூங்காவில் சந்திப்பு நிகழ்கிறது. (யாழ்ப்பாணத்திலுள்ள சுப்பிரமணியம் பூங்கா புவியியலுக்கு புறம்பாக வேறு மாவட்டத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.) தாயாரான சியாமா போராளியாகக் காணப்படுகிறார். தேசத்தில் அமைதி திரும்பிய பின் மீள வருமாறு கூறி விடை கொடுத்து அனுப்பப் படம் முடிகிறது.

ஈழத்தினை முதன்மைப்படுத்திய படங்களில் ஆறுதேசிய விருதினைப் பெற்ற படமாக காணப்படுகிறது. இந்திய சினிமாவின் முதன்மை இயக்குநர்களில் ஒருவராகக் கருதப்படும் மணிரத்னத்தின் படைப்பாக அமைகிறது. எனினும் முற்குறிப்பிட்ட படங்களைப் போல மேம்போக்கான பார்வைத் தளத்தினைக் கொண்ட முயற்சியெனத் துணிந்து கூறலாம்.

ஆயுத வியாபாரிகளாலேயே ஈழப்போர் நிகழ்வதாகவும், முன்னேறிய நாடுகளின் ஆயுதப் பரிசோதனை வேட்கையின் பிரதிமையே யுத்தம் எனவும் சொதப்பலான விடயங்களை முன் வைத்து அனைத்தையும் மழுங்கடித்து விடுகிறார். "எல்லா ஆயுதங்களையும் கடலில் தூக்கிப் போட்டால் அமைதி உருவாகும்" என்று சிறுபிள்ளைத் தனமான தீர்வொன்றையும் கூறுகிறார். கரந்தடிப்படை அமரில் வெற்றி தோல்வி முடிவிலிப் பெறுமானத்தையுடையதென தீர்க்கதரிசனமற்று கருத்துரைக்கிறார். சமகால சூழலில் அவரது கருதுகோள் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

யுத்த இடப்பெயர்வின்போது ஹெரால்ட் விக்ரமசிங்க ஏதோ ஊர்வலக் கலவரத்தில் தேடுவது போல மிக எளிதாகவே இந்திரா குடும்பத்தினரைக் கண்டு பிடித்து விடுகிறார். பகிடிக்குரிய இந்நிகழ்வு இடப்பெயர்வுக் காட்சியின் உயிர்ப்பினைச் சிதைத்து விடுகிறது. அதே போல முதல் நாள் தாக்குதல் நடந்த பூங்காவில் மறுநாள் சந்திப்பு நிகழ்வது போர்க்கால யதார்த்தத்திற்கு முரணானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரணத்துள் வாழ்வோம்" தொகுப்பிலிருந்து சண்முகம் சிவலிங்கத்தின் கவிதை ஒன்றும் எடுத்தாளப்பட்டுள்ளது.

உ) ஆயுதப்போராட்டம்

இந்தியாவில் உள்ள Field Weapon Factory இல் ஊழியம் புரியும் ஜெய்(ஜெய் ஆகாஷ்) தனது குழுவினரோடு இலங்கை வருகிறார். நிகழ்ந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்திற்கு FWF ஆயுதம் வழங்கியதால் ஜெய் உடன் வந்த குழுவினர் போராளிகளால் கொல்லப்படுகின்றனர். ஜெய் தன் காதலியோடு தப்பி விடுகிறார். FWF தமிழர்களைக் கொல்ல ஆயுதம் வழங்கியதை அறிந்து கவலை கொள்கிறார். கடலில் வழிமறிக்கும் போராளியிடம் (போராளியும் ஜெய் தான்! – இரட்டை வேடம்) யுத்தத்தை நிறுத்த தமிழகத்தில் மாணவர்கள், அரசியல்வாதிகள், சினிமாத்துறையினர் செய்த அரும்பணிகள் குறித்து சொற்பொழிவாற்றுகிறார். 18 ஈழ அபிமானிகளின் தீக்குளிப்பை ஆதாரங்காட்டி இந்தியாவையே(!) புனிதப்படுத்த முயல்கிறார். நாயகியின் Walkman Tape இல் "தோல்வி நிலையென நினைத்தால்..." என்ற சினிமாப்பாடல் ஒலிக்க ("உசுப்பேத்தி உசுப்பேத்தி உடம்பு ரணகளமாய்ப் போச்சு" என்ற வடிவேலின் வசனம் ஏனோ நினைவுக்கு வந்தது.) Tape ஐ தானமாகப் பெற்ற போராளி இருவரையும் தப்பிச்செல்ல அனுமதிக்கப் படம் முடிகிறது.

ஈழத்தை மையப்படுத்திய திரைப்படங்களில் அதி உச்ச கோமாளித்தனங் களின் வெளிப்பாடாக "ஆயுதப்போராட்டம்" திகழ்கிறது. படத்தின் இறுதியில் தென்னிந்திய நடிகர் சங்கத்தினரின் உண்ணா நோன்புக் காட்சி இடம்பெறுகிறது. "உரிமைகளுக்கு உத்தரவாதம் இல்லாதபோது தீவிரவாதம் பிறந்தே தீரும்" என்ற கமல்ஹாசனின் பேச்சும் பதிவாகியுள்ளது. சுயமுரண்பாடுகளின் தொகுப்பாகத் திகழ்கிறார் கமல்ஹாசன். "குருதிப்புனல்" திரைப் படத்தில் போராளிகளைக் கொச்சைப்படுத்தினார். "மௌனத்தின் வலி" நூலில் ஈழக்கவிதை புனைந்தார்.

காக்க ஒரு கனக (ஏ.கே) 47
நோக்கவும் தாக்கவும் ஒரு நொடி நேரம்
தோற்கவும் அதே கண நேரம் தான்
ஈயம் துளைத்துக் கசிந்து சிவந்த
காயம் தொட்டுக் கையை நனைத்து
விண்ணே தெரிய மண்ணில் சாய்ந்தேன்.
முன் காக்க மறந்த அமைதியைக் காத்து
மாட்டுத் தோலில் தாய் மண் அறைபட
பூட்ஸ்க் கால்களால் கடந்தனர் பகைவர்
விட்ட இடத்தில் கதையைத் தொடங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென இன்னொரு குழந்தை பிறக்கும்
அதுவரை பொறுத்திரு தாயே, தமிழே
உதிரம் வடியும் கவிதை படித்து
காணாமல் போகும் படப்பிரதிகள்"

என்று தன்பங்கிற்கு எழுதிப் போனாவில் மூடியைப் பொருத்திவிட்டு, A Wednesday படத்தை நகலாக்கம் செய்து "உன்னைப்போல் ஒருவனில்" திரும்பவும் தீவிரவாதம் குறித்துப் பேசினார். "உன்னைப் போல் ஒருவனில்" தீவிரவாதிகளுக்கு எதிராக சீனிவாச ராமானுஜன் நிகழ்த்துவது ஹீரோயிசம் என்றால் அரச தீவிர வாதத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு என்ன பெயர்? இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பின்னர் தீவிரவாதம் வேறுபட்ட அர்த்தத்தினைத் தருவதாக கமல்ஹாசன் அறிய வில்லையா? செப்ரெம்பர் 11 இற்கு பின்பு அரசு சாராத ஆயுதக் குழுவினர் அனைவரது செயற்பாடும் தீவிரவாதந்தானே? கமல்ஹாசன் போன்ற நடிகர்களின் பேச்சை ஆதார சுருதியாக அவாவும் "ஆயுதப் போராட்டம்" அபத்தத்தின் உச்சமாக அமைந்ததில் ஆச்சரியமேதும் இல்லை! சீனிவாச ராமானுஜன் அரசுக்கு எதிராக நிகழ்த்துவதும் தீவிரவாதம்தான். தீவிரவாதத்தை எவருமே ஆதரிக்கத் தேவை யில்லை. அதன் அடிப்படையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியம்.

### 2) ஈழத்தின் துன்பியல் துண்டுக் காட்சிகளில் உள்வாங்கப்பட்ட திரைப்படங்கள்

#### அ) நந்தா

இயக்குநர் பாலாவின் நந்தாவில் நாயகி ஈழத்து அகதியாக வருகிறாள். குழந்தை குட்டிகளுடன் சிலோனிலிருந்து வந்தோர் நடுக்கடலில் தத்தளிக்கும் தகவலறிந்து பெரியவர்(ராஜ்கிரண்) படகேறிச் சென்று இராமேஸ்வரம் அழைத்து வருகிறார். தமிழ் சினிமாவின் சூத்திரத்திற்கு அமைவாக அகதியான கல்யாணி(லைலா) பெரியவரின் அடியாளான நந்தாவை(சூர்யா) காதலிக்கிறாள். இலங்கைப் பிரச்சினையில் ஆதாயம் தேடும் தரகரான அரசியல் வாதி ஒருவரையும் படம் வெளிக்காட்டுகிறது. ஈழ யுத்தத்தின் கோர முகத்தினை வானொலிச் செய்தி யூடாக பின்வருமாறு இயக்குநர் பாலா பதிவாக்கியுள்ளார்.

"இலங்கை மட்டக்களப்பிலுள்ள கிரான்குளம் இராணுவமுகாம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை விமானப்படை விமானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுவாஞ்சிக் குடி, அக்கரைப்பற்று, திருக்கோயில், வீரமுனை, விநாயகபுரம் ஆகிய இடங்களில் சரமாரியாக குண்டு மழை பொழிந்தன. இதனால் பெரும்பாலான வீடுகள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் சேதமடைந்தன. நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் காயமடைந்தோர் மட்டக்களப்பு கல்முனை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்."

ஆ] தெனாலி

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் கமல்ஹாசன் யாழ்ப்பாணத் தமிழ்(!) பேசி நடித்த படம். அச்சமயமான அதிர்வுகளால் மனநிலை பிறழ்ந்த கதாபாத்திரத்தின் உணர்வுகளை "தெனாலி" கட்டவிழ்க்க முயன்றுள்ளது. விசரன், ஓமோம், குசினி, மனிசி, இஞ்சாருங்கோ என யாழ்ப்பாண சொற்களின் பரவுகையினை வசனங்களில் அவதானிக்க முடிந்தாலும். வட்டார மொழி உச்சரிப்பில் "படம்" சற்றே சறுக்கி விடுகிறது. ஈழத்தில் நிகழ்ந்த போர் வன்முறையில் தாயார் படையினரால் வன்புணர்வுக்கு உள்ளாக, தந்தை படுகொலை செய்யப்பட நாயகன் உளப்பாதிப்பிற்கு ஆளாகின்றான். நாயகனின் சிறுபருவத்தில் நடந்த இச்சம்பவத்தின் போது படையினர் அவனது தலையினைக் கல்லிலே மோதியதால் மனநிலை பிறழ்வு ஏற்படுகின்றது.

இ] நான் அவனில்லை – 2

இலங்கையைச் சேர்ந்த மகா(சங்கீதா) புலம்பெயர் தேசத்தில் ராஜ் என்ற இளைஞனைக் காதலித்து மணம் செய்கிறாள். இலங்கையில் உறவுகள் படும் துன்பங்களை இறுவட்டு ஒன்றைப் பார்த்து அறிந்த பின், இருவரும் மருத்துவப் பணியாற்றத் தாயகம் விரைகின்றனர். ராஜ் தனது அண்ணனிடம் பணத்தைக் கடனாகப் பெறுகிறான். மகனான சஞ்சுவை தந்தையிடம் ஒப்படைத்து செல்கிறான். ஈழத்தில் குண்டு வெடிப்பில் ராஜ் கொல்லப்பட, மகனின் மரணத்திற்கு மகாவே காரணமெனக்கூறி "சஞ்சுவை" மீள ஒப்படைக்க ராஜின் தந்தை மறுத்து விடுகிறார். நீதிமன்றமும் அவருக்கு ஆதரவான தீர்ப்பினையே வழங்குகிறது. ராஜின் அண்ணன், பணத்தை வட்டியோடு கொடுத்தால் குழந்தையை மீளளிக்கச் சம்மதிக்கிறான். மகாவால் விபத்தொன்றிலிருந்து காப்பாற்றப்பட்ட நன்றிக்காக நாயகன்(ஜீவன்) பிறரை ஏமாற்றி உழைத்த பணத்தை மகாவின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்ய, மகா குழந்தையை மீட்கிறாள்.

ஈ] பில்லா – 2

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதியாக வரும் பில்லா(அஜித்) நம்பகத் தன்மைக்கு முரணான சாகசங்களைப் புரிந்து மாஃபியாக் கும்பலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனாகிறான். "தீவிரவாதிக்கும் போராளிக்கும் ஒரே ஒரு வித்தியாசம் தான்! வெற்றி. "ஜெயிக்கிற வரைக்கும் தீவிரவாதி. ஜெயிச்சிட்டா போராளி" என்று பில்லா பேசும் வசனங்களில் ஈழப்போர்" எதிரொலிக்கிறது.

உ) புன்னகை மன்னன்

சேதுவின்(கமல்ஹாசன்) நடனப்பள்ளியில் கற்கும் துரைசிங்கம் என்ற இலங்கை அகதிக்கு ஈழத்துத் துன்பங்களின் நினைவின் துரத்தலால் நடனத்தோடு ஒன்றிப்போக முடியவில்லை. புதிதாக நடனப்பள்ளியில் இணைந்த மாலினி (ரேவதி) "அனே தெய்யோ" என்ற வார்த்தையை உச்சரிக்க, தமிழினத்தை அழிக்கும் சாதியில் ஒருத்தி என துரைசிங்கம் மாலினி மீது வெறுப்பினை வெளிப்படுத்து கிறான். "கலை சம்பந்தப்பட்ட இடத்தில் அரசியலைக் கொண்டு வராதே" என சேது அறிவுறுத்துகிறான். துரைசிங்கத்தின் உணர்வுகளை மாலினி புரிந்து கொள்கிறாள். ஆனாலும் துரைசிங்கம் மாலினியை கடத்தி சென்று சித்திரவதை செய்ய முயல, "தனிப்பட்ட முறையில் எந்தச் சிங்களவர் மீதும் எங்களுக்குக் கோபம் இல்லை" என்று கூறி அகதிகளில் ஒருவரான கவிஞர் சிலோன் விஜேயேந்திரன் அவளை விடுவிக்கிறார். எனினும் காழ்ப்புணர்வின் உச்சத்தில் இறுதிக் காட்சியில் காதலர் களான சேது – மாலினியின் மரணத்தில் துரைசிங்கமும் பங்காளியாகின்றான். (80களில் பலாலியிலிருந்தான யாழ் மக்களுக்கான ஒளி பரப்பில் அதிக தடவைகள் ஒளிபரப்பப் பட்ட படம்)

3) மாறுபட்ட தளத்தில் ஈழத்தைப் பதிவு செய்த படங்கள்

அ) ஆயிரத்தில் ஒருவன்

கி.பி.1279 இல் தஞ்சாவூரில் சோழருக்கும் பாண்டியருக்கும் இடையே போர் நிகழ்கிறது. பாண்டியரின் குலதெய்வச் சிலையோடு சோழர்குல இளவரசன் தீவொன்றுக்கு தப்பிச் செல்கிறான். சோழரின் இருப்பிடத்தை அறிய முடியாமல் பாண்டிய பரம்பரை நீண்ட காலம் தவிக்கிறது. சமகாலத்தைச் சேர்ந்த அனிதா பாண்டியன் என்ற பெண், தமது பரம்பரை சார் அரச ஊழியர் உதவியோடு கூலியாட்களையும் அழைத்துக் கொண்டு தீவினை நோக்கிச் செல்கிறாள். சோழர்களின் பொறிகளைக் கடந்து சோழ குழுமத்தை முற்றுகையிட்டு, நவீன கருவிகளோடு போர் தொடுத்து சோழர்களை சிறைப்பிடித்துச் சித்திர வதைக்குள்ளாக்குகின்றனர். சோழ மன்னன் மடிய, சோழ இளவரசன் தப்பித்து விடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநர் செல்வராகவனின் இருண்மை சுவறிய படைப்பாக காணப் பட்டாலும் சில காட்சிகளில் ஈழம் குறித்த குறியீட்டுப்படிமங்களை அவதானிக்க முடிகிறது.

ஆ) பாலை

தமிழ்ப் பெருமிதத்தின் பெருவெளியில் போரியல் சூட்சுமங்களின் வகிபாகத்தோடு தொன்ம வாழ்வியலின் பதிவை சமகால நிகழ்வின் குறியீட்டு அளிக்கையாக "பாலை" திரைப்படம் பேச எத்தனித் துள்ளது. எனினும் அகலித்த அனுபவக் கோவையாக அமையாமல் பிசுபிசுத்த காட்சிப் படிமங்களாகவே காணப்படுகிறது.

சங்ககாலத்தில் "ஆயர் குடி" என்ற பகுதியில் தமிழ் பேசும் குழுமம் வாழ்ந்து வருகிறது. வந்தேறு குடிகளான பிறமொழியாளர்களால் ஆயர்குடி தீக்கிரை யாகிறது. தமிழர்கள் பாலை நோக்கி புலம்பெயர்ந்து முல்லைக்குடியில் வாழ்வைத் தொடர்கின்றனர். பாலையின் வரட்சி ஜீவிதத்தை கேள்விக்குறியாக்க, இழந்த ஆயர் குடியை மீட்கப் போர் தொடுக்கின்றனர்.

காயாம்பூ(ஷம்மு) என்ற தமிழ் மறத்தி எழுதி வைத்த ஓலைச்சுவடியின் கதையாக படம் விரிகிறது. "பிழைப்போமா? அழிவோமா? என்பது தெரியாமல் எங்கள் இனத்தின் வரலாற்றை எழுதத் தொடங்கினேன்" என ஆரம்பிக்கிறாள். படம் பின்வருமாறு முடிவடைகிறது. "காயாம்பூவின் ஓலைச்சுவடியில் தலைவர் விருத்திரனுக்கு என்னாச்சு என்ற எந்த விபரமும் இல்லை. கடைசிப்பக்கத்தில் இவ்வாறு சொல்கிறாள் – நீங்கள் வாழும் ஒவ்வொரு அடி மண்ணும் உங்களுக்குக் கிடைப்பதற்காக உங்கள் முன்னோர்கள் போராடியிருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்"

இயக்குநர் செந்தமிழன் பழந்தமிழ் வாழ்வின் பக்கங்களை உரியவாறு பதிவு செய்யத் தவறி விட்டார். திருமணத்தில் பூச்செண்டு கொடுத்து வாழ்த்துதல் உட்பட பல காட்சிகள் சொதப்பல் ரகம்! படத்தில் "ஈழம்" குறியீடாகியுள்ளது.

**4) ஈழத்தின் துன்பியலை வசனங்களில் வெளிப்படுத்திய படம்**

ஏழாம் அறிவு

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் போதிதர்மன் பற்றிய வரலாறும் புனைவும் அத்வைதமான பின் புலத்தில் இனப் பெருமிதத்தினை இயங்குதளமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பகிர்வின் பூமராங் விளைவினை வெளிப்படுத்துவதாக "ஏழாம் அறிவு" திரைப்படம் அமைந்துள்ளது. தமிழ் பௌத்தனான போதி தர்மனிலிருந்து பௌத்தத்தைப் புறந்தள்ளிவிட்டு இனக் கர்வத்துள் கரைந்து பார்வையாளனை சொப்பன சஞ்சாரத்திற்கு அழைக்கிறது. இறுதிக்காட்சியில் ஆயிரக்கணக்கான ஆபூர்வ நூல்கள் இருந்த யாழ்ப்பாண நூலகத்தைப் பேரினவாதிகள் திட்டமிட்டு எரித்த வரலாற்றினை வசனமொன்றில் வெளிப்படுத்தி யிருக்கிறது.

நாயகனுக்கும்(சூர்யா) நாயகிக்கும்(ஸ்ருதி) இடையே நிகழும் உரையாடல் ஒன்றில் (வணிக நோக்கிலான திணிப்பாக) ஈழம் குறித்த செய்திகள் பதிவாகியுள்ளன.

நாயகி :- "வீரம், வீரம் என்று தானே சண்டை போட்டோம் நம்ம பக்கத்து நாட்டில ஜெயிக்க முடிஞ்சுதா செத்துத் தானே போனாங்க"

நாயகன் :- "வீரத்துக்கும் துரோகத்திற்கும் வித்தியாசம் தெரிஞ்சுக்கோ. ஒரு தமிழனை 9 நாடுகள் சேர்ந்து கொல்வது வீரம் இல்ல துரோகம்"

இந்திய தேசியப்பற்று என்ற வட்டத்தில் இறுதியில் படம் சுருங்கி விடும் போது மேற்குறித்த வசனம் வலுவிழந்து போகிறது.

**5] திரையிசைப்பாடல்களில் ஈழம் குறித்த பதிவுகள்**

காலத்தால் அழியாத ஜீவிதத்தன்மையோடு சில திரையிசைப்பாடல்கள் திகழ்ந்தாலும் சமீப காலப் பாடல்களின் ஆயுள் அற்பமாகவே தென்படுகிறது. உலகத் தரமான இசை, ஆத்மாவை வருடும் குரல் என்பன ஊட்டமாக அமையும் பட்சத்திலும் நோய்மிகு சொற்களின் அடுக்காகவே பாடலின் வெளிப்பாடு காணப்படுகிறது. காமத்தின் உச்சம் தணிக்கைக்குப் பலியாகி விடுவதால், அதற்குச் சமாந்தரமான விரசத்தை வார்த்தைக் கோலங்களில் வெளிக்கொணர இயக்குநர் விரும்புகிறார். இயக்குநரின் வேட்கைக்கு பணத்தைக் குறிக்கோளாகக் கொண்ட பாடலாசிரியர்கள் பலியாடுகளாகிப் போகின்றனர். இந்நிலையில் ஈழத்தின் சங்கதிகளை திரை யிசைப்பாடல் எவ்வகையில் வெளிப்படுத்தியிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

" இலங்கையில் நடக்கிற யுத்தம் நிறுத்து"
"ஈழத்தில் போர் ஓய்ந்து தேன் முல்லை பூப்பூத்து"
"சிறீலங்கா நீயானால் எல்.ரி.ரி.ஈ நானானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யய்யோ வாயை கொஞ்சம் மூடு"
"அந்த சந்திரிக்காவும் பிரபாகரனும் சம்பந்தியாகணும்"
"நிலவு சாயும் நேரம் மீன்கள் பாடும் தேன்நாடு"
"நல்லூரின் வீதியெங்கும் திரிந்தோமடி"
"விடைகொடு எங்கள் நாடே கடல் வாசல் தெளிக்கும் வீடே"

இவ்வாறான வரிகளை எண்ணற்ற பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. பொதுமையான புரட்சிப் பாடல்களும் ஈழத்துச் சூழலோடு பொருந்திப் போயுள்ளன. (தேர்தல் நிகழும் காலங்களில் எம்.ஜி.ஆரின் படப்பாடல்கள் பெறும் முக்கியத்துவமும் அவதானத்திற்குரியது.)

தமிழ்த் திரைப்படங்களில் நாயகனின் தோழனாக விதூஷகப்பாணியில் வலம் வரும் பாத்திரமொன்றினை எப்போதுமே தரிசிக்கலாம். "சிவாஜி" திரைப்படத்தில் இப்பாத்திரத்தினை ஏற்கும் விவேக் – பண்பாட்டு அடையாளங் களோடான மகளிரை யாழ்ப்பாணத்திலே தான் பார்க்க முடியும் என பகிடி(?) செய்கிறார். "நான் அவனில்லை" திரைப்படத்தில் "மட்டக்களப்பு யோகராசா" என்ற பாத்திரத்தில் விவேக் ஈழத்தமிழ் பேச முயல்கிறார். ("பாயும் புலி" படத்தில் மனோரமாவும் இலங்கைத்தமிழை ஒரு வழி பண்ணியுள்ளார்)

மாற்று சினிமாவுக்கான வருகையினை வணிக முனைப்பு சினிமா தகர்த்துக் கொண்டிருக்கின்ற சூழலில் ஈழத்தின் இனமோதுகைச் சித்திரிப்பினை எதிர்காலத்தில் கனதியான படிமங்களில் உயிர்ப்புடன் வெளிப்படுத்துதல் சாத்திய மற்றதாகவே தோன்றுகிறது. இதுவரையான முயற்சிகளும் ஆர்வக் கோளாறுகளில் அவதரித்த ஆரோக்கியமற்ற படைப்புக்களேயாகும். மூன்றாந்தரப் பார்வை யாளனுக்கு, இந்தியாவின் அடையாளமாக உணரப்படும் மணிரத்னம் என்ற ஆளுமையை சகட்டுமேனிக்கு விமர்சித்ததாகத் தோன்றலாம். நுண் தரிசனத்தோடு "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப்படத்தை மீள்பார்வைக்கு உட்படுத்தினால் உறங்கிக் கிடக்கும் பலவீனங்கள் புலப்படும். ஆங்கில வணிக சினிமாவில் இயக்குநர் ஜேம்ஸ்கமரூன் கடற்கலமொன்று மூழ்கிய அவலத்தை உலகம் முழுமைக்கும் சுவறச் செய்தார். அடித்தட்டு மக்களின் உயிரை மேட்டுக்குடி வர்க்கம் அற்பமாகக் கருதிப் பலி கொடுத்தமை பார்வையாளனிடம் பதியவில்லை. மாறாக ஜாக்–ரோஸ் இருவரின் மன்மத மயக்கமே பாதித்தது. அந்நிலையிலும் Titanic சில அதிர்வுகளை ஏற்படுத்தியது. "Titanic" ஏற்படுத்திய அதிர்வுகளில் பத்து விழுக்காட்டையாவது ஈழம் குறித்த துன்பியல் வெளிப்பாட்டு சினிமா ஏற்படுத்த முனையவில்லையே என்ற ஆதங்கத்தோடு நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த் திரைப்படங்களில் குறியீடு

## – ஆழமறியாத ஒரு தேடல்–

சினிமா என்ற கலை வடிவத்தை மிகை மனோபாவத்தின் அறுவடையாகவே தமிழ்ச் சூழலில் இனங்காண முடிகிறது. வர்த்தக ரீதியான வெற்றியே குறிக்கோளாகிப் போனதால், நகைப்புக்கிடமான எண்ணற்ற விடயங்களை தமிழ்த் திரைப்படங்களில் அவதானிக்க முடிகிறது. கமராவின் மொழியை முதன்மைப்படுத்தாது வசன தோரணங்களின் ஆதிக்கம் வலுவடைந்ததால், காட்சி ஊடகம் (Visual media) வானொலியில் கேட்கும் வகையில் இழிவடைந்தது. எனினும் இத்தகைய நச்சு வட்டத்திலும் அரிதாக சில பாராட்டத்தக்க விடயங்களும் இடம்பெறவே செய்கின்றன.

இயக்குநர் ஒருவர் காட்சிப்படுத்த எண்ணும் ஒன்றினை நேரடியாக உணர்த்தாமல் இன்னொரு காட்சியின் மூலம் வெளிப்படுத்துவது குறியீட்டு உத்தியாகும். தமிழ்த்திரைப்படங்களில் பல சந்தர்ப் பங்களில் குறியீடு பார்வையாளனால் அவதானிக்கப் பட்டுள்ளது. ஆனாலும் அக்காட்சிகளில் இடம் பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியல் நுணுக்கமற்ற தன்மையானது ஒருவித ஒவ்வாமையினையே ஏற்படுத்தியது. பிற மொழிப்படங்களில் பார்வையாளனின் உணர்வில் ஊடுருவி ஒருவித கலையனுபவத்தை சுவறும் குறியீடானது தமிழில் ஆளுமைமிக்க ஒரு இயக்குநர் ஓரிருவரால் மட்டுமே அலாதியாகக் கையாளப்பட்டுள்ளது.

"உதிரிப் பூக்கள்" திரைப்படத்தில் இயக்குநர் மகேந்திரன் செய்தி ஒன்றின் பரவுதலை தந்திக் கம்பிகளைக் காட்சிப்படுத்துவதனூடாக உணர்த்துகிறார். Amores perros என்ற திரைப்படத்தின் சாயலோடு வெளிவந்த "ஆய்த எழுத்து" திரைப்படத்தில் இயக்குநர் மணிரத்னம் அற்புதமான குறியீடு ஒன்றினைக் கையாண்டுள்ளார். திரைப்படத்தின் ஆரம்பக் காட்சி சென்னைத் துறைமுகம் பகுதியிலுள்ள நேப்பியர் பாலத்தில் இடம்பெறுகிறது. தலைமைசெயலகம், சென்னைப் பல்கலைக்கழகம், அருகேயுள்ள மீனவப் பகுதி என்பவற்றை இணைக்கும் இப்பாலம் மிகச்சிறந்த குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "மகாநதி" திரைப்படத்திலே சிறைச்சாலை பற்றிய பதிவுகள் சிறப்புற வெளிப்படுத்தப் பட்டுள்ளன. "சிறை என்பது வெளியே உள்ள சமூகத்தின் ஒரு குறியீடாகவும் இப் படத்தில் கையாளப்பட்டுள்ளது" என்று சாரு நிவேதிதா சுட்டிக் காட்டியுள்ளார்.

பின் நவீனத்துவத்தின் பண்புகளை இயக்குநர் சிம்பு தேவன் "இம்சை அரசன் 23ம் புலிகேசி" திரைப்படத்திலே திறம்படச் சித்திரித்துள்ளார். வரலாற்றுக் கதையிலே எள்ளலுடன் பதிவு செய்யப்பட்டிருக்கும் சமகாலக் குறியீடுகள் நுணுக்கமானவை. சாதிச் சண்டை மைதானத்தினூடாக "கிரிகெற்" விளையாட்டினை இரு தேசம் போராக எதிர்கொள்ளும் மன நிலையை அழகுற உணர்த்துகிறார். பன்றிக்கேடயம் பெறும் சச்சிதானந்தம் இந்திய "கிரிக்கெற்" ஜாம்பவானை கிண்டல் செய்யும் பாத்திரப்படைப்பாகும்.

"அலைகள் ஓய்வதில்லை" என்ற திரைப் படத்தில் தென்னங்கீற்றில் விழுகின்ற மழைத்துளிகள் அடைமழையாகப் பொழிவதைக் குறியீடாகக் காட்டி நாயகியின் சங்கீதத் தேர்ச்சியினை இயக்குநர் பாரதிராஜா உணர்த்தியுள்ளார். தொடருந்து ஓடுபாதை (Train TracK) மாறுவது "ஜீன்ஸ்" திரைப்படத்தில் ஆள்மாறாட்டத்தின் குறியீடாக அமைகின்றது. நடிகர் ரஜனிகாந்தின் பெரும்பாலான படங்களிலே "சென்ரி மென்ற்" என்ற வகையிலே கையாளப்படும் பாம்பு "சந்திரமுகி" திரைப்படத்திலே குறியீடாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

"குருஷேத்திரம்" முழுமையான குறியீட்டில் அமைந்த திரைப்படமாகும். நாயகன் இந்தியாவையும், நாயகி காஷ்மீரையும், நாயகனின் மகன் தமிழகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், வில்லன் பாகிஸ்தானையும், வில்லனின் நண்பன் அமெரிக்காவையும் சுட்டி நிற்கின்றார்கள். குறியீட்டைத்தவிர படத்திலே குறிப்பிடத்தக்க அம்சங்கள் எவையுமே இல்லாமையால் அனைத்துத் தரப்பினரும் படத்தை புறக்கணித்து விட்டனர்.

தமிழ்த்திரைப்படங்களில் பாலியல் சார்ந்ததும், வன்முறை சார்ந்ததுமான குறியீடுகள் பார்த்துப் பார்த்து சலிப்படைந்த தன்மையுடனேயே அமைந்துள்ளன. அருவருப்பினைத் தரத்தக்க குறியீடுகளையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக "சிங்கம் புலி" திரைப்படத்திலே தாய்ப்பசுவோடு கன்றினையும் ஒருவர் ஓட்டிச் செல்லும் காட்சி, நாயகன்(நடிகர் ஜீவா) ஒரு பெண்ணோடும், அவளது தாயோடும் கொண்டுள்ள உறவைப் பிரதிபலிக்கக் கையாளப்பட்டுள்ளது. இத்தகைய சிரங்கு சொறிச் சிந்தனைகளை தமிழ்த்திரைப்படங்களிலே தான் காணலாம். "காதல்" திரைப்படத்திலே நாயகி பூப்படையும் தருணத்தில் நீர்க் குழாயிலிருந்து நீர் கொட்டும் காட்சி இடம்பெறுகின்றது. இதே திரைப்படத்தில் இயக்குநர் பாலாஜி சக்திவேல் உலகசினிமாவுக்கு நிகரான இன்னொரு குறியீட்டினைப் பதிவு செய்தவர் என்பது வியப்பான உண்மையாகும். நாயகியின் "motorbike accelerator" ஐ நாயகன் அதிகரிக்கும் போது ஆசனத்திலிருக்கும் இருவரது பொருள்களும் அதிர்விலே நெருங்கி வருகின்றன. உளநெருக்கத்தின் உன்னத குறியீடாக இக்காட்சி அமைந்துள்ளது. பூவில் வண்டு தேன் அருந்துதல் பல திரைப்படங்களில் கலவியின் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளது. "பூவுக்குள் பூகம்பம்" திரைப்படத்திலே தேன் கூட்டைச்சிதைத்து தேன் எடுத்துக் குடித்தலை பாலியல் வன்புணர்ச்சியின் குறியீடாகக் காட்டியுள்ளனர்.

வன்முறைக்கான குறியீடும் எண்ணற்ற படங்களிலே இடம்பெற்றுள்ளது. ரோஜாப் பூவைச் சிகரெட்டால் சுடுதல், மான் மீது புலி பாய்தல் போன்ற வலிந்து திணிக்கப்பட்ட குறியீடுகளை இயக்குநர் T.ராஜேந்தர் பயன்படுத்தியுள்ளார். அறைமுழுவதும் பரந்துள்ள குருதியில் பல்லி தத்தளிப்பது "ஹேராம்" திரைப்படத்தில் வன்முறையின் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. துணை நடிகன் அடிவாங்குவதே நகைச்சுவையான தமிழ்சினிமாவில், நடிகர் வடிவேல் அடிவாங்குவதையும் வாழைக்காய் பஜ்ஜி போடுவதாகக் குறியீடு செய்வது பார்வையாளனின் பொது அறிவினைக் கேலி செய்யும் "போக்கிரி"த்தனமாகும்.

"போராளி" திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியில் நாயகன் இரண்டு குதிரைகளில் ஒரே நேரத்தில் கால் பதித்தவாறு பயணம் செய்வதை உளவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான குறியீடென்று இயக்குநர் சமுத்திரக்கனி குறிப்பிடுகின்றார். ஆனாலும் அக்காட்சி மூன்றாந்தர நாயகனை அறிமுகப்படுத்தும் சராசரிக் காட்சியாகவே அமைந்துள்ளது.

இளையதளபதி(?) விஜய் நடித்த படங்களிலும் குறியீடுகள் இடம் பெற்றுள்ளன. "தலைவரின்" பிறந்த நாளுக்கு கைவிரலை வெட்டி அனுப்பும் புத்திசாலி ரசிகர்களின் அறிவாற்றல் காரணமாக, அக்காட்சிகள் குறைந்தபட்சம் கைதட்டல், விசிலடித்தல் கூட இல்லாமல் கவனிப்பாரற்றுப் போய்விட்டன. "கில்லி" திரைப்படத்திலே நாயகன் வாழும் "அம்பேத்கார் நகர்" என்பதன் பின்னுள்ள அரசியல் புரிந்து கொள்ளப்படாததைப்போலவே, "சுறா" திரைப்படத்தில் நாயகன் வாழும் "யாழ்நகர்" பற்றிய குறியீடும் வெளிச்சத்திற்கு வரவில்லை. விஜய் ரசிகர்களின் புத்திக்கூர்மை ஈழத்தமிழர்கள் செய்த புண்ணியத்தின் பயனாக மழுங்கடிக்கப்பட்டுப் போனமையும் மகிழ்ச்சிக்குரியதே! இல்லையேல் மீனவ சமூகத்தலைவன், மக்களுக்கான போராட்டம், மரண வதந்தி, உயிரோடு மீளுதல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி (7 ஆம் அறிவு போல) இன்னொரு அபத்த நாடகத்தை அரங்கேற்றியிருப்பார்கள். "திருமலை" திரைப்படத்தின் எழுத்துச் சீர் திருத்தமற்ற தலைப்பும், குருவிக்கூடும் நாயகனின் பண்பினை ("ப்ரியமுடன்" திரைப்பட தாஜ்மஹால் போல) சுட்டும் குறியீடுகளாகும்.

பாடல்கள், இடைவேளை, படத்தோடு பொருந்தாத நகைச்சுவைப்பகுதி, பாலுணர்வைத் தூண்டும் நடன அசைவுகள் அனைத்தையும் தவிர்த்துவிட்டு, வணிக வெற்றியை மட்டும் மையப்படுத்தாது அழகியல் நுணுக்கத்தோடு தமிழ்த்திரைப் படங்கள் வெளிவரும் போது உன்னத குறியீடுகள் இடம்பெறும் வாய்ப்பு உருவாகும். அதுவரை சராசரிக் குறியீடுகளைச் சகித்துக் கொள்ள வேண்டியது தமிழர்களின் தலைவிதியாகும்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த் திரைப்படங்களில் கலை இயக்குநரின் வகிபாகம்

## – வணிக சினிமா நோக்குநனின் நுனிப்புல் மேய்ச்சல் –

இயக்குநரின் எண்ணங்களுக்கு அமைவாக நிகழ்களத்தையும் காலத்தையும் சிருஷ்டித்து சுவைஞனை நம்பகத் தன்மைக்கு வெகு அருகில் அழைத்து வருவதாக கலை இயக்கம் (Art Direction) அமைந்துள்ளது. எனினும் தமிழ் சினிமாவில் கலை இயக்குநரின் உழைப்பு பார்வையாளனின் புரிதல் வியூகத்தை விட்டு விலகி விடுவதால் உரிய அங்கீ காரத்தைப் பெறுவதில்லை. யதார்த்தம் சாராத மனோரதியக் காட்சி விதானிப்பே தமிழ் சினிமாவில் முனைப்புப் பெற்றுள்ளது. நுட்பமான சித்திரிப்பால் புனைவையும் இயற்பண்பென மயங்கச் செய்யும் ஆளுமைமிகு உன்னத கலை இயக்கத்தை தமிழ் மகாசனங்கள் வெறுமையென ஒதுக்கிவிடுகின்றனர். மிகை வெளிப்பாடான பேரரங்கு வனப்பியலே காத்திரமான கலை இயக்கமென்று சொப்பன சஞ்சாரம் புரிகின்றனர். நம்பகத் தன்மையை அறவே தகர்த்து அதீத நிறம் பூசும் இயல்பினையே நெறியாளர்களும் விரும்புகின்றனர். தமிழ் சினிமாவில் கலை இயக்குநர் சுயமான சுதந்திரத்தோடு செயலாற்ற முடியாத சூழலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. இயக்குநருக்கும் கலை இயக்குநருக்குமான இடைத் தொடர்புகளில் ஆரோக்கியமின்மை தென்படுகிறது. கதை விவாதத்தில் கலை நெறியாளருக்கான இடம் பல சந்தர்ப்பங்களில் மறுதலிக்கப்படுகிறது. வேண்டாத விஸ்வரூபக் காட்சி விதானிப்பு நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்திக் கொச்சைப்படுத்தி விடுகின்றனர். நெறியாளர் ஷங்கர் கதை விவாதத்தில் கலை நெறியாளர் தோட்டாதரணியை உள்ளீர்த்துத் திருத்தங்களை உளமார ஏற்பதாகக் கூறப்படுகிறது. எனினும் "நாயகன்" திரைப்படத்தில் மும்பை தாராவிப் பகுதியை தத்ரூபமாக உருவாக்கிப் புதிய அத்தியாயத்தைத் தொடக்கிவைத்த தோட்டாதரணியை நெறியாளர் ஷங்கர் "சிவாஜி" திரைப்படத்தில் பிரமாண்டத்தின் பின்புலத்தில் மிகை மனோபாவக் கலைஞராக அடையாளப்படுத்தியது அபத்தமாகவே தோன்றுகிறது.

கூத்து, நாடகம் என்பவற்றிலிருந்து நீட்சி பெற்ற வடிவமாக சினிமா அமைந்துள்ளது. சமஸ்கிருத நாடக மரபில் சந்திமம், வியாஜிமம், வேஷ்டிமம் என அரங்கப் பொருள்கள் மூவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், யப்பானிய மரபு நாடகக் கலைகளில் சிறப்பிடம் வகிக்கும் "கபுக்கி" நாடக மரபு மேடை அலங்காரத்தைக் கட்டாய இலட்சணமாகக் கொண்டமைந்துள்ளது. அரச மாளிகை, நதி போன்றன "செட்" போடப்படுவதோடு பல்லக்கு, வாகனங்கள் என்பனவும் பயன்படுத்தப்படும்.

ஆங்கிலமொழி வணிக சினிமாவில் கூட கலை இயக்கம் பல படங்களில் விதந்துரைக்கப்பட்டுள்ளமை அவதானத்திற்குரியது. 1959இல் வில்லியம் எ. ஹோனிங், எட்வர்ட் கார்ஃபேக்னா, ஹ'ஹன்ட் என்போரின் கலை இயக்கத்தின் பிரமாண்ட வெளிப்பாடான "பென்ஹர்", 1974 இல் டீன் டவுளரீஸ் கலை இயக்கத்தில் வெளிவந்த தி கோட் பாதர் II, 1982 ஸ்டூவர்க்ரைக், பாப்லைங், மைக்கேல் ஸீர்டன் என்போரின் கலை இயக்கத்தில் இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத்தை அற்புதமாகச் சிருஷ்டித்த "காந்தி", 1997 இல் பீட்டர் லாமண்ட், மைக்கல் ஃபோர்ட் என்போரின் கலை இயக்கத்தில் வியக்கவைத்த "டைற்றானிக்" போன்ற வணிக சினிமாவில் நேர்த்தியான கலை இயக்கத்தை காணலாம்.

தமிழ் சினிமாவின் முகிழ்நிலைக் காலத்தில் பிரமாண்டமான அரண்மனை களும், பெரு மதில்களும், திருவோலக்க மண்டபமும், அமர்க்கள காண்பிய மூலகங்களும் கலை இயக்குநரின் கைவண்ணத்தில் பார்வையாளரை வசீகரித்தன. புராணப் படங்களில் தேவலோகம் – வைகுண்டம் – கைலாசம் – நரகலோகம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியலோகம் போன்ற புனைவுக் களங்களை கற்பித உடை விதானிப்பின் உதவியோடு உருவாக்கினர். 1939 இல் வெளிவந்த சிவகவி திரைப்படத்தில் ஆ. வர்மாவின் அரங்குகளும், 1945 இல் வெளிவந்த அபிமன்யு திரைப்படத்தில் கலை இயக்குநர்களான சௌத்திரி, குட்டியப்பா என்போரின் கலை இயக்கமும் அக்காலத்தில் சிலாகித்துப் பேசப்பட்டன. அதேபோல 1955 இல் கலை இயக்குநர் அங்கமுத்துவின் "ராஜாதேசிங்" திரைப் படத்தின் அரங்க அமைப்பும் கலை இயக்குநர்களான கங்கா, செல்வராஜ் என்போரின் "காத்தவராஜன்" திரைப்படக் கலை இயக்கமும் பார்வையாளரை வெகுவாகக் கவர்ந்தன. பிற்காலத்தில் பாரதிராஜாவின் திரைப் படங்களில் கிராமங்களும், பாலசந்தர் திரைப் படங்களில் மத்தியதர வகுப்பினரின் இல்லங்களும் திரையில் விரிய கலை இயக்குநர்கள் உறுதுணையாகினர். இயக்குநர் அமீரின் "பருத்தி வீரன்" சினிமாவின் வருகை யோடு பாரதிராஜாவின் கிராமங்கள் அமச்சூர்த்தனமானவை என்ற விமர்சனங்கள் கூர்மையடைந்தன. இயக்குநர் மகேந்திரனின் "முள்ளும் மலரும்" படத்தில் இடம் பெறும் "ராலி" கதைப் பின்னலோடு இரண்டறக் கலந்து (கலை – ராமசாமி) திரைப்படத்திற்கு வலுச் சேர்த்துள்ளது.

பாரதி, மதராசப்பட்டினம், பழசிராஜா, பொக்கிஷம் போன்ற படங்கள் வரலாற்று மீட்டுருவாக்கக் கலை இயக்கத்தை நேர்த்தியாகப் பிரதிபலித்தன.

கலை இயக்கம் நான்கு பரிமாணங்களில் வகைப்படுத்தப்படுகிறது.

1. யதார்த்த வாதப் படங்களுக்கான கலை இயக்கம்
2. பொழுதுபோக்கு அம்சம் நிறை படங்களுக்கான கலை இயக்கம்
3. வரலாற்றுக் காலப் படங்களுக்கான கலை இயக்கம்
4. எதிர்காலப் புனைவுப் படங்களுக்கான கலை இயக்கம்

தோட்டாதரணி, பி.கிருஸ்ணமூர்த்தி, T. முத்துராஜ், சமீர்சந்தா, சாபுசிறில், ராஜீவன், வீரசமர், செல்வக்குமார், ஜே. கே, விதேஷ், சீனு, மகி, ராகவன், A. அமரன், ஆ. பிரபாகர், B. சாய்குமார், மணிராஜ், ஐக்கி, ரெம்போன் என்போர் (இப்பட்டியல் முழுமையானதன்று) அண்மைக் காலத் தமிழ்த் திரைப்படங்களில் கலை இயக்குநர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். பெரும்பாலான காண்பிய மூலகங்கள் வாடகைக்கு எடுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலும் பொருத்தமான வற்றினைத் தேர்வுசெய்யும் ஆளுமை கலை இயக்குநர்கள் அனைவரிடமும் பொருந்தி அமைவதில்லை என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

"நாயகன்" திரைப்படத்தின் யதார்த்தக் கலை இயக்கத்திற்காக தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருது பெற்றிருந்தாலும், "தோட்டாதரணி" என்ற பெயரை பாமரப் பார்வையாளரும் உச்சரிக்க "சிவாஜி" திரைப்படத்தின் புனைவுப் பாடலில் இடம்பெறும் பிரமாண்டக் கண்ணாடி மாளிகையும், எகிப்திய அரண்மனை "செட்"டுமே காரணமாயின. "அர்ஜுன்" என்ற மாற்று மொழிப் படத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சந்நிதி, பொற்றாமரைக்குளம், சுற்றியுள்ள நீண்ட பிரகாரம், கற்றூண்கள் என்பவற்றை 3 கோடி செலவில் "செட்" போட்டு வியக்க வைத்தார். (அந்த "செட்" படப் பிடிப்பு முடிந்த பின்னரும் மக்களின் காட்சிக்கு விடப்பட்டது). "சந்திரமுகி" திரைப்படம் 804 நாட்கள் ஓடியதற்கு நடிகர் ரஜனிகாந்தின் விம்பம் மட்டுமே காரணமன்று! தோட்டாதரணி என்ற மெய்நாயகனே (Real Hero) பிரதான பின்புலம். எனினும் இவ்வுண்மை இறுதிவரை ரசிகர்களால் உணரப்படாமை பெருஞ் சாபக்கேடாகும். இரவுக்காட்சியில் சந்திரமுகி மாளிகையின் முகப்புத் தோற்றம் திரைப்படத்தில் பல தடவை இடம்பெறுகிறது. ஒவ்வொரு தடவையும் அத்தோற்றம் ஏற்படுத்தும் நுண்ணதிர்வே மூடு மர்மத்தை அதிகப்படுத்துகிறது. மேலும் முதன்மைக் கதவும் மூடுமர்மக் கதவும் தரும் விடுப்பார்வமே கதையோடு ஒன்றச் செய்கின்றது. ரஜனிகாந்த் – வடிவேலு இருவரும் பாழடைந்த அரண்மனைக்குள் நுழையும்போது ஒளிப்பதிவாளர் High angle mid shot இல் யானைத்தந்தங்களுக்கு இடையே அவ்விருவரையும் காட்சிப்படுத்துகிறார். கணநேரமே திரையில் தோன்றி மறையும் இக்காட்சி இயக்குநர் – ஒளிப்பதிவாளர் – கலை இயக்குநர் மூவரையும் ஒரே குவிவுமையத்தில் இணைத்துள்ளது. ("சிவாஜி" படத்தில் "பல்லேலக்கா" பாடலில் இயக்குநர் – கலை இயக்குநர் – ஒளிப்பதிவாளர் மூவரும் திரையில் தோன்றும் காட்சியைப் போலல்லாது பெறுமதிமிக்கது)

கலைநேர்த்தியான வணிக சினிமாவில் பணியாற்றும் வேட்கை மிகுந்தவர் கலை இயக்குநர் பி. கிருஷ்ணமூர்த்தி! மத்வாச்சாரியார் (கன்னடம்), ஒரு வடக்கன் கதா (மலையாளம்), பாரதி (தமிழ்) ஆகிய படங்களுக்காக மூன்று முறை தேசிய விருதினைப் பெற்றவர். "நான் கடவுள்" திரைப்படத்தில் தத்ரூபமான கலை இயக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார். காசியில் அகோரியான ருத்ரனை தந்தை இனங்காணுங் காட்சியில் சுற்றிவரப் பிணங்கள் எரிந்து கொண்டிருக்கும் களம், பிதிர்க்கடன் – நீராடல் என்பன நிகழும் படித்துறை, மாற்று வலுவுடையோர் வசிக்கும் தாண்டவனின் பாதாள கூடம் போன்றன அதிர்வுகளை நிகழ்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. "பாண்டவர் பூமி" திரைப்படத்தில் செடிகள் வளர்ந்து காணப்படும் சிதைந்த வீடும், பாழடைந்த சமாதியும் நம்பகத் தன்மையோடு அமைந்துள்ளன. ஜீவலெட்சுமி யின் 3ம் வகுப்புத் தமிழ் நோட்டுக்கூட காலத் தேய்மானத்திற்குரிய நேர்த்தியோடு வெளிப்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இம்சையரசன் 23ம் புலிகேசி" திரைப் படத்திற்கு கலை இயக்கமே மிகப்பெரிய அத்திபாரம் என்பதை உணர்ந்து பங்கேற்போர் பட்டியலில் நாயகனான வடிவேலுக்கு அடுத்ததாக "கலை ஆடை வடிவமைப்பு - P. கிருஸ்ணமூர்த்தி" என இடம்பெறச் செய்த இயக்குநர் சிம்புதேவன் பாராட்டுக்குரியவர். அம்பு, வாள் என்பவற்றின் தோற்றத்தில் சிறுபிள்ளைத்தனம் தெரிந்தாலும் ஆயுத ஊழல் என்ற கருத்தியலின் பின்னணியில் அர்த்தபுஷ்டியான கலை இயக்கமாக மாறிவிடுவது அவதானத்திற்குரியது. "பாரதி" திரைப் படத்தில் பாரதியார் வாழும் வீட்டின் களம் ஏழ்மையின் அவலம் பார்வையாளனிடமும் சுவறும் வகையில் அமைந்துள்ளது. எட்டயபுரம் சமஸ்தானம், காசி, ஆலயச் சூழல், அச்சுக்கூடம், "இந்தியா" பத்திரிகையின் பிரதிகள், வீட்டிலுள்ள தளபாடங்கள், கதவு, ஊஞ்சல் என அனைத்தையும் பி.கிருஸ்ணமூர்த்தி அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

திரை விம்பங்கள் உலாவும் வெளியை கலை இயக்கத்தின் ஊடாகப் பார்வையாளரிடம் சுவறச் செய்தவர்களில் கலை இயக்குநர் T.முத்துராஜ் குறிப்பிடத்தக்கவர். "அற்புதத்தீவு" திரைப்படத்தில் வாமனபுரி அரண்மனையினையும் விநோத இருக்கைகளையும், கந்தர்வன் கோயில் சார்ந்த களத்தையும் நேர்த்தியாக வடிவமைத்துள்ளார். "இரும்புக் கோட்டை முரட்டு சிங்கம்" திரைப்படத்தில் Cowboy கதாபாத்திரங்களை தென்னிந்திய நிகழ் வெளியில் அலாதியாக நடமாட வைத்த இயக்குநர் சிம்புதேவனின் முயற்சிக்கு தக்க துணையாகியுள்ளார். மரவீடுகள், தூக்குமரம், நீதிமன்றம், தொப்பி, இரும்புப்பட்டி என அனைத்தும் cowboy கலாசாரத்திற்கு ஏற்றபடி வடிவமைக்கப்பட்டுள்ளன. "பொன்னர் – சங்கர்" படத்தில் ஏராளமான கேடயங்களும் கொம்புகுழல் வாத்தியங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. "கிரேன் ஷொட்டில்" பெரு மேளங்களின் மீது ஆடும் நடன மாதர் "சந்திரலேகா" காட்சியினை நினைவுபடுத்துகின்றனர். கணினி வரைகலைத் தொழில்நுட்பம் கைவரப்பெறாத காலத்தில் "சந்திரலேகா" வெளிப்படுத்திய பிரமாண்ட உணர்வை "பொன்னர் – சங்கர்" பாடலினால் தந்துவிட முடியவில்லை. "பழசிராசா" திரைப்படம் 1796 இன் கேரளத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. அரண்மனை, சிம்மாசனம், பாலம், கட்டில், அம்பு, வில், கேடயம், ஊஞ்சற் சங்கிலி, பல்லக்கு, குதிரை வண்டில், களரிப் பயிற்றுக்களம், பழசித் தம்பிரானின் வசிப்பிடம் அனைத்துமே நம்பகத் தன்மைமிக்க செதுக்கலாக கச்சிதமான கால வெளிப்பாட்டோடு அமைந்துள்ளன.

கலை இயக்கத்தை கலாபூர்வமான அனுபவமாகச் சுவறச் செய்பவர்களில் சமீர்சந்தாவும் விதந்து குறிப்பிடத்தக்கவர். "தசாவதாரம்" திரைப்படத்தில் 12ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுக் காட்சிகளுக்காகப் பணியாற்றியுள்ளார். (U.S.A காட்சிகளை ஆ.பிரபாகரும் ஏனையவற்றை தோட்டாதரணியும் வடிவமைத்துள்ளனர்) பெயர்த் தெடுக்கப்படும் அரங்கநாதர் சிலையும், ரங்கராஜ நம்பியை சங்கிலியோடு பிணைக்குமிடத்தில் போடப்படும் பழங்காலப் பாணியிலான பூட்டும் சமீர்சந்தாவின் திறமைக்கு தக்க சான்றுகளாகும். "இராவணன்" திரைப் படத்தில் வீரய்யன் வாழும் பகுதியும், இராமர் சிலையும் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. "ஆளவந்தானில்" பாழடைந்த வீடும் "கஜனி"யில் குறுநேர நினைவிழப்பிற்கு உள்ளான சஞ்செய் ராமசாமி (சூர்யா) வாழும் அறையும் அங்குள்ள வரைபடமும் கதைக்கு வலுச் சேர்க்கிறது. எனினும் சஞ்செய் ராமசாமி தனக்குத்தானே பச்சை குத்திக் கொள்ளுமிடத்தில் எழுத்துரு (Font) மாறுபட்ட வகையில் அமைவது முரணான கலை இயக்கமாகும். மேலும் தொழிற்சாலையில் மருத்துவ மாணவி (நயன்தாரா) கைபேசியில் உரையாடும் காட்சியில் அருகிலே சுற்றிக் கொண்டிருக்கும் சக்கரமொன்றின் குறுவட்ட நிழல்களோ அசைவின்றி காணப்படு கின்றன. இக்காட்சி கணினி வரைகலை நுட்பத்தால் சக்கரத்தின் சுழற்சி நிகழ்வதை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழ் சினிமாவின் வணிக ரீதியான வெற்றிக்குத் துணைபுரியும் முதன்மைக் கலை இயக்குநர்களில் சாபுசிரில் விதந்துரைக்கத்தக்கவர். பாய்ஸ் (Boys) திரைப்படத்தில் போத்தல், மின்குமிழ், குளிர்பான வெற்றுப்பேணி போன்ற பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட அரங்கம், "எந்திரன்" திரைப்படத்தில் உலோகத்தாலான அசையும் இரட்டைச் சிங்கம் என்பன இவரது புனைவு (Fantasy) கலை இயக்கத்திற்குச் சான்றுகளாகும். புவியியல் வெளிக்கு அந்நியமான பொருள் களை அழகியல் நோக்கில் பயன்படுத்தும் தன்மையும் இவரது பலவீனமாகும். "ரெட்" திரைப்படத்தில் தேர், "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப்படத்தில் "தெய்வம் தந்த பூவே" பாடலில் கடற்கரையிலுள்ள மரம் போன்றன புவியியற் சூழலோடு பூரணமாகப் பொருந்தாது நெருடலான கலைப் பொருளாகவே காட்சி தருகின்றன. "லேசா லேசா" திரைப்படத்தின் மரவீடும், "கன்னத்தில் முத்தமிட்டால்" படத்தில் "மாங்குளம்" மைல் கல்லும் சாபுசிரிலின் ஆளுமையின் குறிகாட்டிகளாகும்.

கலை இயக்குநர் ராஜீவன் வேட்டையாடு விளையாடு, வாரணம் ஆயிரம், விண்ணைத்தாண்டி வருவாயா என்றவாறாக இயக்குநர் கௌதம் (வாசுதேவ) மேனனின் திரைப்படங்களில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். "வேட்டையாடு விளையாடு" திரைப்படத்தில் பார்வையாளனின் கோணத்தில் நகரும் படிக்கட்டு, மாகில்ஸ் (புழுக்கள்), மண்ணுள் புதைந்திருக்கும் பிணங்கள், தொங்கவிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் என்பன கதையின் மூடுமர்மத்தினை சிறப்புற வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. "வாரணம் ஆயிரம்" திரைப் படத்தில் "முன்தினம் பார்த்தேனே" பாடலில் தமிழ்நாட்டின் பழைய பேருந்து, உந்துருளி, மகிழுந்து (Car) என்பன நேர்த்தியாக இடம்பெற்றுள்ளன.

காதல், வெயில், பூ முதலிய திரைப்படங்களில் கலை இயக்குநர் வீரசமரின் பங்களிப்பினை இனங் காணலாம். "காதல்" திரைப்படத்தில் பூப்புனித நீராட்டு விழாக் காட்சி வெகு யதார்த்தமாக இடம்பெறுவதற்கு வீரசமரின் கலை இயக்கம் உறுதுணையாகியுள்ளது. மேலும் சிறுநீர் கழிக்கும் ஓடை, "சேவல் பண்ணை" விடுதிக் காட்சிகள், உந்துருளிச் சீர்களம் என்பனவும் நம்பகத் தன்மையோடு காணப்படுகின்றன. "வெயில்" படத்தில் கிராமம் சார்ந்த காட்சிகளை அழகுற வடிவமைத்துள்ளார். உதிர்சுவர் கொண்ட பாண்டியின் வீடு, காயவைக்கப் பட்ட தீப்பெட்டிகள், சாக்குகளை உதறிக் கொண்டிருக்க எழும் தூசி அனைத்துமே அற்புதமான வகையில் பதிவாக வீரசமரின் கலை இயக்கமே கைகொடுத்துள்ளது.

மதராசப்பட்டினம், ஈ முதலிய திரைப்படங்களில் கலை இயக்குநர் செல்வக்குமாரின் காத்திரமான பங்களிப்பினை அவதானிக்க முடிகிறது. 1940 களில் சென்னை நகரை "மதராசப் பட்டினம்" வெகு நேர்த்தியாக வெளிக் கொணர்ந் துள்ளது. பழங்கால மவுண்ட் ரோட், சென்ரல் நிலையம், ட்ராம் வண்டிகள், நீராவி என்ஸின் ரயில், அன்று ஓடிய தூய நதி போன்ற அனைத்தும் வரலாற்றுக் காலப் படங்களுக்கான கனதியோடு வடிவமைக்கப்பட்டுள்ளன. "ஈ" திரைப்படத்தில் நெல்லைமணியை (பசுபதி) மறைத்து வைக்கும் பாழடைந்த மேல்மாடித் தொகுதி, மாவாட்டும் கல் என்பன செல்வக்குமாரின் கலை இயக்கத்தினை சிறப்புற வெளிப்படுத்தியுள்ளன.

1970களின் வரலாற்றைத் தத்ரூபமாக மீட்டுருவாக்கம் செய்த படமாக "பொக்கிஷம்" அமைந்துள்ளது. திண்டுக்கல் பூட்டு, பழைய பாணியிலான கீதாஞ்சலி நூல், எழுபதுகளின் நாட்குறிப்புகள், பழங்கால எழுத்துருவோடான முகப்பு அட்டை கொண்ட தமிழிலக்கிய நூல்கள், துறைமுகத் தொழிலாளியின் நீலநிறச் சீருடை (தற்போது Orange) போன்ற அனைத்துமே அற்புதமான வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கலை இயக்குநர் வைரபாலனின் ஆளுமையைப் பறைசாற்றுகின்றன.

"பொல்லாதவன்" படத்தில் (B. சாய்குமார்) பிரித்துப் போடப்பட்டிருக்கும் உதிரிப்பாகங்கள், "ஆடுகளம்" படத்தில் (ஜக்கி) சேவல் சண்டைக் களம், "தவமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமிருந்து" படத்தில் (ஜே. கே) அச்சகம், "மகாநதி" படத்தில் (ஜே. கே) சிவப்பு விளக்குப் பகுதியும், மண்ணாங்கட்டி கதாபாத்திரம் வாழும் பகுதியும், "வாகை சூடவா" படத்தில் (சீனு) செங்கற்சூளை என்பனவும் கதைக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் அலாதியாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

கலை இயக்குநருக்கு திரை விம்பங்கள் நடமாடும் காலங்குறித்த புரிதல் அவசியமானது. "உளியின் ஓசை" திரைப்படத்தில் குந்தவை நாச்சியார் தொடங்கி ஆடு மேய்க்கும் "அழகி" கதாபாத்திரம் வரை மேற்சட்டை (blouse) அணிந்து நடித்திருப்பது சோழர் காலம்சார் கருத்தியலைச் சிதைத்து விடுகின்றது. இயக்குநரும், கலை இயக்குநரும், ஆடை வடிவமைப்பாளரும் ஒத்த அலை வரிசையில் செயற்படாமையினை இத்திரைப்படம் வெளிக் கொணர்கிறது. 1980களில் நிகழ்வதாக "சுப்பிரமணிய புரம்" கதைக்களம் அமைகிறது. அறிமுகக் கலை இயக்குநர் ரெம்போன் அக்காலத்தோடு பார்வையாளன் பொருந்திப் போகும் வகையில் களத்தினை வடிவமைத்துள்ளார். எனினும் "கண்கள் இரண்டால்" பாடலில் "சோதிட நிலையம்" பெயர்ப்பலகையில் "லை" என்பது எழுத்துச் சீர்திருத்த வடிவில் அமைந்து காலக் கட்டுமானத்தைத் தகர்த்துவிடுகிறது. நுண்நோக்குடன் கலை இயக்குநர் பங்காற்ற வேண்டியது முக்கியமானதாகும். மேலும் காலத் தேய்மானங் குறித்த புரிதலும் கலை இயக்குநருக்கு இன்றியமையாததாகும். 7ஆம் அறிவு திரைப் படத்தில் போதிதர்மனால் எழுதப்பட்ட நூலானது சில நூற்றாண்டுகளின் பின்னரும் சிறு வெளித் தேய்மானங்கூட இல்லாமல் அருங்காட்சியகத்தில் காணப்படுவது நம்பகத்தன்மைக்கு முரணானது. "சிவாஜி" திரைப்படத்தில் தேநீர்க் கடையிலுள்ள சிவப்புநிறத் தொலைபேசி பளபளக்கிறது. ஏலவே பலரின் பாவனைக்குள்ளானது போன்ற தோற்றமே மேம்பட்ட கலை இயக்கம் என்பதை தோட்டாதரணி நன்கு அறிந்தவர்! எனினும் இயக்குநர் ஷங்கரின் "பளபளக்கும்" படங்களில் புத்தம்புதியவற்றைக் கையாண்டு விடுகிறார். "முத்து" திரைப்படத்தில் (கலை இயக்குநர் – மகி) "குலுவாலி" என்றெழுதப்பட்ட பெயர்ப் பலகையின் பெயின்ற் வாசம் பார்வையாளனின் நாசியிலும் வீசுகிறது. மேலும் அம்பலத்தார் பாத்திரத்தின் காரின் முகப்பிலுள்ள எருமைத்தலை அந்நியமான பொருளாகி நெருடலைத் தருகிறது. "கில்லி" திரைப்படத்தில் (கலை – மணிராஜ்) "ஆதிவாசி" என்பதை "அதிவாசி" எனக் கல்வி அறிவு குறைந்த நண்பன் எழுதியதாக நாயகனான வேலு (விஜய்) குறிப்பிடுகிறான். (ஓட்டேரி நரி என்பதும் ஒட்டேரி நரி என்றே எழுதப்பட்டுள்ளது.) வசீகரமும், வடிவ நேர்த்தியும் கலந்த "அ" என்ற எழுத்துரு தவறுகளோடு தன் பெயரை எழுதக்கூடிய ஒருவரால் எழுதப்பட்ட தல்ல என்பதைத் தெளிவாக விளக்குகிறது. (தனது பெயரின் முதல் எழுத்தை மொழியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரெழுத்தில் முதன்மையானதை – அழகிய எழுத்திலே தவறாக எழுதுவதில் தர்க்கம் இடிக்கிறது)

ஒளிப்பதிவாளருக்கும் இயக்குநருக்கும் கலை இயக்குநருக்குமான அலைவரிசை சிறப்பாக அமையும் போது தான் திரைப்படம் அற்புதமான கலையனுபவமாக வெளிப்படும். எனது சிறுவயதில் "24மணிநேரம்" திரைப் படத்தில் நடிகர் மோகன் Tea tray யின் கீழ் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியைப் பார்த்தவுடன் சிரிப்பு வந்தது. நான் திருவிழாவிலே வாங்கிய பொம்மைத் துப்பாக்கியை விட "அது" கேவலமானது. ஒளிப்பதிவாளர் அதீத அண்மைக் காட்சியில் காட்டியதால் தான் அதன் முழுவடிவமும் வெளித் தெரிந்தது. "தாண்டவம்" திரைப்படத்தில் நடிகர் விக்ரம் கையிலேந்திய நவீனரக துப்பாக்கியினையும் அதீத அண்மைக் காட்சியில் பார்த்தபோது புன்னகையினைப் புதுப்பித்துக் கொண்டேன். பார்வையாளன் நகக்கணுவைக் கூட உற்றுநோக்குவான் என்பதை நன்கு புரிந்து கொண்டே கலை இயக்குநர் செயலாற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக "கிரீடம்" திரைப்படத்தில் Motor cycle shot இல் (பாடற் காட்சியில்) த்ரிஷாவின் விரலில் நகப் பூச்சு இன்மையும் நகப்பூச்சும் அடுத்தடுத்து இடம் பெறுவது இயக்குநரால் அவதானிக்கப்படாத போதும், பன்முறை நோக்கும் பார்வையாளனின் வியூகத்தில் எள்ளலாகவே பதிவாகிவிடும். ஒப்பனையாளரின் தவறாக இருப்பினும் ஒளிப்பதிவாளரும் இயக்குனரும் விழிப்போடு செயலாற்றியிருப்பின் தேவையற்ற விமர்சனங்களைப் புறந்தள்ளியிருக்கலாம்.

வணிக வெற்றியின் சாத்தியப்பாடுகளைச் செதுக்குவதில் கலை இயக்கத்திற்குப் பெரும் பங்குண்டு. "திருடா திருடி" திரைப்படத்தில் இடம்பெற்ற "மன்மதராசா" பாடலின் நடன அசைவின் துரிதத் தன்மைக்கு, பின்னணியில் ஆடிக் கொண்டிருந்த நீண்ட கறுப்புத்துணி வலுவூட்டுவதாக அமைந்திருந்தது. கதை நிகழ்களத்தினை உயிர்ப்புடன் வெளிக் கொணரும் கலை இயக்குநர்களின் வகிபாகம் பாமர மக்களாலும் விதந்துரைக்கப்பட வேண்டும். பேரரங்கு வனப்பியலே உன்னத கலை இயக்கமென்ற மாயை தகர்ந்து, யதார்த்தவாதக் கலை இயக்கம் குறித்த விழிப்புணர்வு சுவைஞனிடமும் சுவற வேண்டும். நகரும் படிமங்கள் நம்பகத்தன்மையோடு உருவாக்கப்படுவதற்கு ஆளுமைமிகு கலை இயக்குநர்களே அத்திபாரமாக அமைகின்றனர். நுண் தரிசனத்தோடு யதார்த்தவாத கலை இயக்கத்தில் பற்றுக் கொண்ட கலை இயக்குநர்களின் வருகையே தமிழ் சினிமாவுக்கு மாறுபட்ட முகத்தினை வழங்க முனையும் என்ற நம்பிக்கையோடு நிறைவு செய்கிறேன்.

■||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிரத்னம் சினிமாவில்
## நிஜமாந்தர்களின் நிழல்

இந்திய சினிமாவின் பெருவெளியில் தனித்துவமான இயக்குநராக அடையாளப்படுத்தப் படும் மணிரத்னம் "சீரியஸான" திரைக்கதையில் சமரசப் பண்போடு ஜனரஞ்சக மசாலாக்களைக் கலந்து வெற்றியைத் தொடும் நுட்பத்தைத் தன்னகத்தே கொண்டவர். பார்வையாளன் முழுமைப் புனை வென்னும் தளத்தில் படைப்பினை அணுகுவதைத் தவிர்க்க சமகால நிகழ்வுகளிலிருந்து கதைகளை உருவி நம்பகத்தன்மையை உருவாக்க முனைகிறார். அமெரிக்க சஞ்சிகைகள் கூட மணிரத்னத்தை மதிப்பிற்குரிய இயக்குநராகக் கொண்டாடுகின்றன. தனது படங்களில் ஒளிப்பதிவு, இசை, கலை இயக்கம் போன்ற தொழில் நுட்பங்கள் மேம்பட்ட தன்மையோடு அமைய வேண்டுமென முனைப்போடு செயலாற்று கிறார். வசனமயமாதலின் பண்பினைக் குறைத்து உடல்மொழி, கமரா மொழியூடாக கதையினை நகர்த்தி மாறுபட்ட இயக்குநராகவே தன்னை இனங்காட்ட முயல்கிறார். நடிக நடிகையர் மணிரத்னம் படத்தில் நடிப்பதைப் பெருங் கொடுப்பினையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றனர். மிகை ஊதியத்தை குறைத்துக் கொள்ளவும் தயாராகின்றனர். போலிப்பட்டங்களை துறந்தே மணிரத்னத்தின் படைப்பில் பங்காற்றமுடியும். Super Star, இசைப்புயல், கவிப்பேரரசு என்ற அர்த்தமற்ற கிரீடங்களை கழற்றி வைத்துவிட்டு ரஜனிகாந்த், A.R.ரகுமான், வைரமுத்து என்னும் அறிமுகத்தையே பங்கேற்போர் பட்டியலில் வழங்குவார். கோடம்பாக்கத்துக் கோமாளிகளோடு (பாலா, செல்வராகவன் போன்ற சிலரைத் தவிர்த்து) ஒப்பு நோக்கினால் மணிரத்னத்தின் படைப்புலகம் அலாதியானது. எனினும் உலகத்தரமான இயக்குநர்களின் வரிசையில் வைத்துப் பார்க்கும் போது மணிரத்னம் புள்ளியாகிச் சுருங்கிக் கண்களுக்குப் புலப்படாது போய் விடுவதென்னவோ உண்மைதான் !.

அகன்ற அறிமுக வீச்சுடைய நபர்களின் வாழ்க்கைச் சம்பவங்களின் சாயலில் புனைவுகளைச் செதுக்கும் பாணியை மணிரத்னத்தின் சில சலன படிமங்களில் இனங்காண முடிகிறது. இருவர், பம்பாய், ராவணன், குரு, நாயகன் ஆகிய படங்களில் இப்பண்புகளைத் தரிசிக்கலாம்.

அ) எம்.ஜி.ஆர் – கருணாநிதி

"இது உண்மைக் கதை அல்ல" என்ற அறிமுகத்தோடு நகரும் "இருவர்" திரைப்படம் எம்.ஜி.ராமச்சந்திரன், மு.கருணாநிதி என்னும் இருவரது வாழ்விலும் நிகழ்ந்த சம்பவங்களை புனைவு கலந்து விவரிக்கின்றது. பார்வையாளனை எந்த விதத்திலும் சலனப்படுத்தாத சுவாரஸ்யமற்ற நிகழ்வுகளை மீட்டெடுத்ததால் வணிக ரீதியிலும் தோல்வி கண்டது. திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சியில் திரைக்கு வரும் சினிமாவில் கருணாநிதி குறித்த பாத்திரவார்ப்பு வணிகத் தோல்வியை எதிர்கொள்ளும் சாத்தியப்பாடும் அதிகம் உண்டு. (முதல்வரைக் "கூலிங்கிளாஸ்" சகிதம் காட்சிப்படுத்தி அப்பட்டமான சில உண்மைகளை வெளிப்படுத்தியதால் இயக்குநர் சேரனின் "தேசிய கீதம்" வசூலில் தோல்வியடைந்ததைக்கண்ட இயக்குநர் சங்கர் "இருக்கு ஆனால் இல்லை" என்ற ரகத்திலான கருணாநிதியை "முதல்வன்" படத்தில் இனங்காட்டி வணிகத் தோல்வியில் இருந்து தப்பித்தார். சொத்துக் குவிப்பு ஊழல் – திருக்குறள் என்பவற்றில் கருணாநிதி இருக்கிறார். ஒப்பனை, உடல்மொழி என்பவற்றில் இல்லை.)

சினிமாவில் நாயகனான நடிக்கும் கனவோடு ஆனந்தன் (படத்தில் மோகன்லால் – நிஜத்தில் எம்.ஜி.ஆர்) சென்னை வருகிறான். எனினும் முதற்படத்தில் "பொலிஸ் கொன்ஸ்டபிள்" வேடமே கிடைக்கிறது. எம்.ஜி.ஆரின் முதற்படமான "சதிலீலாவதியில்" அவருக்கு கொன்ஸ்ரபிள் வேடம் தான்! கவிஞரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்பட வசனகர்த்தாவுமாகிய தமிழ்ச்செல்வத்தின் (படத்தில் பிரகாஸ்ராஜ் – நிஜத்தில் கருணாநிதி) நட்பு ஆனந்தனுக்கு கிடைக்கிறது. தமிழ்ச்செல்வம் அரசியலில் தீவிர வேட்கை மிகுந்தவன். ரெயின் மறிப்புப் போராட்டத்தில் ஈடுபாட்டுக் கைதாகின்றான். இக்காட்சி கல்லக்குடியில் நடந்த கருணாநிதியின் போராட்டத்தைச் சுட்டுகின்றது. தமிழ்ச்செல்வம் சடங்குகளை மறுதலித்து சீர்திருத்த திருமணம் புரிகின்றான். மனைவியோடு வாழும் காலத்தில் வேறு ஒரு பொண்ணோடும் தாம்பத்தியம் நிகழ்த்துகிறான். அப்பெண்ணுக்கு பிறந்த குழந்தை யிடம் எதிர்காலத்தில் "கவிதாயினி"யாகும் சமிக்ஞைகள் தென்படுகின்றன.

ஆனந்தன் கதாநாயகனாகப் பிரபலமானபின் வேலுத்தம்பியின் (படத்தில் நாசர் – நிஜத்தில் அண்ணாத்துரை) அரசியல் கட்சியில் இணைகிறான். 1952இல் எம்.ஜி.ஆர் தி.மு.க வில் சேர்ந்தார். முதல் மனைவியின் மரணம் நிகழ்ந்த பின்னர் ஆனந்தன் இன்னொரு பெண்ணை (படத்தில் கௌதமி – நிஜத்தில் ஜானகி) திருமணம் செய்கிறான். அடக்கமின்மையும், சுயகௌரவமும், துடிப்பான பேச்சும், படித்த திமிரும் ஒன்றிணைந்த நடிகையான கல்பனா மீது (படத்தில் ஐஸ்வர்யா ராய் நிஜத்தில் ஜெயலலிதா) ஆனந்தனுக்கு காதல் மலர்கிறது. கல்பனா, ஆனந்தனின் அரசியல் கனவின் எல்லைகளை அகலப்படுத்துகிறாள். தாலி கட்டிக்கொள்ள ஆசைப்பட்டும் வைப்பாட்டியாகவே வாழுகிறாள். தமிழ்ச்செல்வம் முதல்வரான பின் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்களால் ஆனந்தன் கட்சியிலிருந்து நீக்கப்படுகிறான். உடனே புதியகட்சியைத் தொடங்குகிறான். 1972 இல் தி.மு.க நீக்கியதால் அதே வருடம் எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. கல்பனா திட்டமிட்டு ஓரங்கட்டப்படுகிறாள். ஆனந்தனின் புதிய கட்சி தேர்தலில் அமோக வெற்றி பெறுகிறது. ஆனந்தன் மரணம் வரைக்கும் முதலமைச்சராகவே வாழ்கிறான். (1974 இல் ஆட்சியைக் கைப்பற்றிய எம்.ஜி.ஆர் 1987 இல் அமரராகும் வரை முதலமைச்சராகவே இருந்தார்.) ஆனந்தனின் மரணத்திற்காக தமிழ்ச்செல்வம் துயர் கொண்டு தனிமையில் இரங்குவதோடு படம் முடிகிறது.

"இருவர்" திரைப்படத்தில் அரசியல் குறித்த கூர்மையான விமர்சனங்கள் முன்வைக்கப்படவில்லை. அண்ணாத்துரை எம்.ஜி.ஆருக்கு கட்சியில் "ஆசனம்" கொடுத்ததைக் கருணாநிதி துளியும் விரும்பவில்லை என்ற வரலாற்றை நெற்றிப் பொட்டில் அடித்தாற் போலச் சொல்லாமல் தமிழ்ச்செல்வனின் (கருணாநிதியின்) நட்புரையாகப் பூசி மெழுகுவது படு அபத்தம்! தி.மு.க ஆட்சியில் வெளிவந்ததால் (அ.தி.மு.க ஆட்சியில் "ஆனந்தன்" என்ற பெயரில் தயாரான படம், ஆட்சி மாறியதால் "இருவர்" ஆனது) கருணாநிதியைத் திருப்திப்படுத்தும் வகையில் காட்சிகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனங்களையும் வெளிப்படுத்தியுள்ளது. எம்.ஜி.ஆர் – கருணாநிதியின் பாலியல் நாட்டம் பார்வையாளர்களுக்குப் பரிச்சயமான செய்தி என்பதால் நமத்துப்போன தீக்குச்சியாகி விட்டது. முதல்வர் நாற்காலியை தமிழ்ச்செல்வம் வருடும் தருணத்தில் கருணாநிதியின் பதவி ஆசை "பளிச்சென" பதிவாகியுள்ளமையைப் பாராட்டலாம். எம்.ஜி.ஆர் சுடப்பட்ட நிகழ்வை அரசியலாக்கி இலாபமடைந்த தி.மு.க வின் தந்திரம், எம்.ஜி.ஆரின் விம்பத்தை சுயலாபத்திற்கு பயன்படுத்திவிட்டு தூக்கி எறிந்த இழி செயல் போன்றன ஓரளவு இயல்போடு வெளிப்பட்டுள்ளன. மிகப்பெரிய விரோதிகள் இருவருக்கிடையிலும் உட்சரடாக நட்பு இறுதிவரை தொடர்ந்தது என்னும் மாயையை ஏற்படுத்தி இயக்குநர் வரலாற்றுத் திரிபு வாதத்தை நிறுவியுள்ளார். கருணாநிதியின் சாணக்கியத்திற்கு நட்பு முலாம் பூசுவது ஆளுமைமிக்க படைப்பாளிக்கு ஏற்புடையதன்று!

ஆ) பால் தாக்கரே



பாபர் மசூதி இடிப்பினையும், தொடர்ந்து நிகழ்ந்த மும்பை மதக்கல வரத்தையும் மதநல்லிணக்க திருமண உறவின் பின்புலத்தில் அணுகிய படைப்பாக "பம்பாய்" அமைந்துள்ளது. படத்தில் நடிகர் டினு ஆனந்த் ("நாயகன்" படத்தில் மணிரத்னத்தின் அறிமுகம்) பால் தாக்கரே வேடத்தில் நடித்துள்ளார். நிருபரான கதாநாயகன் (அரவிந்த் சாமி) பால்தாக்கரேயிடம் பேட்டி காணும் போது வெளிப்படும் கருத்துகளூடாகவும், பிணங்களின் பரவலாக்கம் மிகுந்த தெருவை நோக்கும் பால்தாக்கரே முகத்தில் அவலம் தோன்றும் காட்சியூடாகவும் தாக்கரே குறித்த பதிவை "பம்பாய்" திரைப்படம் வெளிப்படுத்தியுள்ளது.

மும்பைக்கலவரத்திற்கு சிவ சேனாக்கட்சியின் அதிகார பூர்வ இதழான சாம்னாவில் எழுதப்பட்ட கட்டுரைகளும். தலையங்கங்களுமே பின்னணி என்பது அப்பட்டமான உண்மையாகும். சர்ச்சைகளைக் கிளப்புவது பால்தாக்கரேக்கு சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுவது போல இனிமையான விடயம். ஈழத்தமிழர்களை பால்தாக்கரே அதிகமாக நேசித்தார் என்பதும் மனங்கொள்ளத்தக்கதே! இறுதிவரை அவருக்கு நிழல் போலிருந்த ஆறு மெய்க்காப்பாளர்களும் ஈழத்தமிழர்களே! அத்வானி துணைப்பிரதமராக இருந்த காலத்தில் "காஷ்மீர் தீவிரவாதிகளை அடக்க விடுதலைப் புலிகளை அழைத்து வாருங்கள்" என்று கூறி சர்ச்சையினை ஏற்படுத்தினார். சிவசேனாக்கட்சியின் தலைவரான பால்தாக்கரேயின் நிஜமுகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிரத்னம் வெளிக்காட்டத் தயங்கியுள்ளார். "பம்பாய்" படத்தினைப் பார்த்த தாக்கரே "படத்தில் கலவரத்துக்காக நான் வருந்துவது போல ஒரு காட்சி வருகிறது. அது உண்மையல்ல. நான் எதற்காகவும் வருந்தவில்லை. கலவரத்தை சிவசேனை ஆரம்பிக்கவில்லை. நாங்கள் பதிலடி கொடுத்தோம்" (Times of India - March 31-1995) என்று பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மும்பைக்கலவர வழக்கு நீதி மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் "பம்பாய்" வெளிவர பால்தாக்கரே குறித்த தீர்ப்பை மணிரத்னமே வழங்கிவிட்டார். ஆனால் மும்பைக் கலவரம் குறித்து நியமிக்கப்பட்ட நீதிபதியான ஸ்ரீ கிருஷ்ணா ஆணைய அறிக்கை பால்தாக்கரே தான் கலவரத்திற்கு காரணமென்பதை வெளிப்படுத்திவிட்டது. மணிரத்னமோ அவசரப்பட்டு தவறான தீர்ப்பை வழங்கிவிட்டார்.

இ) வீரப்பன்

இராமாயணக்கதைப்பிரதியின் வாசிப்பாக "ராவணன்" திரைப்படம் அமைந்துள்ளது. ஏற்கெனவே கர்ணன் கதையினை "தளபதி"யிலும் சத்தியவான் – சாவித்திரி கதையினை "ரோஜா"விலும் நுழைத்து வணிக வெற்றி கண்டவர்! (கர்ணன் கதாபாத்திரம் கதைப்படி இறந்ததால் ரஜனிகாந்த் ரசிகர்கள் கொதித்து அரங்குகளில் திரைகளை கிழிக்க, ரஜனிகாந்திற்கு மீள உயிர் கொடுத்து இறுதி காட்சியை மாற்றியமை யாவரும் அறிந்ததே!)

வீரய்யா(விக்ரம் – இராவணன்) சிங்கம் (பிரபு – கும்பகர்ணன்) வெண்ணிலா (ப்ரியாமணி – சூர்ப்பனகை) தேவ் பிரகாஷ் (பிருத்விராஜ் – இராமன்) ராகினி (ஐஸ்வர்யாராய் – சீதை) ஆகிய முதன்மைப் பாத்திரங்களையும் பல்வேறு துணைநிலைப்பாத்திரங்களையும் உள்ளடக்கி "ராவணன்" கதை நகர்த்தப் பட்டுள்ளது.(குரங்குச் சேஷ்டை புரியும் பாத்திரம் – நடிகர் கார்த்திக்– அனுமான் என்பதையும் இத்தால் சலிப்போடு அறியத்தருகிறேன்)

இராமாயணத்தையும் தாண்டிப் பிறிதொரு பிரதியும் கதையில் புதைந் துள்ளது. வீரய்யா கதாபாத்திரம் சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பனைக்குறித்து நிற்கிறது. இயக்குநர் மணிரத்தினம் பழங்குடியினரின் வாழ்வை அதிகார வர்க்கம் சிதைப்பதை உள்ளடக்கமாக்க முயன்று, பின்னர் காதலென்ற மாற்று திசையிலே பயணித்துத் தோற்றுப்போயுள்ளார். திராவிட இறும்பூது மிகுந்த ஒரு சாரார் வீரப்பனை யுக புருஷனாகவே கருதுகின்றனர். சாரசரித் தமிழனை தனிக்காட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜாவாக்கியதில் அதிகார வர்க்கத்திற்கு கணிசமாக பங்குண்டு. பூர்வீக குடிகள் அதிகார வர்க்கத்தின் கூலிகளான காவற் படையினராலும் எதிர் விம்பமாக விஸ்வரூபமெடுத்த வீரப்பனாலும் பல துன்பங்களைச் சந்தித்தனர். எனினும் "ராவணன்" ஆதிவாசிகளின் அவலங்களைப் புறந்தள்ளிவிட்டு மாற்று திசையில் பயணித்துள்ளது. ஆதிவாசிகள் மீதான காவற்படையினரின் வன்புணர்வு உட்பட கொடூரமான நிகழ்வுகளை சிறிதளவே வெளிக்காட்டியுள்ளது. திரைப்படத்தில் வீரய்யன் தன் தம்பியான முன்னாவை சமரசப்பேச்சுக்கு அனுப்புகிறான். காவலதிகாரியான தேவ்பிரகாஷ் நம்ப வைத்து ஏமாற்றி முன்னாவைக் கொல்கிறான். நிஜத்தில் வீரப்பனின் தம்பியான அர்ஜுனனை சமரசப்பேச்சுக்கு அனுப்பியபோது காவல் துறையினர் வஞ்சகமாகக் கொன்று விட்டனர்.

ஈ) திருபாய் அம்பானி

திருபாய் அம்பானி இந்திய வணிக சந்தையில் உச்சஸ்தானத்தை அடைய மேற்கொண்ட பிரயத்தனங்களை விளக்குவதாக "குரு" திரைப்படம் அமைந்துள்ளது. சாருநிவேதிதா, சுஜாதா போன்றோர் "குரு"வை உலகத்தரமான படைப்பு என்று சுட்டுகிறார்கள். பள்ளி ஆசிரியரின் மகனான குருநாத்தேசிகன் (அபிஷேக் பச்சன்) திருநெல்வேலி இலஞ்சிக் கிராமத்திலிருந்த துருக்கிக்கு வேலை தேடிச் செல்கிறான். நிஜத்தில் பள்ளி ஆசிரியரின் மகனான திருபாய் அம்பானியும் குஜராத் கிராமத்திலிருந்து ஏமனுக்கு பதினாறு வயதிலே பிழைப்புத் தேடிச் சென்றார். "குரு" படத்தில் நாயகன் சில காலங்கழித்து இந்தியா திரும்பி வந்து 15000ரூபா



முதலீட்டுடன் சுய தொழில் வேட்கையோடு துணி வியாபாரத்தை தொடங்குகிறார். அம்பானியும் ஏமனில் பத்து வருடங்கள் தொழில் புரிந்து விட்டு இந்தியா வந்து 15000 ரூபாவோடு தான் துணிவியாபாரத்தை ஆரம்பித்தார். (மரணிக்கும் போது 75000கோடி உழைத்திருந்தார்.) குருநாத் தேசிகன் "சக்தி குரூப் ஒஃப் இன்டஸ்ற்றீஸ்" நிறுவனத்தை தொடங்கி (அம்பானி ரிலையன்ஸ் நிறுவனத்தை ஆரம்பித்தார்) சட்டங்களை சாதகமாக்கி துரித வளர்ச்சியடைகிறான்.

சுதந்திரமணிப் பத்திரிகை ஆசிரியர் (மிதுன் சக்கரவர்த்தி) குருபாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப வளர்ச்சிக்கு உதவினாலும், நியாயமற்ற செயற்பாடுகளால் கோபமுற்று எதிர்க்கட்டுரைகளை எழுதுகிறார். நிஜத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியரை இப்பாத்திரம் இனங்காட்டுகிறது. மேலும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் எஸ்.குருமூர்த்திக்கும் திருபாய் அம்பானிக்குமான நிஜ மோதலின் சுவாரஸ்யம் வர்த்தக உலகில் அலாதியானது! சியாம் (மாதவன்) என்ற பாத்திரம் குரு படத்தில் எஸ்.குருமூர்த்தியைச் சுட்டுகிறது.

இந்திய மேலாண்மையின் குறைபாடுகளை நுட்பமாக இனங்கண்டு தனது வணிகத்திற்கு சாதகமாகப் பயன்படுத்தி முன்னேறிய அம்பானியின் மக்கள் விரோத மனப்பாங்கை கண்டிக்காது பாராட்டுவது போலவே குரு படம் அமைந்துள்ளது. இந்தியாவில் ஒரு நிறுவனத்தின் ஒன்று கூடல் முதன்முதலாகப் பொது வெளியில் நிகழ்தல், குருபாய்க்கு பக்கவாதம் ஏற்படல் போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் திருபாய் அம்பானியின் வாழ்வோடு நன்கு பொருந்தி அமைகின்றன.

உ) வரதராச முதலியார்

மும்பை மண்ணில் தாதாவாக வாழ்ந்த தமிழரான வரதராச முதலியாரின் வாழ்வைப் புனைவுகளோடு வெளிப்படுத்துவதாக "நாயகன்" திரைப்படம் அமைந்துள்ளது. மரியபூசோ எழுதிய நாவல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு Francis Ford Coppola இயக்கிய The God Father திரைப்படத்தின் பாதிப்பும் இப்படத்தில் வெளித்தெரிகிறது. மார்லன் பிராண்டோ ஏற்று நடித்த vito Corle one கதாபாத்திரத்தின் தாக்கத்தினை கமல்ஹாசனின் வேலுநாயக்கர் பாத்திரத்தில் உணர முடிகின்றது.

நாயகனில் சிறு வயதில் தூத்துக்குடியில் இருந்து மும்பைக்கு வரும் சக்திவேலுவிற்கு தாராவிப்பிரதேச இஸ்லாமியர் அடைக்கலம் கொடுக்கிறார். வரதராச முதலியாரும் சின்னவயதில் சென்னையில் இருந்து மும்பை சென்று தாராவிப்பிரதேசத்திலே தான் வாழ்ந்தார். காவல்துறையினரின் செயற்பாடுகளும் தாராவிப் பகுதி நிலவுரிமைச் சிக்கலும் "நாயகன்" சக்திவேலை வேலுநாயக்கர் என்ற தாதாவாக்குகிறது. நிஜத்தில் ரயில்வே ஊழியர்களும் தாராவிப்பகுதி நிலவுரிமைச்சிக்கலுமே "வரதபாய்" என்ற தாதாவை உருவாக்கின. "நாலுபேருக்கு நல்லது பண்ணினா எதுவுமே தப்பில்லை" என்ற சித்தாந்தத்தோடு தாராவிப்பகுதி மக்களுக்கு உதவும் நோக்கில் வேலுநாயக்கர் தாதாவாக வாழ்கிறார். (வரதராச முதலியாரிடமும் சில நியாயங்கள் இருந்தன! மகளிரின் விருப்பிற்கு மாறான பாலியல் வன்முறையை அனுமதித்ததில்லை. தனிப்பட்டநபர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளையிட்ட தில்லை.) ஒவ்வொரு ஆண்டும் மாதுங்காவில் கணபதி விழாவை வரதராச முதலியார் சிறப்பாகநடத்தினார். "நாயகனில்" வேலுநாயக்கர் கணபதி விழாவில் கலந்து மக்களுக்கு உதவிகளை வழங்குகிறார். மேலும் வேலுநாயக்கர் தமிழ்நற்பணிமன்றம் ஊடாக நூலகம், நோயாளர் காவு வண்டி போன்ற வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறார். நிஜத்தில் வரதராச முதலியார் தமிழர் பேரவை என்ற அமைப்பினை நிறுவி பல நலத்திட்டங்களைப் புரிந்தார். (1983 யூலைக்கலவரத்தைக் கண்டித்து மும்பையில் 1984 இல் பேரணியை நடத்தி இலங்கைத்தூதரகத்தில் மனுக்கொடுத்தார். தமிழர் பேரவை ஈழத்தமிழர்களுக்காக நிதி சேகரித்து அனுப்பியது.)

"நாயகன்" படத்தின் இறுதியில் வேலுநாயக்கர் மீது நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது. நிரபராதியாக வெளியே வரும் வேலுநாயக்கரை தந்தை கொலைக்கு பழி தீர்க்க உடனிருந்த பாதுகாப்பாளியே சுட்டுக் கொல்கின்றான். தமிழர் பேரவை நடவடிக்கைகளால் " தாதா" அடையாளம் அகன்று "தமிழன்" என்ற முத்திரை விஸ்வரூபம் கொண்டதால் மும்பைக்காவற்படை வரதராச முதலியாரைத் தேடியது. இறுதி நாட்களில் தலைமறைவு வாழ்விற்குள் தள்ளப்பட்டார்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனதியான முயற்சிகளின் கால்கோள்

## – பதேர் பாஞ்சாலி –

> சத்யஜித்ரேயின் படங்களை பார்க்காமல் இருப்பது இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே சூரியனையும் சந்திரனையும் பார்க்காமலே இருப்பதற்கு சமம்.
>
> – அகிராகுரோசேவா–

இந்தியப் புனைவு சினிமாவின் தளத்திலிருந்து பூரணமாக புறமொதுங்கி தூய யதார்த்த உலகை நேர்த்தியான திரைக்கதையூடாக வெளிக் கொணர்ந்த முதல் முயற்சியாக "பதேர் பாஞ்சாலி" அமைந்துள்ளது. இயக்குநர் சத்யஜித்ரே நிகழ்த்திய அதிர்வு சாமான்யமானதன்று. நாலாந்தர சினிமாவின் மைய நீரோட்டத்திலிருந்து விடுபட்டு. பிராமணக் குடும்பமொன்றின் வாழ்வியற் போராட்டத்தினையும் சிதிலமடையும் கனவுகளையும், மகிழ்நெறி பயணிக்கும் குழந்தை உலகத்தினையும் அதிக பட்ச சாத்தியங்களோடு துல்லியமாகச் சித்திரித்துள்ளார். நாளாந்த சிக்கல்களிலிருந்து குறுநேரமாவது மீட்சி பெற (ESCAPISM) உதவும் புகலரண் என்று கருதப்பட்ட சினிமாவின், இன்னொரு முகத்தினை பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளனுக்கு அறிமுகப்படுத்தினார். இந்திய சினிமாவின் அகல்வெளியில் இதுவரை நிகழ்ந்துள்ள கனதியான முயற்சிகளின் கால்கோளாக பதேர் பாஞ்சாலியே திகழ்ந்தது என்றால் அபரிமிதமாகாது.

விபூதி பூஷன் பானர்ஜி எழுதிய பதேர் பாஞ்சாலி நாவலின் முற்பகுதியை மையமாகக் கொண்டு 1955இல் வங்க மொழியில் உருவாக்கப்பட்டுள்ளது. (நாவலின் ஏனைய பகுதிகளை அபுராஜிதோ, அபுசன்சார் என்றவாறாக "ரே" திரைப்படமாக்கியுள்ளார்.) வங்கத்திலுள்ள நிஷின் தபூர் என்னும் கிராமத்தின் பிராமணக் குடும்பமொன்றின் வறுமை படர்ந்த வாழ்வின் வலியை நம்பகத் தன்மையோடு "பதேர் பாஞ்சாலி" வெளிக்கொணர்ந்துள்ளது. ஹரிஹர் என்ற பிராமணர், அவரது மனைவியான சர்போஜயா, பிள்ளைகளான துர்கா, அபு மற்றும் தூரத்து உறவுக்காரக் கிழவியான பிஷி என்போரைச் சுற்றி நகரும் யதார்த்த நிகழ்வுகளின் திரை வடிவமாக அமைந்துள்ளது. ஏழ்மையில் வாழுகின்ற தம்பதிகளான ஹரிஹர் – சர்போஜயாவை பிஷி என்ற கிழவி அண்டி வாழ்கிறாள். பிஷியின் நட்பினால் மகளான துர்கா துர்நடத்தைகளுக்கு உள்ளாகி விடுவதால் சர்போஜயா, பிஷியை வீட்டைவிட்டு துரத்துகிறாள். எனினும் சர்போஜயாவிற்கு மற்றொரு குழந்தை பிறக்கும் காலத்தில் பிஷி மீளவும் வந்து ஒட்டிக்கொள்கிறாள். அபு சிறுபராயமடையும் போது சகோதரியான துர்காவோடு சேர்ந்து குழந்தை உலகின் கொண்டாட்டங்களை நுகர்கிறான். பிஷியின் மரணத்தை அடுத்து ஹரிஹர் தொழில் நாடி வெளியூர் செல்கிறார். மழையில் நனையும் துர்கா காய்ச்சலால் மரணமடைகிறாள். அந்நாளில் வீசிய புயலால் அவர்களது வீடும் சிதைகின்றது. மகளின் மரணத்தை அறியாத ஹரிஹர் அவளுக்கு புத்தாடை வாங்கிக் கொண்டு வெளியூரிலிருந்து திரும்புகிறார். அனைத்தையும் அறிந்து துன்புற்று தன் குடும்பத்தோடு காசிக்கு செல்வதோடு படம் நிறைவடைகிறது.

எண்பது அகவையுள்ள கூன் விழுந்த கிழவியான பிஷி கதாபாத்திரம் பார்வையாளனிடம் பேரதிர்வினை நிகழ்த்துகிறது. கிழவியின் ஒவ்வொரு அசைவும் நுணுக்கமாக படமாக்கப்பட்டுள்ளமை வியப்பினைத் தருகிறது. சத்யஜித்ரே என்ற மாபெரும் கலைஞனின் மேதமையை ஒவ்வொரு கதா பாத்திரமும் உறுதிப்படுத்துகின்றன. "அறவொழுக்க நோக்கு (moral attitude) என்னிடம் உண்டு. அந்தநோக்கு எனது திரைப்படங்களில் பிரதிபலிக்கப்படுகின்றது. நேர்மை போன்ற அடிப்படையான நல்லொழுக்கங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு" என்று "ரே" செவ்வி ஒன்றில் (News week June 16–1986) குறிப்பிட்டுள்ளார். சர்போஜயா(kanu Banerjee) என்ற கதாபாத்திரம் "ரே"யின் நேர்மை சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளப்பாங்கினை வெளிப்படுத்துகின்றது. துர்கா (umadas Gupta) கொய்யாக்கனி, மணிமாலை, பாகு போன்றவற்றை திருடும் சந்தர்ப்பங்களில் தாயார் மனவேதனை யடைகிறார். வறுமைச் சூழலில் தன்னிலையில் தாழாமல் பாத்திரங்களைவிற்று அரிசி முதலியன வாங்குகிறார்.


இயல்புநிலையில் நெருடலற்ற நுட்பத்தோடு துர்கா காட்சிப்படுத்தப் பட்டுள்ளாள். துர்கா அறிமுகமாகும் காட்சியில் ஒலிக்கும் ரவிசங்கரின் கிதார் இசை அபாரம்! மூங்கிற் காடுகளிடையே துர்கா பயணிக்கும்போது மாறுபட்ட குழந்தை உலகினுள் பார்வையாளனும் நுழைகிறான். அவள் மழையில் நனைகையில் பார்வையாளனிடமும் ஈரம் சுவறுகிறது. சத்யஜித்ரேயால் மட்டும் இது எப்படி சாத்தியமாயிற்று என பலமுறை எண்ணி வியந்திருக்கிறேன். துர்கா மரணிக்கும் போது போலி உணர்ச்சித் தொற்றலின்றி ஆழ்மனத்தை ஊடறுத்து நிரந்தரமாகத் தங்கிவிடும் மாறுபட்ட உணர்ச்சியையே அடைகிறோம்.

அபு (Subir Banerjiee) தருகின்ற மனவிரிவு அலாதியானது. துர்காவின் மரணத்தின் பின்னரான அவனது ஒவ்வொரு நடவடிக்கையும் ஆழமான தத்துவச் சாரலை தூறிச் செல்கிறது. இறுதியில் சிதிலமடைந்த வீட்டினுள்ளே பாம்பு நுழையும் காட்சி நுட்பமான வாழ்வியல் அபத்த நிகழ்தகவை ஆளுமையோடு இனங்காட்டுகிறது. ஹரிஹகர்(Kanu Banerjee) குடும்பத்தோடு ஊரை விட்டுச் செல்லும்போது மாட்டுவண்டியின் கீழே ஆடுகின்ற "ஹரிக்கேன்" விளக்கு துன்பியல் கவிதையாக ஒளிர்கிறது. "பேய் அடிப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதே உக்கிரத்தோடு ஒரு படம் கூட அடிக்கும் என்பதை அன்று தான் உணர்ந்தேன். பதேர் பாஞ்சாலி என்னைப் பலமாக அடித்தது. அதன் தாக்கத்திலிருந்து இன்றுவரை என்னால் வெளியே வர முடியவில்லை" என்று இயக்குநர் பாலுமகேந்திரா குறிப்பிட்டுள்ளமையும் அவதானத்திற்குரியது.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கனவுருவ வரைபுகளால் கருத்தியல் திருட்டு

அனைத்துக் கலைச் செயற்பாடுகளிலும் வணிகமயமான தயாரிப்பு முயற்சி தீவிர நுண் கட்டுருவாக்கப் படைப்பு என்னும் இரட்டை நிலையினை அவதானிக்கலாம். வணிக நடுவண் வித்தைக்குள் தரமான கலைப்படைப்பு அந்தஸ்தை நுழைக்கச் செய்யும் போலி மேற்பூச்சு வேலைப் பாடுகள் சில சந்தர்ப்பங்களில் விமர்சகர்களை ஏய்த்து விடுவதுமுண்டு. அந்த வகையில் Inception என்ற ஆங்கில அதிரடி வணிக சினிமாவை உளவியற்படிம மாக வேதியல் மாற்றம் செய்து ஆய்வுக்குட்படுத்தி விமர்சிப்பது படு அபத்தமாகவே தோன்றுகிறது. இணையத் தளத்தில் Inception குறித்து நூற்றுக் கணக்கான உயர்வு நவிற்சிக் கட்டுரைகள் விரவி யுள்ளன. தமிழில், ஆபிரிக்காவில் வாழும் ஆனந்த் அண்ணாமலை என்ற தமிழ்ப் பதிவர் நேர்த்தியான கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

குழுவாக ஒருவரின் கனவுள் நுழைந்து கருத்தியலை மறு அமைப்பாக்கம் செய்தலே Inception



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தின் கருவாகும். இயக்குநர் Christopher Nolan கனவை நெருங்கும் விதத்திலுள்ள தர்க்கம் பலவீனமானது. நிறைவேறாத வேட்கைகள் மனித உளத்தின் அடியாழத்தில் உறைந்து கிடக்கின்றன. அவை உறக்கத்தில் மூளையின் மெது இயக்கத்தில் – புறத்தூண்டலற்ற தருணத்தில் – வீரியங் கொண்டு வெளிக் கிளம்புகின்றன. இந்நிகழ்வையே நாம் கனவு என்கின்றோம். கிறிஸ்ரோப்பர் நோலனின் திரைக்கதையை நுணுகி நோக்கினால் கனவுலகில் விதைக்கப்படும் "Idia" நனவுலகில் மாறாப்பெறுமானத்தை உடையதாக இருக்க வேண்டுமென்ற எடுகோள் உட்புதைந்துள்ளமையை உய்த்துணரலாம். இவ்வெடுகோளின் சாத்தியப் பாடே நோலனின் புரிதலை கேள்விக்குரியதாக்கி விடுகிறது. கிறிஸ்ரோப்பர் நோலனின் கோணத்திலே "சிங்கம் ஒரு தாவர பட்சணி" என்ற கருத்தியலை ஒருவரின் கனவிலே விதைத்தால். அவர் நிஜ உலகிலும் அதனை நம்பி விடுவார். எனினும் தர்க்க ரீதியாக யோசித்தால் குறித்த நபர் சிங்கம் ஊன் உண்பதை காணும் வரையே அக்கருத்தியலை நம்புவார். சிங்கம் மாமிச பட்சணி என்ற புரிதல் வேறு வகையில் கிடைப்பினும் கனவில் விதைத்த கருத்தியல் காலவதியாகிவிடுமே! சிங்கத்தின் உணவுமுறை குறித்த அறிவு கிடைக்காத பட்சத்தில் Nolan விதைக்கும் கருத்தியல் வெற்றியடையுமே என்று விவாதித்தாலும் கூட சிங்கத்தோடான தொடர்பு என்றுமே கிடைக்காத சந்தர்ப்பமுள்ள விடய மொன்றுக்கான கருத்தியல் விதைப்பு Nolan கோணத்தில் அவசியமற்றது என்பதும் அவதானத்திற்குரியது.

Inception திரைப்படத்தில் கனவைக் கட்டமைக்கும் குழுமத்தின் தலைவனான கோப் (Leonardo Di Caprio) சைாடோவின் (Kenwatanabe) கனவுள் நுழைந்து மறைப்பொருளைக் களவாட முயன்று மாட்டிக் கொள்கிறான். "கோப்" பின் திறமையைப் பயன்படுத்தி தனது தொழில் நிறுவனத்தை உலகின் முதற்தரத்திற்கு உயர்த்த சைடோ திட்டமிடுகிறான். அதன்படி தனது தொழில் எதிரியான ஃபிஷ்சரின்(cillian Murphy) கனவுட் புகுந்து மாற்றுத் தொழில் நாடும் கருத்தியலை விதைக்குமாறு வலியுறுத்துகிறான். கோப், சைடோ, ஆர்தர் (Joseph Gardon Levitt) அரியாட்னா (Ellen Page) யூசுஃப் (Dilleeroo) ஈம்ஸ் (Tom Hardy) என்போர் இணைந்த குழுமம் "Inception" நிகழ்வுக்கு தயாராகிறது. கல்லூரி மாணவி யான அரியாட்னா கனவை வடிவமைக்கிறாள். பம்பரம், தாயக்கட்டை, சதுரங்கக் காய் என்பன கனவுலகினையும் நனவுலகினையும் பிரித்தறிய உதவுகின்றன. வேதியல் நிபுணரான யூசுஃப் மயக்க மருந்தினை தயார் செய்கிறார்.

சிட்னியிலிருந்து லொஸ்ஏஞ்செல்ஸ் செல்லும் விமானப் பயண மொன்றில் ஃபிஷ்சருக்குத் தெரியாமல் பானத்தில் மருந்தைக் கலந்து கொடுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுக் கருவியினைப் பொருத்தி தம்மையும் கனவு நிலைக்குட்படுத்துகின்றனர். மாற்றுக்கருத்தியலை விதைக்க கனவை மூன்று கட்டங்களாக்குகின்றனர். முதலாவது கட்டத்தில் ஃபிஷ்சர் பன்னாட்டு நிறுவனத்தலைவரான தந்தையின் ஆளுகையில் தங்கியிருக்கும் நிலையினைத் தகர்ப்பது. கனவுட் கனவு என்ற இரண்டாவது அமர்வில் ஃபிஷ்சர் தனக்கெனத் தனி சாம்ராஜ்யத்தை உருவாக்கும் முனைப்பை விதைப்பது; கனவுட் கனவுட் கனவு என்ற மூன்றாவது அடுக்கில் "தான் வேறு தந்தை வேறு" என்ற எண்ணத்தை உருவாக்குவது. கனவு அடுக்குகளில் நிகழும் எதிர்பாராத சவால்களிலிருந்து எவ்வாறு மீள்கிறார்கள் என்பதை "ஜேம்ஸ் பொண்ட்" பாணியில் படம் விவரிக்கின்றது.

9000 கோடியில் உருவான இப்படத்தின் முதல்வார வருவாய் 9900 கோடி.(உலகில் அதிக பட்ச முதல்வார வருவாய் பெற்ற அறிவுப் புனைவுப் படப்பட்டியலில் 2வது இடம்) இதுவரைக்குமான வருவாய்40,000 கோடியைத் தாண்டிவிட்டதாம்! Christopher Nolan வணிக வெற்றிக்கான வெளியை திட்டமிட்டுத் தகவமைத்துள்ளார். Paul Franglin வெளிப்படுத்தும் Visual effect படத்தின் மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்த முனைகிறது. ஒளிப்பதிவும் (wally Pfoster) படத்தொகுப்பும் (Lee Smith) வியக்க வைக்கின்றன. Hans Zimmer! இசையில் கொண்டாட்டத்தினை நிகழ்த்தியுள்ளார்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொண்டாட்ட தேவதை
## "ஸ்ரேயா கோஷல்"

2003ம் ஆண்டின் ஓர் இரவு வேளையில் வானொலியின் அலைவரிசையினை மாற்றிக் கொண்டிருந்த போது உணர்வுகளைக் கிறங்க வைக்கும் குரலொன்று காதுள் நுழைந்து இதயத்தின் ஆழம் வரைக்கும் ஊடுருவியது. "எனக்குப் பிடித்த பாடல் அது உனக்கும் பிடிக்குமே" என்ற ஏக்கம் ததும்பும் வரிகளை உச்சரித்த விதமே நரம்புகளுக்குள் புகுந்து ஏதோ வேதியல் மாற்றத்தினை நிகழ்த்தியது. வரிகளின் ஆத்மாவைப் புரிந்து அலாதியான உணர்ச்சியை சுவற வைக்கும் வகையில் பாடிய மோகினிப் பிசாசு யார்? என்ற தேடலில் இறங்கினேன். "என் செல்லம் என் சிணுக்கு" என "அல்பம்" திரைப்படத்தில் கொஞ்சிக் குழைந்த குரலழகி "ஸ்ரேயா கோஷல்" என்னும் தகவல் கிடைத்தது. மயிலிறகால் இதமாக வருடும் மெலொடிக் குரலாளின் ஏனைய பாடல்களைத் துருவிய போது, அந்தக் கால்கோள் நிலைக் காலத்தில் தமிழில் இரு பாடல்களை மட்டுமே பாடியிருந்தார் என்பதை அறிந்து ஏமாற்றமடைந்தேன். நண்பன் ஒருவன் தேவதாஸ் (ஹிந்தி) திரைப்படப் பாடல்களின் இறுவட்டினைக் கொடுத்தான். கேட்ட போது காந்தக் குரலும், பூரண சுருதித்தன்மையும்(perfect pitch) நரம்புகளில் மின்சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சின. மூன்றாந்தர சினிமாப் பாடல்களில் கிறங்கிப் போவதை நண்பர்கள் சிலர் கிண்டலடித்தனர். உளநெருக்கடிகளில் ஆறுதல் தருவதாகவும் எந்தச் சூழ்நிலையில் செவிமடுத்தாலும் உறை நிலைக்கு நகர்த்திச் செல்வதாகவும் ஸ்ரேயா கோஷலின் குரல் தோன்றியது. அந்த தேவதையின் குரல்வழி ஸ்பரிசம் என் எழுநூறு மில்லியன் சுவாசச் சிற்றறைகளிலும் கொண்டாட்டத்தினை நிகழ்த்தியது.

இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் பகரம்பூரில் 1984 மார்ச் 12 இல் ஸ்ரேயா கோஷல் பிறந்தார். தந்தையான பிஸ்வாஜின் கோஷல் அணுசக்தி இயந்திரவியல் பொறியியலாளராவார். இலக்கியப்பட்டதாரியான தாயாரின் வழிநடத்தலில் நான்கு வயதிலேயே ஸ்ரேயா கோஷல் ஹார்மோனியம் வாசிக்கத் தொடங்கினார். மகேஸ் சந்திர சர்மா என்பவரிடம் இந்துஸ்தானி பாரம்பரிய இசையினைப் பயின்றார். SAREGAMA (தற்போதைய SAREGAMAPA) போட்டியில் வெற்றியீட்டி. இயக்குநரான சஞ்சைலீலா பன்சலியின் கவனத்தை ஈர்த்து "தேவதாஸ்" திரைப்படத்திலே பாடும் வாய்ப்பினைப் பெற்றார். அத்திரைப்படத்தில் பாடிய ஐந்து பாடல்களில் "பயிரி பியா" பாடல் தேசிய விருதினைப் பெற்றுக் கொடுத்தது. ஹிந்தி, அசாம், வங்காளி, குஜராத், கன்னடம், மராத்தி, ஒரிசா, மலையாளம், தெலுங்கு, தமிழ், ஆங்கிலம் என அனைத்து மொழிகளிலும் பாடியுள்ளார். கசல், இந்துஸ்தானி என்பவற்றில் ஆளுமை மிக்கவராகத் திகழ்கிறார்.

இயக்குநர் வசந்த பாலனின் "அல்பம்" திரைப்படத்தின் "என் செல்லம்" பாடலினூடாகத் தமிழில் அறிமுகமானார். மாற்று மொழிப் பாடகிகள் தமிழை இயல்பாக உச்சரிப்பது இலகுவானதன்று. ஸ்ரேயா கோஷலின் வெளிப்பாட்டிலும் சில நெருடல்கள் இருக்கவே செய்கின்றன. "நினைத்து நினைத்துப் பார்த்தேன்" (7G ரெயின் போ காலனி) பாடலில் "நானே" என்பதை "நாணே" எனவும், "வளையலின்" என்பதை "வலையலின்" எனவும், சரணத்தின் இறுதியில் இடம்பெறும் "உன்னுள் வாழ்கிறேன்" என்பதை "உன்னுல் வாழ்கிறேன்" எனவும் பாடியுள்ளார். "உருகுதே மருகுதே" (வெயில்) பாடலில் இடம் பெறும் நாட்டார் வழக்கு வார்த்தையான "ஒலகமே" என்பதை "ஔகமே" எனவும், "சொக்கித் தானே" என்பதை "சொக்கித் தாணே" எனவும் பாடியுள்ளார். (அப்பாடலில் இணைக் குரலான சங்கர் மகாதேவன் சீர்மையோடு உச்சரித்துப் பாடுகிறார்) "யாரது யாரது இடைவிடாது" (இங்கிலீஸ்காரன்) தேன்தேன் தேன் (குருவி) முன்பே வா (சில்லென்று ஒரு காதல்) சாமிகிட்ட (தாஸ்) நீயும் நானும் (மைனா) காதல் அணுக்கள் (எந்திரன்) உன் பேரைச் சொல்லும் போதே(அங்காடித்தெரு) ஏடி கள்ளச்சி(தென்மேற்குப் பருவக்காற்று) போன்ற பாடல்கள் ஸ்ரேயா கோஷலின் வசீகரமான குரலுக்கு வளமான எடுத்துக் காட்டுகளாகும். "விருமாண்டி" திரைப்படத்தில் கமல்ஹாசனுடன் இணைந்து பாடும் "உன்னை விட இந்த" என்ற பாடலை உயிரைக் கொல்லும் வகையிலே பாடியுள்ளார். சைந்தவியுடன் இணைந்து பாடிய "அண்டங்காக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டைக்காரி" பாடல் பெரும் புகழ் தேடிக் கொடுத்தது. மேலும் பவதாரணி – ஸ்ரேயா கோஷல் – சாதனா சர்க்கம் – ஹரிஹரன் கூட்டணியின் "காற்றில் வரும் கீதமே" பாடல் மழைச்சாரலாய் மனதை நனைக்கிறது. விரசக்குரலில் பாடிய தழுவுது நழுவுது(அன்பே ஆருயிரே) மஜாமஜா(சில்லென்று ஒரு காதல்) பாடல்கள் சிறப்பாக அமையாததால் அப்பாணியினைத் தமிழிலே தவிர்த்து விட்டார்.

தேன் திறவுகோலால் தடிப்பான இடது இதய அறையைக் கூட இலகுவாகத் திறக்கும் ஆற்றல் மிகு ஸ்ரேயா கோஷல் மாற்று மொழிகளிலும் மகத்தான பாடல்களைப் பாடியுள்ளார். தேவதாஸ்(ஹிந்தி) திரைப்படத்தில் இடம்பெற்ற "டோலாரே". 3 இடியட்ஸ்( ஹிந்தி) திரைப்படத்தில் இடம்பெற்ற "ஜூபிடுபி", லகே ஹோ முன்னாபாய் (ஹிந்தி) திரைப்படத்தில் இடம் பெற்ற "பல்பல்ஹர்பல்", பனாரஸ் (மலையாளம்) திரைப்படத்தில் இடம்பெற்ற "சந்துத் தொட்டில்லே" போன்ற பாடல்கள் காலத்தால் அழியாத கானங்களாக நின்று நிலைக்கும் ஆற்றல் மிக்கவை. இந்தியத்திரையுலகின் சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதினை மிகக் குறுகிய காலத்தில் நான்கு முறை பெற்றிருக்கிறார்.

"பயிரிபியா" பாடல் 2003 (தேவதாஸ் – ஹிந்தி)
"தீரா ஜல்னா" பாடல் 2006 (பஹேலி – ஹிந்தி)
"யே ஹ் இஸ்க் ஹாயே" பாடல் 2008 (ஜல் வீ மெட் –ஹிந்தி)
"ஜீவிரங்காலா" பாடல் 2009 (ஜோக்வா - மராத்தி) & "பெராரிமான்" பாடல் 2009 (அந்த ஹீன் பெங்காலி)

2012 இல் சிறந்த பாடகிக்கான குளோபல் விருதினை "ஊ லா லா"(த டர்ட்டி பிக்சர்) பாடலுக்காகப் பெற்றார். மேலும் ஃபிலிம்பேர் விருது, தென்னிந்திய ஃபிலிம்பேர் விருது போன்றவற்றையும் பல தடவை வென்றுள்ளார். தமிழில் முன்பே வா(சில்லென்று ஒரு காதல் – 2006) உன் பேரை சொல்லும் (அங்காடித் தெரு – 2010) பாடல்கள் தென்னிந்திய ஃபிலிம்பேர் விருதினைப் பெற்றன. 2011 இல் விஜய் இசை விருதை "மன்னிப்பாயா"(விண்ணைத்தாண்டி வருவாயா) பாடல் பெற்றது. அன்வர்(Anwar) திரைப்படப்பாடலானது கேரளாவில் வாராந்தம் நடத்தப்படும் பாடல் தொகுப்பு பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. 2010 இல் When Harry to marry என்ற ஆங்கிலப் படத்திலும் பாடினார். U.s.state of ohio ஆளுநர் ரெட் ஸ்ரிக்லாண்ட் (Ted Strick land) ஸ்ரேயா கோஷலைக் கௌரவித்து யூன் 26ம் திகதியை ஸ்ரேயா கோஷல் தினம்(Shreya Ghosal Day) எனப் பிரகடனப் படுத்தினார். காமாந்தர முக்கல் முனகல்களும், உச்சஸ்தாயி குத்துப்பாடல்களும், ஆண் குரற் பாணியில் பெண் பாடகிகளின் அட்டகாச அலறல்களுக்கும் இடையில் மிருதுவான "மெலொடி"யால் சொக்க வைக்கும் ஸ்ரேயா கோஷலின் செல்லமான குரல் நீண்ட காலம் தமிழில்ஒலிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மையின் பன்முக வடிவம்

– Rashomon –

மாறுபட்ட திரைக்கதை நுட்பத்தோடு மனித வாழ்வின் முரண் தர்க்கத்தினை வசீகரமான தருணங்களின் தொகுப்பாக வெளிக்கொணர்ந்த படைப்பாக்க முயற்சியே Rashomon! யப்பானிய சினிமாவின் முதன்மை ஆளுமையாக விளங்கும் அகிரா குரோசேவாவின் அற்புதமான திரைப்படிமம். "ரியு நொசுகெ அகுதகவ" எழுதிய இரு யப்பானிய சிறுகதைகளை பின்புலமாகக் கொண்டு திரைக்கதை கட்டமைக்கப்பட்டுள்ளது. கதையோடு இழையோடும் பாத்திரங்களின் பார்வைத்தளத்தில் கதை சொல்லும் உத்தியினை வெகுலாவகமாகக் கையாண்டு அபாரமான படைப்பொன்றை இயக்குநர் அகிரா குரோசேவா உருவாக்கியுள்ளார். 1950– ஒகஸ்ற் – 24ம் திகதி அரங்கிற்கு வந்த இத்திரைப்படம் இன்றளவும் தெவிட்டாத உணர்வுகளை மீள் பார்வை யாளர்களுக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறது. உலகின் தலைசிறந்த திரைப்படக் கல்லூரிகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்புகளின் அறிமுகத்தில் யப்பானின் மரபுவழி அரசவை இசையான Gagakuவின் ராகம் பின்னணியாகிறது. பாழடைந்த மண்டபத்தில் Rashomon (தலைவாசல்) என்று யப்பான் மொழியில் எழுதப்பட்டுள்ளது. மண்டபத்தில் புத்தபிக்குவும் (Minoru Chiaki) மரம் வெட்டியும்(Takashi Shimura) அமர்ந்திருக் கிறார்கள். வழிப்போக்கன் ஒருவன் அந்நேரம் வந்து சேர்கிறான். அடைமழை பொழிந்து கொண்டிருக்கிறது. மரம்வெட்டி காட்டுக்குச் சென்றபோது, அங்கு பிணமொன்றைக் கண்டதாகச் சொல்கிறான். மரம் வெட்டி காட்டிலே நடந்து செல்லும் பின்னோக்குநிலை உத்திக்காட்சியில் ஒளிப்பதிவின் பல்வேறு கோணங்கள் அற்புதமாகப் பதிவாகியுள்ளன. இலைகளினூடே சூரியன் தெரியும் போது வெளிப்படும் பின்னணி இசை அக்காட்சியின் கவித்துவத்தை நன்கு மெருகேற்றுகிறது. (அவ்விசையே Theme music ஆகிப் படம் முழுமையும் விரவியுள்ளது). சாமுராய் வீரனின் கொலையானது கதாபாத்திரங்களின் பார்வை வழியே மாறுபட்டவகையில் சித்திரிக்கப்படுகின்றது.

(i) **தஜோமரு**(Toshiro mitune) **சாட்சியம்**

கொள்ளைக்காரனான தஜோமரு மரமொன்றின் அடியிலே படுத்திருக் கிறான். காட்டுப்பாதையில் சாமுராய் வீரனும், அவனது மனைவியும் செல்கின்றனர். குதிரை மீதமர்ந்திருக்கும், சாமுராய் மனைவியின் முகத்திரை விலகும் போது வசீகரமான வதனத்தைக் கண்ட தஜோமரு அவளை அடைய விரும்புகிறான். சாமுராய் வீரனைக் கட்டிப்போட்டுவிட்டு பலவந்தமாக அவ்வழகியை அணைத்து முத்தமிடுகிறான். ஒரு கட்டத்தில் எதிர்ப்படங்கி மெய்ம்மறந்த அப்பெண் தன்னை இழக்கிறாள். தனது கணவனைக் கொல்லுமாறு தஜோமருவிடம் வேண்டுகிறாள். சாமுராய் வீரனின் கட்டுகளை அவிழ்த்த தஜோமரு அவனோடு சண்டையிடுகிறான். அச்சண்டையில் சாமுராய் வீரனைக் கொன்றதாகச் சாட்சியமளிக்கிறான்.

(II) **சாமுராய் மனைவி**(Machiko Kyo) **சாட்சியம்**

தஜோ மருவின் வன்புணர்ச்சிக்கு உள்ளான மனைவியை சாமுராய் தவறான அர்த்தத்தில் நோக்குகிறான். அந்தப் பார்வையினை மனைவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உளப்பாதிப்பும் கோபமும் அடைந்து அவ்வாறு பார்க்க வேண்டாமெனக் கெஞ்சுகிறாள். தன்னைக் கொன்று விடுமாறு வேண்டு கிறாள். சாமுராய் ஏளனமாகச் சிரிக்கிறான். சாமுராயின் மனைவி அதிஉச்ச கோபத்திற்குள்ளாகி சாமுராய் வீரனை நெருங்குகிறாள். தானே தனது கணவனைக் கொன்றதாகச் சாட்சியமளிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(III) **சாமுராய் வீரனின்**(Massaykui mori) ஆவியின் சாட்சியம் (தெய்வம் ஏறி ஆடும் இயல்புடைய தேவராட்டியின் உடலில் புகுந்த சாமுராய் வீரனின் ஆவி கூறும் வாக்குமூலமாகப் பதிவாகின்றது)

தஜோமருவோடு மகிழ்ந்து கலந்த சாமுராயின் மனைவி சாமுராய் வீரனை கொல்லுமாறு தஜோமருவிடம் கூறுகிறாள். அவளது அடம்பிடிப்பால் கோபமுற்ற தஜோமரு அவளைத் துரத்திச் சென்று, சிறிது நேரத்தின் பின்பு திரும்புகிறான். மனஅவஸ்தைக்குள்ளான சாமுராய் கத்தியால் குத்தி தற்கொலை புரிந்ததாக ஆவி சாட்சியமளிக்கிறது.


இயக்குநர் பன்முக நோக்கிலான மெய்யினை வெளிப்படுத்தி நிரந்தர நிஜத்தை பார்வையாளனுக்கு காட்சிரத்து செய்து விடுகிறார். மூலத்திற்கும் நகலுக்குமான மோதுகையாக படம் அமைகின்றது. மெய்யினை அடையாளங்காண முடியாத தவிப்பின் அழகியல் படைப்பினை வேறொரு தளத்திற்கு நகர்த்துகின்றது. மனிதர்களின் பலவீனமான தருணங்களை அகிரா குரோசேவா அற்புதமாக வெளிக்கொணர்ந்துள்ளார். மனிதம் சார்ந்த ஒளிக்கீற்றின் அதீதத்தை படத்தின் முடிவு இனங்காட்டுகின்றது. இறுதிக்காட்சியில் மண்டபத்தில் அழுகின்ற குழந்தையொன்றின் ஆடைகளை வழிப்போக்கன் எடுத்துக் கொண்டு அடை மழையில் நனைந்தபடியே ஓடுகிறான். மழை ஓய்கிறது. பிக்குவின் கையிலுள்ள குழந்தையைத் தானே வளர்ப்பதாக மரம்வெட்டி கூறுகிறான். தனது ஆறு பிள்ளை களோடு சேர்த்து அந்தக்குழந்தையையும் வளர்ப்பதாக உரைத்து குழந்தையை வாங்கிக் கொண்டு பயணிக்கிறான். பாழ் மண்டபத்தில் Rashomon என்ற யப்பானிய எழுத்துக்கள் காட்சிப்படுத்தப்பட படம் நிறைவடைகிறது.

1964 இல் இயக்குநர் மார்ட்டின் ரிட் The Outrage என்ற படமாக ரஷோ மோனை மீளுருவாக்கினார். தமிழில் இயக்குநர் எஸ்.பாலச்சந்தரின் "அந்தநாள்", கமல்ஹாசனின் "விருமாண்டி" போன்ற படங்களில் Rashomon உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. பல புனைகதை இலக்கியங்களிலும் இவ்வகை நுட்பத்தினை தரிசிக்க முடிகிறது. சுந்தரராமசாமியின் "திரைகள் ஆயிரம்" கதையினையும், என்னுடைய "கடவுளின் கைபேசி எண்" கதையினையும் (ஜீவநதி 50 ஆவது இதழில் உள்ளது) எளிய உதாரணங்களாகக் கூறலாம்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈரத்தின் வசீகரம் சுவற வைத்த ஈரானிய சினிமா

தமிழ் சினிமா தனது மரபுவழிப்பட்ட செல்நெறிகளைப் பாதுகாத்தவாறே பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கே முளைவிடும் யதார்த்த தள பரிசோதனை முயற்சிகளை வணிக சினிமாவின் "விஸ்வரூப" வெற்றி அடியோடு நொருக்கி விடுகிறது. ஈரானிய சினிமாவிலோ எழில் மிகு படைப்புகளின் வருகை அதிகரித்த வண்ணம் உள்ளது. சில கருத்துக்கள் மக்கள் மத்தியில் ஊடுருவுவதை தணிக்கை செய்வது உன்னதமானது என்று பிளேட்டோ, மாக்கிய வல்லி போன்றோர் கூறியுள்ளனர். ஆனால் கருத்துலகில் கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட வேண்டு மென அரிஸ்டோட்டில், ஜோன் டூயி போன்றோர் வாதிட்டுள்ளனர். ஈரானின் தணிக்கைச் சட்டமோ படைப்புரிமைக்கு முற்றிலும் எதிரானது. ஆக்க கர்த்தா வின் சுதந்திரத்தைக் காவு கொள்ளும் இத்தகைய சட்டமே ஈரானில் மாற்று சினிமாவுக்கான சூழலையும் கட்டமைத்துள்ளது. தமிழ் சினிமாவின் மைய நீரோட்டமான "காதல்" ஈரானிய படிமங்களுக்கு மறுதலிக்கப்பட்டதால் இயக்குநர்கள் மாறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்களங்களை நாடி நகர்ந்தனர். தொழில் நுட்ப அறிவின் மேம்பாடு அற்புதமான படைப்புக்களைத் தந்துவிட முடியாது. கூர்மையான சமூக தரிசனமும் கலை குறித்த ஆழமான புரிதலுமே தரமான ஆக்கங்களை உருவாக்கும் உரைகற்கள்.! மலினப்படாத மனித உளப்பாங்குகளை ஈரானிய இயக்குநர் மஜித் மஜிதி (magid magidi) சிறுவர் மைய சினிமாவில் இனங் காட்டி வருகிறார். அவரின் உன்னத படைப்பான children of Heaven குழந்தை உலகினுள் நுழையும் அனுமதிச் சீட்டை அதிக பட்ச வல்லமையோடு வழங்கும் சாத்தியப்பாட்டைக் கொண்டமைந்துள்ளது.

கிழிந்த ரோஸ் நிறமான பாதணியை (Shoe) தைக்கும் காட்சியோடு படம் ஆரம்பிக்கின்றது. தைக்கப்பட்ட தனது தங்கையின் பாதணிகளை வாங்கி கறுப்புநிற நெகிழ்வுப் பை ஒன்றில் வைத்துக் கொண்டு சிறுவனான அலி (Amir Farrokh Hashemian) காய்கறிக் கடைக்கு செல்கிறான். மரப்பெட்டிகளுக்கு அருகே பையை வைத்துவிட்டு உருளைக்கிழங்கினை தேர்ந்தெடுக்கும் நேரத்தில், பழைய பொருட்களை எடுத்துச் செல்லும் தள்ளு வண்டிக்காரன் கடையிலுள்ள கழிவுப் பொருட்களோடு பாதணிப் பொதியினையும் எடுத்துச் சென்று விடுகிறான். வைத்த இடத்திலே "shoes" இல்லாமையால் அதிர்ந்த அலி, மரப்பெட்டிகளின் இடுக்குகளில் பரிசோதிக்க மரக்கறிகள் கீழே விழுந்து சிதறுகின்றன. கடைக்காரன் கோபமுற்று விரட்டி விடுகிறான் அலி வீட்டுக்கு வந்து தங்கை சாராவிடம் ("Bahare seddiqi") நிகழ்ந்தவற்றைக் கூறுகின்றான். சாரா அழுகிறாள். அலியின் தந்தை (Rezanagi) பள்ளிவாசலில் பறிமாறப்படும் தேநீருக்கான கற்கண்டுகளை உடைப்பதோடு, பிறர் வீடுகளில் சென்று செடிகளுக்கு மருந்தும் அடித்துக் கொடுக்கின்றார். தாயார் (Fereshte sarabandi) நோய் வாய்ப்பட்டு இருக்கிறார். குடும்பம் வறுமையில் சிக்கி தவிக்கிறது. இந்நிலையில் பாதணி தொலைந்ததை பெற்றோரிடம் இருந்து மறைத்து விடவே அலி விரும்புகின்றான். அலியின் பாதணியை சாரா அணிந்து கொண்டு பள்ளிக்குப்போய் , பள்ளி முடிந்தவுடன் துரிதமாகக் கொண்டு வந்து அலியிடம் ஒப்படைப்பது என்னும் முடிவுக்கு வருகின்றனர்.

ஈரானில் சிறுமியருக்கு காலையிலும், சிறுவர்களுக்கு மதியத்திலும் பாடசாலை நடைபெறுகிறது. பள்ளி முடிய அவஸ்தையோடு வேகமாக ஓடி வந்து அண்ணனிடம் பாதணியைக் கொடுக்க அலி அவசரமாக அணிந்து கொண்டு சற்று தாமதமாகவே பள்ளிக்குச் செல்கின்றான். பள்ளி முதல்வரால் தாமத வருகை அவதானிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாகும் தருணத்தில் ஆசிரியரால் காப்பாற்றப்படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலியின் பள்ளியில் ஓட்ட நிகழ்வொன்றுக்கான தகுதிச்சுற்று நடைபெறுகிறது. எனினும் அலி அக்கறை கொள்ளாதிருக்கிறான். தகுதிச்சுற்று முடிந்த பின்னர் பரிசுப் பட்டியல் குறித்த விவரம் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படுகிறது. மூன்றாவது பரிசு ஒரு சோடி "shoes"! விளையாட்டுப் பொறுப்பாசிரியரிடம் சென்று அடம்பிடித்து, அழுது, தன்னம்பிக்கையினை வெளிப்படுத்தி அனுமதி பெறுகிறான். தங்கையிடம் மகிழ்ச்சியான செய்தியை பரிமாறிக் கொள்கிறான்.

போட்டி நிகழ்கிறது. நூற்றுக்கணக்கான சிறுவர்கள் ஓடுகின்றனர். மூன்றாம் இடத்தினை இலக்கு வைத்து அலி ஓடுகிறான். முன்னிலையில் வேகமாக ஓடும் தருணத்தில், தங்கையின் நினைவு வரத் தாமதித்து இருசிறுவர்களை முந்திச் செல்ல அனுமதிக்கிறான். எனினும் மூன்றாம் இடத்தை தக்க வைக்கமுயன்றபோது அருகிலே ஓடும் சிறுவனின் செயற்பாட்டால் விழுந்து விடுகிறான். எனினும் எழுந்து உத்வேகம் கொண்டு ஓடி எல்லையைத் தொடுகிறான். "மூன்றாவதாக வந்து விட்டேனா?" என்று கேட்கும் போது, பள்ளி முதல்வர் அவனை அணைத்து "முதலாவதாகவே வந்து விட்டாய்" என்கிறார். அதிர்ச்சியில் உறைந்து கலங்குகிறான். புன்னகை இழந்து வெற்றியின் முரண் இயக்கத்தால் துவண்டு கண்ணீர் சிந்துகின்றான்.

அலியைப் புன்னகையோடு வரவேற்கும் சாரா, உடல் மொழியைப் புரிந்து பரிசு கிடைக்காமையை உய்த்தறிகிறாள். வீட்டினுள் மழலையின் அழுகுரல் கேட்க அவ்விடத்தை விட்டு அகல்கிறாள். அலி பாதணியைக் கழற்றி எறிந்து விட்டு, சிவந்த தழும்புகள் விரவிய பாதங்களை நீர்த்தொட்டியில் வைத்தபடி அமர்கிறான். தங்கநிற மீன்கள் அலியின் பாதத்தை முத்தமிடப் படம் நிறைவடைகிறது.

Children of heaven படத்தின் ஒவ்வொரு சட்டகத்திலும் ஈரம் சுவறியுள்ளது. நெஞ்சின் ஈரமும், நீரின் ஈரமும் அத்வைதமான படைப்பாக அமைந்துள்ளது. நீர்மை படம்நெடுகிலும் தொடர்ந்து பயணிப்பதை அவதானிக்க முடிகிறது. அன்பின் ஸ்பரிசத்தை, மனித நேயத்தின் பெறுமதியை படம் அழகாக வெளிப்படுத்துகிறது. அதீத அண்மைக்காட்சியில் (Extreme Close up) "shoes" ஏற்கும் பாத்திர வகிபாகம் தனித்துவமானது. சவர்க்காரக்குமிழிகளை ஊதுகின்ற குதூகலம் பரீட்சையை துரிதமாக முடிக்கும் முகாந்திரம், பயிற்சிக் கொப்பியில் எழுதி உரையாடும் குழந்தை உலகம், துயிலும் செல்வந்த வீட்டுச் சிறுவனுக்கு அருகிலே பொம்மை வைக்கும் பக்குவம் என அனைத்துமே அற்புதமாகப் பதிவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனிடம் பென்சிலைப் பெறும் தருணத்தில் சாராவின் விரல்களின் நுண்ணசைவு மொழி உன்னதமானது. வாய்க்காலில் தவற விடும் பாதணியை சாரா எடுக்க முயலும் எத்தனிப்பும் Hassa Hassandoost அக்காட்சியில் செய்து இருக்கும் படத்தொகுப்பும் keivan Jahan shahi வழங்கும் மகத்துவமான இசையும் அபாரம்.

Parviz Malekzaade செய்திருக்கும் எளிமையான ஒளிப்பதிவு சிறப்பாக உள்ளது. ரெஹ்ரான் (Tehran) நகரின் குறுகலான தெருக்களையும், இறுதிக் காட்சியில் அலி அமர்ந்திருக்கும் நீர்த்தொட்டியையும் High Angle இல் காட்டி உள்ள விதமும், ஓட்டப்போட்டியின் முடிவுத் தருணத்தில் அலியின் Point of view இல் காட்சிப்படுத்தப்படும் பாதையும் எளிமையின் வலிமைக்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

சாராவின் பள்ளியில் நிகழும் காலை ஒன்று கூடலின் போது ரோஜா (Nafise Jafar Mohammadi) என்ற சிறுமியின் பாதத்தில் சாரா தனது பாதணியைக் காண்கிறாள். அவள் வீட்டினை அடையாளம் கண்ட பின், ரோஜாவின் தந்தை விழிப்புலனற்றவர் என்பதை அறிந்து அலியும் சாராவும் கனத்த மௌனமும் சோகமும் குடி கொண்டு திரும்பி விடுகின்றனர். அக்காட்சி தொற்ற வைக்கும் மன விரிவு அலாதியானது. குழந்தைகளின் இயல்பான நடிப்பு பிரமிப்பை ஏற்படுத்துகிறது. விழுமியப் பண்புகளின் உச்சத்தை களங்கமற்ற குழந்தை உலகின் ஊடாக இயக்குநர் வெளிக்கொணர்ந்துள்ளார்.

சாரா தவற விட்ட பேனாவை ரோஜா மீள ஒப்படைக்கும் போது. சாரா தனது பாதணிகளை அணிந்துள்ள ரோஜாவின் பாதங்களைப் பார்க்கிறாள். காட்சி ஊடகத்தின் வீரியத்தை, சினிமா மொழிக்கான நுண் சாத்தியங்களை இயக்குநர் மஜித் மஜிதின் வெகு லாவகமாகக் கையாளும் மேதமை வியக்க வைக்கிறது. ஈரத்தின் வசீகரத்தோடு நகரும் இவ் ஈரானிய சினிமா குழந்தை உளவியற் கூறுகளை பிசிரற்ற தன்மையோடு வெளிப்படுத்தி நேர்த்தியான கலானுபவப் படைப்பாக திகழ்கிறது.

■ll



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதம் தகர்க்கும்

## "புறஹந்த களுவற"

தூய விழுமியமான தியாகத்தினை தேசத்திற் கான சேவை என்னும் மாயச் சட்டகத்துள் முடக்கி ஆதாயம் தேடும் மதம் சார் அரசியல் இருட்டை அடை யாளம் காட்டும் படைப்பாக "புறஹந்த களுவற" (Death on a full moon day) அமைந்துள்ளது. பௌர்ணமிதினம் கங்குல் விலக்கும் புனிதநாளாக பௌத்தர்களால் போற்றப் படுகிறது. இயக்குநர் பிரசன்ன விதானகே விழிப்புலன் பாதிப்புற்ற கதாபாத்திரக் கட்டமைப்பினைப் பின்புலமாகக் கொண்டு முழுநிலா தினத்தின் தூய்மையினை நொருக்கி யுள்ளார். இலங்கைத் திரைப்பட வரலாற்றில் தனித்துவ மான படைப்பாக "புறஹந்த களுவற" காணப்படுகிறது.

பிரசன்ன விதானகே Sisila Gani (Ice of fire -1992) Anantha Rathiya (Dark Night of the soul -1996) Pawuru walalu (Walls with in 1997) Purahanda Kalu wara (Death on a full moonday 1997) Ira Madiyama (August Sun -2003) Akasa Kusum(Flowers of the sky-2008) ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை பாதிப்புற்று ஏழ்மையில் வாழும் வன்னிகாமி என்ற முதியவர் (Joe Abeywickrama) நீர் நிலையொன்றில் அழுக்கு நீரை வடித்தெடுத்து சுரைக் குடுவையில் நிரப்பிக் கொண்டு வீட்டுக்கு வருகிறார். சிங்கக்கொடி போர்த்தப் பட்ட பிரேதப்பேழையொன்று காரில் வந்து இறங்குகிறது. இராணுவத்தில் ஊழியம் செய்த "பண்டார" மரணமடைந்த செய்தியை உணர்ந்த, தந்தையான வன்னிகாமி உறைந்து போகிறார். உடல் சிதைந்திருப்பதால் பிரேதப் பேழை "சீல்" செய்யப்பட்டி ருப்பதாக அறிவிக்கப் படுகிறது. இந்நிலையில் "பண்டார" எழுதிய மடலொன்று வந்து சேர்கிறது. தன்மகன் உயிரோடிருப்பதாக வன்னிகாமி நம்புகிறார். எனினும் அக்கடிதம் மரணமடைவதற்கு முன்னர் எழுதி அனுப்பப் பட்டதாக அனைவரும் வன்னிகாமிக்கு தெளிவுபடுத்துகிறார்கள். இராணுவத்தில் சேவையாற்றி மரணமடைந்தோருக்கு அரசு வழங்கும் உதவு தொகையைப் பெறும் படிவத்தினை கிராம சேவகர் வன்னிகாமியிடம் கொடுக்கிறார். வன்னிகாமியோ அப்படிவத்தினை "ரங்கு பெட்டி" ஒன்றில் வைத்து விட்டு மகனின் வரவுக்காகக் காத்திருக்கிறார். ரங்குப் பெட்டியிலிருந்து படிவத்தைக் கைப்பற்றும் மூத்தமகள், கணவனிடம் கொடுத்துப் படிவத்தினைப் பூர்த்தி செய்கிறாள். வன்னிகாமி அப்படிவத்திலே கையெழுத்திட விரும்பவில்லை. மனவுறுதியோடு மண்வெட்டியினைத் தூக்கிக் கொண்டு சவப்பெட்டி புதைக்கப்பட்ட இடத்திற்கு வந்து தோண்ட ஆரம்பிக்கிறார். விடயமறிந்து கிராமத்தினர் திரண்டு விடுகின்றனர். ஊரவர்களுள் ஒருவர் மண்வெட்டியைப் பெற்று புதைகுழியைத் தோண்டி பிரேதப்பேழையை வெளியே எடுத்துத் திறக்கிறார். உள்ளே இரு வாழைக்குத்திகளும், பெரிய கல்லொன்றும் காணப்படுகின்றன. அவ்விடத்திற்கு வந்த கிராம சேவகர் ஊரவரின் செயலைக் கண்டிக்கிறார். பிரேதப் பேழை மீளவும் புதைக்கப்படுகிறது. இறுதிக்காட்சியில் வன்னிக்காமி சுரைக் குடுவையில் நீர் நிரப்பிக் கொண்டிருக்கிறார். மழை பொழிகிறது. நீர் நிலையிலே சிறுவர்கள் குதூகலமாக விளையாடி மகிழ்கிறார்கள். படம் முடிவடைகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏழ்மையின் கொடுமையால் பாமர மக்கள் இராணுவத்தில் இணைய வேண்டி நேரிடுகின்றது. அரசு விளம்பரப்படுத்தும் கவர்ச்சிகர வருவாயைக் கொண்டு பொருளாதார அழுத்தத்திலிருந்து மீள்வதற்கு கிராமப்புற வறிய இளைஞர்கள் முயல்வதனை இயக்குநர் சுட்டிக் காட்டுகிறார். கட்டற்ற ஏமாற்று வித்தைகளின் கருவறையில் அவதரித்த அரசின் உதவு தொகையைப் பெற வன்னிகாமியின் உள்ளார்ந்த உணர்வு இடங்கொடுக்கவில்லை. எனினும் உறவுகளும், அரசின் பிரதிநிதியும், மதகுருவும் நேர்மையின் பிடிவாதத்தை தளர்த்திவிட எத்தனிக்கின்றனர். பிரசன்ன விதானகே போரின் அச்சு அசலான நகர்வை அழுகுறக் குறியீட்டில் உணர்த்தியுள்ளார்.

படம் ஒரே நாளில் நிகழும் சம்பவங்களை வெளிக் கொணரவில்லை. எனினும் காட்சிகள் விரியும் தினங்களில் முழு நிலா தென்படுகின்றது. அப்பதிவுகள் காலமுரணாக அமையாமல் மாறுபட்ட அர்த்தத்தினை நோக்கி பார்வையாளனை நகர்த்துகின்றன. பிரேதப் பேழைமீது போர்த்தப்பட்ட தேசியக்கொடியில் ஒழுக்கு நீர் சிந்துதல், இராணுவ வாகனங்களின் வேகம், படைவீரரின் ஈருருளியில் மதகுரு, ரங்கு பெட்டி மீதுள்ள குப்பி விளக்கு போன்ற பல காட்சிகளில் போரினை நியாயப்படுத்தும் தரப்பினர் மேல் விமர்சனப் பதிவுகளை நிகழ்த்திச் செல்கிறார். சிறுவர்களின் எதிர்காலம் குறித்த பிரக்ஞையினை இறுதிக்காட்சியில் அற்புதமாக, ஏக்கம் ததும்ப வெளிப்படுத்திப் படத்தினை நிறைவுசெய்துள்ளார். ஊடகத்துறை அமைச்சால் தடை செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து வெளிவந்த இத்திரைப்படம். Amiens திரைப்பட விழாவில் Grand prix விருதைப் பெற்றுள்ளது.

■ll



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகரும் படிமங்களில் நாகேஷ்

பன்முக ஆளுமையின் வீரியத்தோடு மன்மத அம்சங்களின்றி ஒற்றை நாடி தேகத்தின் அங்கத ஆற்றுகையூடாகப் பார்வையாளரை வசீகரித்து ஏகோபித்த ஆதரவைப் பெற்ற நடிகனாக நாகேஷ் அமைந்திருந்தார். விஸ்வரூபங் கொண்ட நடிகர் விம்ப அடையாளக் கட்டமைப்பைப் புறந்தள்ளி, இயக்குநர் விம்ப அடையாளத்தை நிறுவும் பிரயத்தனம் மிக்க காலகட்டமொன்றில் கனவுத் தொழிற்சாலைக்குள் நுழைந்தார். சமூக நாடகத் தன்மைமிக்க பிரதிகளை வடித்த இயக்குநர் கே.பாலசந்தரின் நம்பிக்கைக்குரிய நட்சத்திரப் பிரதிமையானார். அன்றாட வார்த்தைகளுக்குள் முடங்கிக் கிடந்த அற்புதமான அங்கதங்களைச் சாதுரியமாக வெளிக்கொணர்ந்து மீ விளைவைத் தோற்றுவித்தார். முகிழ்நிலைக்காலத்தில் நாகேஷின் வேகமான நடிப்பானது Hollywood நடிகர் Jerry Lewis இன் அளிக்கை நகலெடுப்பாக அமைந்திருந்தது. "நாகேஷின் நகைச்சுவை நடிப்பில் ஆரம்பத்தில் அமெரிக்க நகைச்சுவை நடிகர் ஜெர்லி லிவிஸ் சாடை வெகுவாக வீசியதெனினும், காலம் செல்லச் செல்ல ஆழமான முதிர்ச்சியுள்ள நகைச்சுவை சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணச்சித்திர நடிகரானார்" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

1933 செப்ரெம்பர் 27ஆம் திகதி கிருஷ்ணராவ் – ருக்மணி அம்மாள் தம்பதிகளின் மகனாகப் பிறந்த நாகேஸ்வரன் "மாத்வர்" எனப்படும் கர்நாடகப் பிராமணப் பிரிவைச் சேர்ந்திருந்தாலும், சமூக மதிப்பீடுகளைப் புறந்தள்ளி ரெஜினா என்ற கிறிஸ்தவப் பெண்ணைக் காதலித்து மணம் செய்தார். "குண்டுராவ்" என நண்பர்களால் அழைக்கப்பட்ட நாகேஷ், மேடை நாடகம் ஒன்றில் "தை தண்டபாணி" கதாபாத்திரத்தில் நடித்ததால் "தை நாகேஷ்" என அனைவராலும் சுட்டப்பட்டார். ("தாய் நாகேஷ்" எனப் பிற்காலத்தில் மருவியது) கோவை "பிஎஸ்ஜி" கலைக்கல்லூரியில் பயின்றபோது அம்மைநோய் ஏற்பட்டு முகத்தில் தழும்புகள் நிரந்தரமாகின. மின் சாதனங்கள் விற்கும் கடை, ஊறுகாய் நிறுவனம், உலோகத்தொழிற்சாலை போன்றவற்றிலே ஊழியம் புரிந்து இறுதியிலே தென்னக ரயில்வே அலுவலகத்தில் பணியினைத்தேடிக் கொண்டார். மேடை நாடகங்களின் நீட்சியான திரைத்துறையில் கால்பதித்தார். ஆனந்தபாபு, ரமேஸ்பாபு, ராஜேஸ்பாபு என்னும் மூன்று ஆண்மக்களின் தந்தையான நாகேஷ் அந்தாதிப்பாணியான புகைப்பழக்கமும், தீவிர குடிப்பழக்கமும் உடையவர். 1974 இல் கலைமாமணி விருது பெற்றார். "நம்மவர்" திரைப்படத்திற்காக துணைநடிகருக்கான தேசிய விருதினை அடைந்தார். சினிமா ராஜபாட்டையில் நடைபயின்ற எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கருணாநிதி, என்போரின் ஆட்சியே தமிழ்நாட்டில் மீட்டெடுப்புச் செய்யப்பட்டநிலையிலும், விருதுகளின் பின்புலத்தில் அப்பட்டமான அரசியல் விதந்துரைப்பு நிகழ்ந்த சூழலிலும் நாகேஷிற்கு "பத்மஸ்ரீ" விருது வழங்கப்படவே யில்லை! (பத்மஸ்ரீ மனோரமா, பத்மஸ்ரீ விவேக் போன்றவரோடு ஒப்பிடுகையில்(?) எள்ளளவும் ஆளுமைக் குறைவற்றவர். தனக்கு "பத்மஸ்ரீ" வழங்கவில்லை என்பதை கவலை தோய்ந்த ஆதங்கத்தோடு தெரிவித்ததை தொலைக்காட்சியில் பார்த்தேன். அதனால் தான் விருதுக்கும் படைப்புக்குமான பேரிடைவெளியை புரிந்தபின்னும் விருது பற்றிக் குறிப்பிட்டேன்.)

1958 இல் "மணமுள்ள மறுதாரம்" திரைப்படத்தினூடாக அறிமுகமானார். நீர்க்குமிழி, எதிர் நீச்சல், சர்வர் சுந்தரம், மேஜர் சந்திரகாந், யாருக்காக அழுதான், நெஞ்சில் ஓர் ஆலயம், காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள், திருவிளையாடல், மோட்டார் சுந்தரம்பிள்ளை, அன்பே வா. நம்மவர், மகளிர் மட்டும், மைக்கேல் மதன காமராஜன் என்றவாறாக ஏறத்தாழ ஆயிரம் படங்களில் நடித்துள்ளார். நாயகன், எதிர்மறைநாயகன், அங்கதச் சித்திரிப்பு, குணச்சித்திர வார்ப்பு என்னும் நால்வகைப் பரிமாணங்களில் நாகேஷின் அளிக்கையினைப் பதிவு செய்தல் பொருத்தமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) நாயகன்

கால்கோள் நிலைக்காலத்தில் நாகேஷின் பாத்திர வகிபாகம் கதாநாயகனாகவே காணப்பட்டது. எனினும் அமரக் கதாநாயக அந்தஸ்தை அவரால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. எம்.ஜி.ஆர், சிவாஜி, கமல்ஹாசன், ரஜனிகாந் போன்று பிரார்த்தனைக்குரிய பிரதிமையாக மாற்றம் பெறவில்லை. எதிர்நீச்சல், நீர்க்குமிழி, சர்வர் சுந்தரம், மேஜர் சந்திரகாந், யாருக்காக அழுதான், அனுபவிராஜா அனுபவி, கைநிறையக்காசு, சோப்பு சீப்புக் கண்ணாடி போன்ற பல படங்களில் நாயகனாகத் தோன்றியுள்ளார். எள்ளல் உட்சரடாக இழையோட பல்வேறு பாவங்களையும் சித்திரிக்கும் மாறுபட்ட நாயகனாக பார்வையாளரை வசீகரித்தார். எனினும் பல படங்களில் பாலசந்தரின் ஜாடிக்கேற்ற மூடியாகத் தன்னை மாற்றியதால் நடிப்பாற்றலின் எல்லை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

நீர்க்குமிழி திரைப்படத்தில் "சேது" என்றபுற்று நோயாளிப் பாத்திரத்தின் அபார நடிப்பாற்றலால் அப்பாத்திரத்தின் அவலத்தினை சுவைஞனிடம் தொற்ற வைத்த பாங்கு வெகுவாக வியந்து பாராட்டத்தக்கது. "சிகரெட்" மிதிக்கும் போதான நடன அசைவு காலங்கடந்தும் ஞாபக இடுக்கில் மின்னும் ஆற்றல் மிக்கது. ஜெயகாந்தனின் "யாருக்காக அழுதான்" படத்தில் யோசப் கதாபாத்திரத்திற்கு உயிரூட்டி நடித்த விதம் உடையாத நினைவுக்குமிழியாய் சீரஞ்சீவித்துவத்தோடு என்றொன்றும் நின்று நிலைக்கும்.

"கைநிறையக்காசு" திரைப்படத்தில் (முற்பாதியில்) வறுமையின் கோரப்பிடியில் சிக்கி கையாலாகாத்தனத்தோடு வாழும் "ராமு" கதாபாத்திரத்தின் வெளிப்பாடு அலாதியானது! (பிற்பகுதியில் இரட்டைக் கதாபாத்திர மோதுகைச் சித்திரிப்பில் தடம் மாறி விடுகிறது) "சோப்பு சீப்பு கண்ணாடி" படத்தில் நாயகனாக பாத்திரமேற்றாலும் எள்ளலின் அழகே ஏற்றம் பெறுகிறது. உருவொளியோடு உரையாடும் நாயகிக்கு தன்னிச்சையாக விடைபகரும் வனப்பும், பூட்டப்பட்ட வீட்டுக்குள் மாட்டிக் கொண்ட போதான தனிநடிப்பும் உன்னதமானவை.

"மேஜர் சந்திரகாந்" படத்திலும் மாறுபட்ட பாத்திர வெளிப்பாட்டினை அவதானிக்கலாம். தங்கையான விமலாவின் (ஜெயலலிதா) நடனம் குறித்த ஒவ்வாமையில் அரங்கைவிட்டு அகலும் தருணத்தில் நுணுக்கமான பாவத்தினை வெளிப்படுத்துகிறார். விமலாவின் மரணத்தின்போது அண்மைக்காட்சியில் நேர்த்தியான நெகிழும் முகபாவங்களைக் காட்டுகிறார். படத்தின் பிற்பாதியில் இறுக்கமான முகத்தோடு கண்களின் வழியே சோகத்தினை உந்தித்தள்ளும் "மோகன்" பாத்திரம் அழுத்தமான வெளிப்பாடாகும். இறுதிக்காட்சியில் அநாயசமாகப் படுத்திருக்கும் மோகனின் உடல்மொழி வெகு இயல்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பார்ரா... மறுபடியும் பார்ரா என்று இப்படத்திலே நாகேஷ் பேசும் வசனத்தையே நடிகர் வடிவேலு பின்னர் நகலெடுத்தார்.)

மிகைப்படுத்தப்பட்ட தொல்லைகளின் குவியலில் ஒட்டுக் குடித்தனங் களிடையே ஒதுங்கி வாழும் "மாது" கதாபாத்திரத்தை "எதிர்நீச்சல்" திரைப் படத்தில் தரிசிக்கலாம். இயல்பை மீறிய கதாபாத்திர வெளிப்பாடுகள் துருத்திக் கொண்டிருக்கும் படத்தில் நாகேஷின் நடிப்பானது ஓரளவேனும் உயிர்ப்பைத் தக்க வைக்கும் முனைப்போடு அமைந்துள்ளது. நாகேஷின் பன்முக பரிமாணங் களை இனங்காட்டியதாக "சர்வர் சுந்தரம்" திரைப் படம் அமைந்துள்ளது. முக பாவமும் கரங் களின் நுண்ணசையும், வாத்து நடையும், இடுப்பின் மேற்பகுதியை பின்னோக்கி நகர்த்தும் உடல்மொழி எள்ளலும் குரலினைத் தேவைக்கேற்ப ஏற்றி இறக்கும் (Modulation) பண்பும் இத்திரைப்படத்தில் அபரிமிதமாகவே வெளிப்பட்டுள்ளன.

**ஆ) எதிர்மறைநாயகன்**

தமிழ் சினிமாவின் சூத்திரப்பாங்கான எதிர்மறை நாயகனாக மிளிராது மாறுபட்ட சித்திரிப்பினை வெளிப்படுத்தியவர்களில் நாகேஷின் பங்களிப்பும் சிலாகித்துச் சொல்லப்படவேண்டிய தொன்றாகும். தில்லானா மோகனாம்பாள், அபூர்வ சகோதரர்கள், மௌனம் சம்மதம், மைக்கேல் மதனகாமராஜன், சேரன் பாண்டியன், இந்திரன் சந்திரன் போன்ற படங்களில் "வில்லனாக" வெளிப்பட்டார்.

"தில்லானா மோகனாம்பாள்" படத்தில் கூழைக்கும்பிடுவோடு, எனும் மிச்சம் பழம் கொடுத்து அறிமுகமாகி சவடால் தன்மைமிகு பேச்சால் காரியம் சாதிக்கும் "வைத்தி" கதாபாத்திரத்தின் வில்லத்தனம் வெகு அபாரம்! கொத்தமங்கலம் சுப்புவின் மூலப்பிரதியில் உறைந்து கிடக்கும் பாத்திர வார்ப்புக்கு உயிரூட்டிப் பொருந்திப்போகும் தனித்தன்மை சண்முகசுந்தரம்(சிவாஜி கணேசன்) மோகனா (பத்மினி) பாத்திரங்களின் அளிக்கையினைச் சமன் செய்வதோடு முந்திச் செல்லவும் முற்படுகிறது. இறுதிக்காட்சியில் சிறை செல்லும்போது தன்னிலையில் தாழாத ஏற்றமிகு வெளிப்பாட்டு வசனங்களுடன் கலந்து கரைந்துபோகும் அழகு நாகேஷிற்கு மட்டுமே உரித்தானது.

அதிசயப்பிறவி, சேரன் பாண்டியன், இந்திரன் சந்திரன் போன்ற படங்களை விட மைக்கேல் மதனகாமராஜன் "அவினாசி" கதாபாத்திரச் சித்திரிப்பு நிறைவுத்தன்மை மிக்கது. முதலாளியின் பணத்தை கையாடல் செய்து விட்டுத் தவிப்பதிலும், ஆள்மாறாட்டம் புரிவதிலும் அவினாசி பாத்திரம் அற்புதமான தருணங்களை இனங்காட்டுகிறது. அபரிமித மான ஒப்பனையில் அமச்சூர்த்தனமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பியலோ சாராது திரிசங்குநிலை வில்லனாக "அபூர்வ சகோதரர்களில்" காட்சி தருகிறார். மௌனம் சம்மதம் படத்தின் "பரமசிவம்" பாத்திரம் ரசனை மிகுந்த வெளிப்பாடுகளில் ஒன்றாகும். கைநிறையக்காசு, அனுபவி ராஜா அனுபவி போன்ற படங்களில் இரட்டைக் கதாபாத்திரங்களின் மோதுகையில் மிகைத்தன்மையோடு எதிர்மறை நாயகச் சித்திரிப்பு இடம்பெற்றுள்ளது.

**இ) அங்கதச் சித்திரிப்பு**

நாயகன், எதிர்மறை நாயகன், குணச் சித்திரவார்ப்பென பல்வேறு பரிமாணங்களில் வெளிப்பட்டாலும் அனைத்திலும் நாகேஷின் அங்கதச் சித்திரிப்பு உச்சநிலை பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். எனினும் பல படங்களில் தனித்து எள்ளல் ததும்பும் பாத்திர வார்ப்பாக இடம்பெற்றுள்ளார். காதலிக்க நேரமில்லை, திருவிளையாடல், அன்பே வா போன்றன நினைவுகளில் நீங்காத வீரியம் மிகு நகரும் படிமங்களாகும்.

"காதலிக்க நேரமில்லை" திரைப்படத்தில் "ஒஹோ புரொடெக்ஸன்" செல்லப்பாவின் கேலியும் கிண்டலும் உற்சாக நதியாக உணர்வுகளைக் குளிர்விக்கின்றன. "சச்சு" விற்கு நடிப்புச் சொல்லிக் கொடுக்கும் காட்சியிலும், "பாலையாவிடம் கதை சொல்லும் காட்சியிலும் எள்ளல் உச்சத்தை தொடுகிறது.

திருவிளையாடல் திரைப்படத்தில் தருமி கதாபாத்திரத்தின் வசனங்களும், நடிப்பும் வார்த்தைகளுக்குள் வசப்படாத வசீகரம் மிகுந்தவை! குரல் ஏற்ற இறக்கங்களின் தனித்திறமை வெளிப்பாட்டினை பறை சாற்றுகின்றன. சிவாஜிகணேசனின் உச்சரிப்புச் சீர்மைக்கு நிகராக நாகேஷ் எடுத்தாளும் எள்ளல் மொழியின் Timing அபாரமானது! "சில ஷாட்களில் டயமிங்குடன் வசனம் பேசி நடித்ததில் சிவாஜியை நாகேஷ் முந்திக் கொண்டிருப்பதைக் கண்ட இயக்குநர் ஏ.பி.நாகராஜன் அவற்றை எடிட்டிங்கில் குறைத்தோ நீக்கியோ விட்டு சிவாஜிக்கு முக்கியத்துவம் கொடுக்க எண்ணி அவரிடம் கூறினார். அதற்கு சிவாஜி மறுத்து வேண்டாம் நாகேஷ் நல்ல பண்ணிருக்கான். அந்தக் காட்சி அப்படியே இருக்கட்டும் – என்று சொல்லி விட்டார்" என ஆரூர்தாஸ் "சிவாஜி வென்ற சினிமா ராஜ்ஜியம்" நூலில் (பக்கம்200) குறிப்பிட்டுள்ளார்.

"பணம் பத்தும் செய்யும்! அந்தப்பணம் எனக்குக் கிடைச்சா பதினொன்றும் செய்வன்" என்று வசனம் பேசி, அதற்கேற்றால் போல வாழும் "ராமையா" பாத்திரத்தை அன்பே வா படத்திலே காணலாம். (தேங்காய் சீனிவாசன், சோ போன்று எம்.ஜி.ஆர் சார்ந்த பிரசாரத்தை எளிய வடிவில் மக்களிடம் சுவற வைக்க இப்படத்தில் நாகேஷ் பயன்படுத்தப்பட்டள்ளமையும் தெளிவாகின்றது) J.Bயின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எம்.ஜி.ஆர்) வீட்டை அவருக்கே வாடகைக்கு விடும் கதாபாத்திரத்தில் சுவைஞர்கள் சிரித்தே மீ ஆயுள் பெறும் வகையில் நடித்துள்ளார். கண்ணம்மாவுடன் (மனோரமா) காதல் மொழி பகரும் போதும், பணத்திற்காக பாசாங்கு அதிகாரம் காட்டும் போதும் உச்சமான உவகையினைத் தந்து மகிழ்விக்கிறார்.

**ஈ) குணச்சித்திர வார்ப்பு**

அங்கதச் சித்திரிப்பு உச்சநிலைபெற்ற நாகேஷின் திரைப்படங்களிலும் குணச்சித்திரவார்ப்பு சிறப்புறவே அமைந்திருந்தது. எனினும் எள்ளலைச் சற்றே ஒதுக்கி மாறுபட்ட குணச்சித்திரப்பண்பினை வெளிக்கொணர சில இயக்குநர்கள் முயன்றனர். "நம்மவர்" திரைப்படம் குறிப்பிடத்தக்க அளிக்கையாகவே அமைந்துள்ளது. கல்லூரிப் பேராசிரியரான ராவ், மகளான நிர்மலாவின் (நடன இயக்குநர் பிருந்தா) மரணத்தில் தலையணை தேடி எடுத்து இறந்த உடலுக்கு வைக்கும் போதும், கொள்ளி வைத்து விட்டுத் தரையில் வீழ்ந்து குமுறி அழும் போதும் அற்புதமான நடிப்பினை இனங்காட்டியுள்ளார். வசூல்ராஜா M.B.B.S திரைப்படத்தில் கமல்ஹாசன், பிரகாஸ்ராஜ், நாகேஷ் மூவரும் சந்திக்கும் காட்சியில் ஏனைய இருவரது நடிப்பினையும் மிக இலகுவாக Overtake செய்யும் நாகேஷின் Performance விதந்துரைக்கத்தக்கது. கமல்ஹாசனது பல திரைப்படங்களில் நாகேஷின் குணச்சித்திர வார்ப்பினைத் தரிசிக்க முடிகிறது. எனினும் அவையனைத்தும் நாகேஷின் யானைப்பசிக்கு சோளப்பொரி ரகம் தான்! பலர் பாராமுகமாகப் பட்டினி போட்டதுபோது கமல்ஹாசன் சோளப்பொரியாவது போட்டாரே என்று ஆறுதலடைய முடிகிறது. "தேசியகீதம்" படத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகியாக நடித்துள்ளார். படத்தின் ஆரம்பத்தில் எழுதிக் கொடுத்த வசனங்களை ஒப்பிப்பது போன்ற இயல்புத் தன்மையற்ற அளிக்கை துருத்தினாலும் பிற்காட்சியில் சற்றே மீண்டு விடுகிறார்.

இது பேராய்வுக்குரிய பொருண்மை! வியாசத்தின் விரிவஞ்சி நாகேஷ் குறித்த பதிவுகளைக் குறுக்கியுள்ளேன். தமிழ்சினிமாவுக்கு முறிப்பு நடனத்தை அறிமுகப்படுத்தியவர். "நான்" படத்தில் தாய் – மகன் என இருவேடங்களில் நடித்துள்ளார். (தாய் கதாபாத்திரத்தின் உடல் மொழியோ, உச்சரிப்போ அழுத்தம் பெறவில்லை) சாமர்த்தியமான சொல்லாடல், முகத்தின் விஷம அசைவுகள் போன்றன ஊடாக எள்ளலினை நிகழ்த்த முடியாத பிரேதக் கதாபாத்திரத்தினை "மகளிர் மட்டும்" திரைப்படத்தில் ஏற்று நடித்தார். (எனினும் தீவிரவாதியின் பிரேதத்தை அங்கதப் பொருளாக்கியமை ஏற்புடையதன்று) நாகேஷ் நடித்த இறுதிப்படம் தசாவதாரமாகும். ஜனவரி 31 – 2009 அன்று மருத்துவமனையில் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்மக் கலையும் தமிழ் சினிமாவும்
## –கால்கோள் நிலைக் குறிப்புகள்–

கலை மரபியல் காப்பு போலிமையைக் காலம் அப்பட்டமாக கேலிக்குள்ளாக்கும் சூழலிலும் பண்பாட்டு நீட்சியில் நிரந்தர விரிசல் தென்படும் தருணத்திலும், தொன்மம் சார் புகழ்ச்சியுடான மகிழ் நெறியில் தமிழினம் திளைத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் இறும்பூது உரிமம் கோரும் மருத்துவக் கலைகளில் ஒன்றாகவே "வர்மக் கலை" சுட்டப்படு கின்றது. எனினும் குறித்த இனக் குழுமத்தின் ஏகபோக மாக வர்மக் கலையினை நிறுவ முற்படும்போது, புராதன காலத்தில் கலைகளின் பரஸ்பர பரிமாற்றச் செல்நெறியினையும் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

தமிழினம் வர்மக் கலையினை முதுசொமாக வரித்துக் கொள்ள பிரயத்தனப்பட்டாலும் அக்கலை குறித்த கனதியான நூல் எதுவும் தற்போது கைவசமில்லை. சிவபெருமானே வர்மக் கலையின் "பிதாமகன்" என்றும் அகத்தியர், போகர் போன்ற முனிவர்களின் எழுத்துருவாக்கமே வர்ம சாஸ்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றும் பல்வேறு கர்ண பரம்பரைத் தகவல்கள் இயம்புகின்றன. வர்ம சூத்திரம், வர்ம சூட்சுமம், வர்மப் பீரங்கி, வர்மக் கண்ணாடி என வர்மக் கலை நுட்பத்தினைக் கட்டவிழ்க்கும் சில நூல்கள் கிடைத்துள்ளன. எனினும் அவையனைத்தும் வழுக்களும் சுயமுரண்பாடுகளும் மிகுந்து யாப்பின் சீர்மை தகர்த்த பிரதிகளாக அமைந்துள்ளன. மேலும் விருத்த வடிவத்தில் அமைந்து அகத்தியர் காலம் குறித்த கருத்தியலை நொறுக்கி விடுகின்றன. ஒவ்வொரு நூலிலும் சில வர்மங்கள் முரணி நிற்பதோடு, வர்மப் புள்ளிகளின் எண்ணிக்கையிலும் மாறுபடுகின்றன. சித்தர்களிடத்தில் தோற்றமெய்தி வாய்மொழி மரபில் கடத்தப்பட்டு பிற்காலத்தில் ஏட்டுருவம் பெற்றிருக்கலாம் என சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சரீரத்திலுள்ள வர்மப் புள்ளிகள், பிரயோக நுட்பம் என்பவற்றின் அடிப்படையில் படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம், நோக்குவர்மம் என வர்மக் கலை நான்கு வகுதிகளுக்குள் அடக்கப்படுகிறது (தடவுவர்மம், நக்குவர்மம் என்னும் உப பிரிவுகளும் நாடிகளை ஆதாரமாகக் கொண்டு வாத வர்மம், பித்த வர்மம், ஐய வர்மம், உள்வர்மம் என்னும் பிரிவுகளும் சில நூல்களில் இடம்பெறுகின்றன.). சரீரத்திலுள்ள வர்மப் பகுதிகளில் மோதுகை நிகழ்த்துவதே படுவர்மமாகும். உயிரிழக்கும் விழுக்காடு உபரியானது என்பதால் மிக நுணுக்கமான ஆளுகைக்குரிய ஆபத்தான வர்மமாகும். மீத்தேர்ச்சியுடைய ஒருவராலேயே செய்யக் கூடியது. படுவர்மப் புள்ளிகளில் அடிபட்டால் மறு கணமே மயங்கி விழ நேரிடும். உயிராபத்துக் குறைந்த தொடுவர்மப் புள்ளிகளில் மோதுகை நிகழ்த்துவதே தொடுவர்மமாகும். படுவர்மம் போலல்லாது சாதுவான வர்மமாக அமைவதால் எளிதில் குணப்படுத்தலாம். விரலை நுட்பமாகப் பயன்படுத்தி ஒருவரின் உடலில் மிக மிக லேசாகத் தட்டுவதனூடாகப் பாதிப்பினை ஏற்படுத்துவதே தட்டுவர்மமாகும். பார்வையினை ஒன்றுகுவித்து உற்று நோக்கி அதனூடாக விளைவினை வருவிக்கக் கூடியதாக நோக்குவர்மம் அமைகின்றது. மீநுண்தேர்ச்சியின் எல்லையில் நோக்குவர்மப் பரிச்சயம் சாத்தியப்படும்.

புதிர்ப் பிணிகளின் பரிபாலனத்தில் அகப்பட்ட மக்களை விடுவிக்கும் மருத்துவமாகவே வர்மப் பரிகார முறை இருந்துள்ளது. எந்தெந்த வர்மப் புள்ளிகள் எங்கெங்கு ஒடுங்குகின்றன, அவற்றுக்குச் சமாந்தரமான அலைவரிசையையுடைய இதர வர்மப் புள்ளிகள் எவை என்பன குறித்த துல்லியமான புரிதலின் பின்னரே வர்மப் பிரயோகம் அனுகூலமாகும். கிழிந்த காயத்திலிருந்து வெளியேறும் குருதியை கட்டுப் போடாமல் வர்ம நரம்பால் நிறுத்த முடியுமாம்! தற்கால மருத்துவத்தின் நரம்பியல் முறையே பழங்காலத்தில் வர்ம முறையாகச் சுட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கம், சீனம் முதலிய தேசங்களில் வர்மக் கலை பரவியுள்ளது. கேரளத்தில் ஈழவர் என்ற குழுமத்தினர் வர்மக்கலையில் மீத்திறன் பெற்றவர்களாக இருந்துள்ளனர். வர்மக் கலையைப் பயின்று மீநுண்தேர்வடைந்தோர் "வர்மாணி ஆசான்" என அழைக்கப்படுவர். கேரளாவின் திருவிதாங்கோடு சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக அமைந்த, இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வர்மாணி ஆசான் பரம்பரையினரைக் காணலாம். கேரளத்தில் வர்மக் கலையானது களரிப் பயிற்று என்னும் சமர் முறை தற்காப்புப் பயிற்சியின் மீவித்தை வகுதியைச் சேர்ந்ததாகும்.

தமிழ்த் திரைப்படங்களில் இயக்குநரின் மேதமைக்கு பொருத்தமாக, நாயக விம்பத்தினை மெருகூட்ட வர்மக் கலை குறித்த காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தியன், ஏழாம் அறிவு, கில்லி ஆகிய படங்களில் வர்மப் பிரயோகம் குறித்த புனைவுகள் இடம்பெற்றுள்ளன (வேறு சில படங்களில் "எள்ளல்" சார் மீட்டெடுப்பாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.). வர்மக் கலை குறித்த அத்திபாரத் தினை சறுக்கலின்றி முதன்மைப் புள்ளியாக வைத்த படமாக "இந்தியன்" திகழ்கிறது. ஓரளவு ஏற்புடைய நூல் வழி சார் செய்திகளை புனைவாக்கியுள்ளது (படத்தின் நாயகனான கமல்ஹாசன் வர்மக்கலை சார்ந்த சில ஆரம்பப் பயிற்சிகளை பெற்றுக் கொண்டார்.) தட்டுவர்மத்தின் ஆளுகை படத்தில் முனைப்புப் பெற்றுள்ளது. முதுமை நாயகனிடம் வீரத்தின் நீட்சியைத் தக்க வைக்கவே வர்மத் தகைமை உத்தி கையாளப்பட்டுள்ளது. இந்தியன் தாத்தா (அமெரிக்கக் கலைஞர் மைக்கேல் வெஸ்ற்மோரின் ஒப்பனையில் கமல்ஹாசன்) "கோப்ரேசன் கொமிஸ்னரை" கொல்லுமிடத்தில் தொலைபேசி, அழைப்புமணி என்பவற்றை கையாள விடாது விரலினால் தாக்கி செயலிழக்கச் செய்கிறார். பிரேதப் பரிசோதனை அறிக்கையில் நரம்பு மண்டலத்தில் விநோதமாகத் தாக்கப்பட்டு இறந்தமை தெரிய வருகிறது. C. B. I. அதிகாரியான கிருஷ்ணசாமி (நெடுமுடிவேணு) விவரமறியக் கேரளா செல்கிறார். தற்காப்புக்கலைகுரு ஒருவரின் வாய்மொழியாக வர்மக் கலை குறித்த செய்திகள் பார்வையாளனுக்கு புரிய வைக்கப்பட்டு விடுப்பார்வம் தகர்க்கப்படுகிறது. "எங்க ஆசான் கிட்ட ஒன்றிரண்டு தீவிரவாதிங்க வந்து கத்துக்கிட்டு போனாங்க" என்ற துப்புக் கிடைக்க, 40களில் வெளிவந்த பத்திரிகைகளை தூசி தட்டி, சேனாபதி (கமல்ஹாசன்–இந்தியன்) என்ற கொலையாளியைக் கிருஷ்ணசாமி கண்டறிகிறார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இக்கலைக்கு தடை விதிக்கப்பட்டிருந்த தாகவும் (தமக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என ஆங்கிலேயர் அஞ்சினர்.) பன்னிரு வருடக் குருகுலவாசத்தில் மாணவனின் நற்பழக்கவழக்கங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்ட பின்னரே கற்றுக் கொடுக்கப்படும் கலையாகவும் நூல்வழித் தரவுகள் குறிப்பிடுகின்றன. எனவே, தீவிரவாதியான சேனாபதி (பின்னர் தான் இந்திய தேசிய இராணுவத்தில் –I. N. A.– இணைந்து கொள்கிறார்.) வர்மக் கலையினைச் சுலபமாகப் பயின்று ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் காட்சி நம்பகத் தன்மைக்கு முரணானது.

வர்மக் கலையின் அடிப்படை யதார்த்தத்தை மீறி இருட்சாயை உட்சரடுகளை புனைவாக்க இயக்குனர் விரும்பவில்லை என்பதையும் ஒரு காட்சியில் தெளிவாக்கியுள்ளார். சேனாபதி கைவிலங்கு போடப்பட்ட நிலையில் தப்பிக்கத் தவிக்கிறார். "என்ன சேனாபதி? நோக்குவர்மத்தாலயே விலங்கை உடைச்சிடலாம் எண்ணு பார்க்கிறீங்களா?" என கிருஷ்ணசாமி கேலி செய்கிறார். மிகை மனோபாவத்தின் தலைமை இயக்குனரான "ஷங்கர்" வர்மக் கலையின் எல்லையினை அபரிமிதமாக கடந்து பயணித்து பார்வையாளரின் காதில் பூச்சுற்ற முனையாமைக்காகப் பாராட்டப்பட வேண்டியவர்!

வர்மக் கலையினை தமிழினத்தின் உரிமமாக நிறுவும் திரைப்படமாக "ஏழாம் அறிவு" அமைகிறது. பல்லவ மன்னனின் மூன்றாம் இளவரசனான போதிதர்மன் இந்தியாவிலிருந்து சீனா சென்று "நான்ஜென்" கிராமத்தில் வாழ்ந்து Shaolin Temple என்ற புத்த மதக் கோயிலையும் சீன தற்காப்புக் கலைகளையும் உருவாக்கியதாகப் படம் எடுத்துரைக்கிறது. சீனா, தற்காப்புக் கலையில் நீண்ட நெடிய வரலாற்றினை உடைய தேசம்! தென்தமிழகத்தில் "சீனடி" என்ற சொல்லின் வழங்குநிலை சீனத் தற்காப்புக் கலையின் பரவலாக்கத்தினை வெளிப்படுத்துகிறது. மேலும் "போகர்" சீனாவிலிருந்து இந்தியா வந்ததான மரபுவழிக் கதை "ஏழாம் அறிவு" என்ற நாணயத்தின் (?) இன்னொரு பக்கமாக இருக்கிறது (குங்ஃபூ இந்தியாவிலிருந்து உலகம் முழுமைக்கும் பரவியதான செய்தியினை அறிந்து, அக்கலையின் நுணுக்கங்களை அறிய புரூஸ் லீ இந்தியா வந்து அதீத ஏமாற்றத்தோடு திரும்பினார்.). மயிலை சீனி, வேங்கடசாமி, கா. இந்திரபாலா ஆகியோர் போதிதர்மன் காஞ்சிபுரத்திலிருந்து இந்தியா சென்ற வரலாற்றுத் தகவலினை வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் வர்மக் கலையினை தமிழரின் ஏகபோக உரிமமாக நிறுவுவதில் தான் சிக்கல்கள் தென்படுகின்றன.

7 ஆம் அறிவு திரைப்படத்தில் "நான்ஜென்" கிராமத்தை "Hong See" என்ற வைரசு தாக்குகிறது. போதிதர்மன் தமிழ் மருத்துவத்தினூடாக மக்களைக் காப்பாற்றுகிறார். கிராமத்தை அழிக்க வரும் எதிரிகளை நோக்குவர்மத்தினூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்கிறார். நோக்குவர்மம் படம் முழுமையும் ஆக்கிரமித்துள்ளது. சரீரத்தில் உயிர் ஒடுங்கி நிற்கும் புலங்கள் அமிர்த நிலைகள் எனப்படும். அமிர்த நிலைகளில் மோதுகை நிகழின் மரணம் சம்பவிக்கும். அமிர்த நிலைகள் இடம்பெயரும் தன்மையுடையன. அவற்றினை ஏகாக்கிர சிந்தையூடாக உற்றுநோக்கி நகர வைப்பதே நோக்குவர்மம் என நூல்கள் குறிப்பிடுகின்றன. 7ஆம் அறிவு திரைப்படமோ நோக்குவர்மத்தின் எல்லைகளைத் தாண்டி சொப்பன சஞ்சாரம் புரிகிறது. போதிதர்மன் விரல்களை அசைக்க சருகுகள் சிறு புயலாகி எதிரிகளை தாக்குகின்றன. எதிரி எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் நோக்குவர்மத்தால் கட்டுப்படுத்தலாம் என்பதெல்லாம் வர்மக் கலை குறித்த உயர்வு நவிற்சிக் கருத்துக்களே! படத்தில் சுபா (ஸ்ருதி ஹாசன்) அரவிந்திடம் (சூர்யா) மிகத் தெளிவாக "Hypnotism! நோக்குவர்மம் என்பது இங்கிருந்து போனது தான்" என்று புரிய வைக்கிறார். பிறகு எதற்கு மாயாஜால வித்தைக்காரனாக டோங் லீ (ஜானி ட்ரை நுயென்) செயற்படுகிறார்?

Land mark ஊழியர், Credit card பிரிவிலுள்ள ஊழியர் என்னும் இருவர் மீதும் நோக்குவர்மம் பிரயோகிக்கப்படுவது நம்பகத்தன்மையோடு அமைகிறது. குறித்த நபரைத் தன்வசப்படுத்தி வினாக்களுக்கு விடை பகர வைக்கிறார். ஆனால், எதிர்நாயகனின் மனதில் நினைப்பது எல்லாமே மற்றையோர் செய்வது "நோக்குவர்மம்" குறித்த எல்லை தாண்டிய அபரிமிதமான வெளிப்பாடேயாகும். "பல வருடக் கடினப் பயிற்சிக்குப் பின் கைவரக் கூடிய குங்ஃபூ கலையை ஒரு அப்பாவிப் பெண்ணை அரை வினாடி உற்றுப் பார்ப்பதன் மூலமே பெற்றுக் கொடுத்து விடுகிறார்" என்று B. R. மாதவன் நோக்குவர்மம் குறித்த சண்டைக் காட்சியினை கிண்டல் செய்துள்ளார் (இங்கே திரைக் கதைகள் பழுது நீக்கித் தரப்படும்–பக்கம் 117). டோங் லீயால் நாயகனை மட்டும் நோக்குவர்மத்தால் கட்டுப்படுத்த முடிய வில்லை. போதிதர்மனின் குருதி எனப் போலிக் காரணத்தைக் கூறி "இயக்குநர்" ஏ. ஆர். முருகதாஸ் தப்பித்துக் கொள்கிறார். ஆனால், உண்மை அதுவன்று! இருமை எதிர்நிலை உறவின் மோதுகையில் நாயகன் MASS HERO என்பது தான் நிஜக் காரணம்! நோக்குவர்மம் குறித்த எல்லைகளை தன்னிச்சையாகத் தாண்டிச் சென்றாலும் ஆணி வேர் கூட அரிப்புக்குள்ளான பின்பும் பூக்களுக்கு ஏங்கும் தமிழின இறும்பூது தளத்தில் போதிதர்மன் குறித்த ஆவணப் பதிவினை (?) சில நிமிடங் களாவது காட்சிப்படுத்தியமைக்காக ஏ. ஆர். முருகதாஸ் பாராட்டுக்குரியவர்.

வர்மக் கலை என்ற வார்த்தையினை ஒட்டுமொத்தமாக சலவை செய்து நீக்கி விட்டு, நரம்பினைக் குறி பார்த்துத் தாக்கும் அங்க வெட்டுமுறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பட்டமான காட்சிப்படுத்தல்களை "கில்லி" திரைப்படத்தில் காணக் கூடியதாக வுள்ளது. முத்துப்பாண்டி (பிரகாஸ்ராஜ்) என்ற ஒழுக்கமற்ற கதாபாத்திரத்திற்கு வர்மத்தின் புனிதம் வசப்படாதென்பதால், பெயரைப் பிரித்தெடுத்து விட்டு பாணியை மட்டும் "கில்லி" அகத்துறிஞ்சியுள்ளது. நாயகனை விட மேம்பட்ட தகுதிகளை எதிர்நாயகனிடம் செப்பனிட்டு, அதன் பின்னர் எதிர்நாயகனின் வீழ்கையினைப் பதிவு செய்தலே பாமர மக்களிடம் போலி விம்ப வழிபாடுகளை காவிச் செல்ல துணை செய்யும் என்பதால் "நரம்படி வித்தை" கில்லியில் இணைக்கப்பட்டுள்ளது (ஜடா வர்மன் என்ற பாண்டியன் வர்மக் கலையில் சிறப்புத் தேர்ச்சியுடையவன் என்னும் செய்தி மதுரையில் வழக்கிலுள்ளது. இதனால் "மதுரை முத்துப்பாண்டிக்கு" இயக்குநர் தரணி வர்மத்தை பொருத்திப் பார்த்திருக்கிறார்.).

இறுதி காட்சியில் விரல் வழியே தட்டுவர்மத்தைக் கையாண்டு வர்மப் புள்ளிகளைக் குறி வைத்து முத்துப்பாண்டி தாக்க வேலு (விஜய்) மயங்கி விழுகிறான். எனினும் பொதுப் புத்தியை விசனத்திற்கு உள்ளாக்கும் வகையில் வர்ம அடியிலிருந்து தன்னிச்சையாக விடுவித்துக் கொண்டு (கையையும் காலையும் சுழற்றுகிறார். அனைத்தும் இயல்பு நிலைக்கு வந்து விடுகிறது.) எதிர்நாயகனை துவம்சம் செய்கிறார். படத்தின் நகர்வில் வேகம் இருக்குமளவுக்கு வர்மக் கலையில் துளியும் விவேகம் தென்படவேயில்லை!

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது வர்மக் கலையினை வணிக நோக்கிலே காட்சிப்படுத்தியிருக்கும் படங்களில் "இந்தியன்" இயன்ற வரை தட்டுவர்மத்தின் எல்லைகளை மீறாத தன்மையோடு அமைந்துள்ளது. "நோக்குவர்மம்" குறித்த படிமங்களை 7 ஆம் அறிவு தந்திரக் காட்சிகளைச் சமன் செய்யும் நுட்பத்தோடு கையாண்டுள்ளது. "கில்லி" கோமாளித்தனத்தின் நீட்சியாகப் பதிவு செய்துள்ளது.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகிலத் தரமான
## ஆப்கானிஸ்தான் சினிமா

மதத்தின் ஒளி வட்டத்தினை ஒடுக்குமுறைச் செல்நெறிக்கு உறுதுணையாக அவாவும் தலிபான்களின் மகளிர் விரோத மனப்பாங்கின் காத்திரமான பதிவாக "OSAMA" என்ற துன்பியற் படிமம் காணப்படுகின்றது. siddiq Barmak என்ற ஆப்கானிஸ்தான் இயக்குநர் மெய்ந்நிகழ்வொன்றினை பின்புலமாகக் கொண்டு "ஒசாமா" திரைப்படத்தினை உருவாக்கியுள்ளார். பொருளாதார அழுத்தத்தால் ஆண் வேடந்தரிக்கும் சிறுமியின் அவலத்தினை அற்புதமான ஊடகமொன்றின் மொழியில் அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

தலிபான்களின் வன்மம் பிரவாகிக்கும் ஆட்சியில் பெண்களுக்குத் தொழில் நாடும் உரிமை மறுக்கப்பட்ட சூழலில் பாட்டி – தாய்– மகள் என்ற மூவரை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட குடும்பம் வாழ்வினை எதிர்கொள்ளத் தடுமாறுகிறது. போரின் உக்கிர பசிக்கு ஆடவர்கள் இரையானதால், பன்னிரு வயதுச் சிறுமிக்கு ஆண்வேடமிட்டு வேலைக்கு அனுப்பத் தயாராகின்றனர். சிறுமியின் தலைமுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்கப்படுகின்றது. சிறுமியோ தலைமுடி மீது கொண்ட உச்சமான பற்றாலும், அறியாமையாலும் சாடி யொன்றில் கத்தரிக்கப்பட்ட பகுதியினை வைத்து நீரூற்று கிறாள். தந்தையின் நண்பரது ரொட்டிக்கடையில் அச்சமயமான உணர்வுகளோடு சிறுமி பணிபுரிகிறாள். உல்லாச உலகினை இழந்துவிட மனமின்றிக் கடையினுள் "ஸ்கிப்பிங்" விளையாடுகிறாள். சிறுவர்களை வலுக்கட்டாயமாகப் படையில் இணைக்கும் தலிபான் ஒருவன், அவளை பலவந்தமாக அழைத்துச் சென்று விடுகிறான். ஏராளமான சிறுவர்களுக்கிடையில் "எஸ்பன்டி" என்ற சிறுவன் ஏற் கெனவே அவளை நன்கறிந்ததால் நட்புக் கொண்டு ஆண் வேடங்கலையாமற் பாதுகாக்க முயல்கிறான். அவளுக்கு "ஓசாமா" என்று பெயரிடுகிறான். எனினும் மென் கரங்களும் மிருதுவான பேச்சும் சிறுவர்களை ஐயங்கொள்ள வைக்கின்றன. நம்பகத்தன்மையை ஏற்படுத்த "ஓசாமா" மரத்தின் மேலேறுகிறாள். கீழிறங்க முயன்று இயலாத பட்சத்தில் தலிபான்களால் இறக்கப்பட்டு, அச்சத்தைப் போக்கு வதற்காக கயிறு கட்டி கிணற்றிலிறக்கப்படுகிறாள். வெளியேற்றப்பட்டபோது கால்களிடையே பெண்மைக்குரித்தான குருதிக்கசிவு தென்பட வேடங்கலைகிறது. குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கும் நாளில், முதியவர் ஒருவருக்கு நான்காவது மனைவியாக்கப்படுகிறாள். கிழவன் கழுதை வண்டியில் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். இன்பம் துய்த்த பின் வெந்நீரில் குளிக்கிறான். சிறுமி "ஸ்கிப்பிங்" ஆடிய முன்னைய காட்சி ஒன்று தோன்றி மறையப் படம் நிறை வடைகிறது.

யுத்தம் பெண்களின் மீது நிகழ்த்தி வரும் வன்மத்தின் அதிர்வினை "ஓசாமா" நன்கு வெளிப்படுத்தியுள்ளது. தலிபான்களின் கொடூர முகத்தை படம் பல்வேறு இடங்களில் பதிவாக்கியுள்ளது. மகிழ்நெறிப் பாடல் புலம்பல் ஒலியாக மாறுதல், காணொளிப் பதிவாளனை சுட்டுக் கொல்லும் போது "பர்தா"வில் தெறிக்கும் உதிரத்துளிகள், வேக நீர் பாய்ச்சும் போதான குழந்தையின் அவலம் போன்ற பல காட்சிகள் சிறப்பாக அமைந்துள்ளன. பனித்திரை சுவறிய கண்ணாடியில் வரையப்படும் தலைமுடியுடைய சிறுமியின் படிகக் கோட்டுருவும் மறுபுறம் தெரியும் பெண்களின் ஓட்டமும், தொடரும் தலிபான்களின் வாகனமும் குறித்த காட்சி உன்னத கவிதையாகவே மாறிவிடுகின்றது. பெண்ணுடலின் வெளிப்பாடுகளை கொண்டு வணிக ஆதாயம் தேடாமல் விடுதலை குறித்த பிரக்ஞையினை தொற்ற வைக்கும் "ஓசாமா" கனதியான படைப்பு முயற்சி யென்பதை தனது ஒவ்வொரு சட்டகத்திலும் உறுதி செய்துள்ளது.

■II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெவிட்டாத திரைப்படிமம்
## - Bicycle Thief -

விக்ரோறியோ டி சிகா இயக்கத்தில் வெளிவந்த Bicycle Thief திரைப்படம் உலக சினிமாவின் தரவரிசையில் முதலிடத்தில் வைத்து நோக்கப்படுகின்றது. 1948 இல் வெளிவந்த இத்திரைப்படத்தின் இத்தாலியத் தலைப்பு Ladri Di Biciclette. அற்புதமான அனுபவங்களைத் தொற்ற வைக்கும் உன்னத காட்சிகளின் கோவையாக நகரும் இச்சினிமாவை ஒவ்வொரு திரைச்சுவைஞனும் பார்த்தே தீர வேண்டிய படைப்பு என்று குறிப்பிட்டால் அபரிமிதன்று. நியோரியலிசப் பாணியில் சிறுசிறு சம்பவங்களினூடாக சமூகப் பிரக்ஞையினை படிமப்படுத்துகிறது. இயக்குநரின் மேதமையால் கதாபாத்திரங்களோடு சேர்ந்து நாமும் ரோம் நகர வீதிகளில் பயணிப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. யதார்த்தத்தின் அலை வரிசையோடு ஒன்றிப் போய் ஒவ்வொரு சட்டகத்துள்ளும் அதிர்வுகளைத் தரிசிக்கின்றோம். திரும்பத் திரும்பப் பார்த்தாலும் தெவிட்டாத திரைப்படிமமாக மிளிர்கிறது.

தொழில் வேட்கையோடு அலையும் நாயகனான அன்ரோனியோ ரிச்சிக்கு (Lamnberto



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

maggiorani) விளம்பரப் பிரசுரம் ஒட்டும் வேலை கிடைக்கிறது. சைக்கிள் ஒன்று இருந்தாலே பணி உறுதி செய்யப்படும் என்ற நிபந்தனையால், மனைவி மரியா (Lianella Carell) படுக்கை விரிப்புகளை விற்று, அடைமானம் வைத்த சைக்கிளை மீட்க உதவுகிறாள். வேலைக்குச் சேர்ந்த முதல்நாள் விளம்பரப் பிரசுரத்தினை ஒட்டிக் கொண்டிருக்கும் தருணத்தில் திருடன் ஒருவன் (Vittorio Antonucci) சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிவிடுகிறான். துரத்திப் பிடிப்பதில் தோல்வி கண்ட ரிச்சி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்து விட்டு, நண்பனான பையாக்கோவின் (Gino Salt aiola) உதவியை நாடுகின்றான். மகனான புரூனோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வேலை செய்கிறான். சிறுவனான புரூனோவும் தந்தையோடு இணைந்து சைக்கிளைத் தேடுகிறான். திருடப்படுகின்ற சைக்கிள்கள் உதிரிப்பாகங் களாக்கப்பட்டு விற்கப்படுவதால், அத்தகைய இடங்களில் தேடுகின்றனர். மழையால் தேடல் தடைப்படும் தருணமொன்றில் சைக்கிள் திருடன் வயோதிபர் ஒருவருடன் பேசிக் கொண்டிருப்பதை ரிச்சி காண்கிறான். திருடனைப் பிடிக்க முடியாது போகவே, வயோதிபரைப் பின் தொடர்கிறான். கிழவனை நழுவவிட்ட சந்தர்ப்பத்தை தவறென்று புரூனோ சுட்டிக்காட்ட, ரிச்சி கோபங் கொண்டு புரூனோவின் கன்னத்தில் அறைகிறான். பின்பு இருவரும் சமாதானமாகி உணவகமொன்றில் சாப்பிட்டு விட்டு ஆருடம் கூறும் பெண்ணொருத்தியிடம் செல்கின்றனர். "சில வேளை கிடைக்கலாம்" என்று அவள் கூறுகின்றாள்.

ரிச்சியும் புரூனோவும் பயணிக்கும் தெருவிலே திருடன் எதிர்ப்படுகிறான். எனினும் திருடனுக்கு ஆதரவாகக் கூட்டம் கூடிவிடுகிறது. திருடனோ மயங்கிவிழுந்து பாசாங்கு செய்கிறான். புரூனோ காவலரை அழைத்து வருகிறான். ஆதாரமில்லாததால் திருடன் விடுவிக்கப்படுகிறான்.

ரிச்சியும், புரூனோவும் பேருந்துத் தரிப்பிடம் செல்கின்றனர். புரூனோவை "டிராம்" வண்டியில் ஏறுமாறு கூறிவிட்டு ரிச்சி சைக்கிள் ஒன்றை திருட முயன்று மாட்டிக் கொள்கிறான். புரூனோ ஏறுமுன்பே டிராம் வண்டி புறப்பட்டதால் தந்தை திருடுவதையும், திட்டும் அடியும் வாங்குவதையும் கண்டு மனமுடைந்து தந்தையை நோக்கி செல்கிறான். ரிச்சியோ அவமானத்தால் குறுகி ஆற்றாமையால் அழுகிறான். மகனின் முன்னிலையில் நிகழ்ந்த சம்பவத்தால் நிலைகுலைந்து சோகத்தோடு நடக்கிறான். சிறுவனான புரூனோ தந்தையின் உணர்வுகளை புரிந்து கொண்டு ஆதரவோடு கையைப்பற்றியபடியே செல்கிறான். கவித்துவமான துன்பியலை வெளிப்படுத்தும் இத்தகைய அழகான தருணத்தோடு படம் முடிவடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தின் நாயகனான Lamberto maggiorani தொழில்முறைக்கலைஞர் அல்ல. ஆலைத் தொழிலாளியான அவரது அபார நடிப்பாற்றல் வியப்புக்குரியது. சைக்கிளைத் தொலைத்த பின் இயலாமையோடு ஏணி மீது அமர்ந்திருக்கும் முகபாவம் அற்புதமானது. இறுதிக் காட்சியிலும் மகனுக்கு முன்னிலையில் குறுகிப் போய் நிற்குமிடத்தில் வெளிப்படுத்தும் உடல்மொழி வெகுவாகப் பாராட்டத்தக்கது. படப்பிடிப்பினை வேடிக்கை பார்க்க வந்த Enzostaiola என்ற சிறுவனையே புரூனோ பாத்திரத்தில் இயக்குநர் டிசிகா நடிக்க வைத்துள்ளார். கையைத் தாடையில் வைத்தபடி வயோதிபரை நோக்கும் புரூனோவின் பார்வை வசீகரமான கவிதை!

ஆருடம் கூறும் பெண்ணின் வீட்டுக்கு வெளியே நிகழும் ஆட்டம், பயணத்திற்காக நிற்கும் நீண்ட வரிசை, குமிழ் ஊதியபடி திரியும் நபர், கரண்டியால் விதவிதமான உணவுகளை உண்ணும் செல்வந்தக்குடும்பச் சிறுவன், மழையில் கலைகின்ற வியாபாரம் என்றவாறாக அனைத்துக் காட்சிகளும் கலாபூர்வமான ஆளுமையோடு பதிவாகியுள்ளன. போருக்குப்பின்னரான இத்தாலியப் பொருளாதாரம் மீது உட்சரடான விமர்சனத்தை இயக்குநர் முன்வைத்துள்ளார். சோர்வான முகத்தோடு நடுத்தர அகவையுடைய நபர் ஒருவர் "பைனாக்குலர்" ஒன்றை அடைமானம் வைக்கிறார். "போருக்கு பிந்தைய உலக சினிமாவின் தலைசிறந்த ஒரு படைப்பாளியால் உருவாக்கப்பட்ட இணையற்ற காட்சி அது" என இயக்குநர் மிருணாள்சென் விதந்துரைக்கின்றார்.

■II


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

### (அ) நூல்கள்


சாரு நிவேதிதா - சினிமா: அலைந்து திரிபவனின் அழகியல்
உயிர்மை பதிப்பகம் (டிசம்பர் 2007 -முதற்பதிப்பு)

சாரு நிவேதிதா - நரகத்திலிருந்து ஒரு குரல்
உயிர்மைபதிப்பகம் (முதற்பதிப்பு - டிசம்பர் 2009)

B.Rமகாதேவன் - இங்கே திரைக்கதைகள் பழுது நீக்கித் தரப்படும்
நிழல் வெளியீடு (முதற்பதிப்பு - டிசம்பர் 2011)

B.R.மகாதேவன் - மணிரத்னம் தலைகீழ் ரசவாதி
நிழல் வெளியீடு ( முதற்பதிப்பு டிசம்பர் 2011)

கார்த்திகேசு சிவத்தம்பி - தமிழர் பண்பாட்டில் சினிமா
நியூசெஞ்சரி புக் ஹவுஸ்(பி)லிட் வெளியீடு
(முதற் பதிப்பு - யூன் 2010)

அ.ராமசாமி - ஒளிநிழல் உலகம் - தமிழ் சினிமா கட்டுரைகள்
காலச்சுவடு பதிப்பகம் (முதற் பதிப்பு -டிசம்பர் 2004)

செழியன் - உலக சினிமா பாகம் - II
விகடன் பிரசுரம் (நான்காம் பதிப்பு - செப்டெம்பா 2009)

வரிசை.கி.ராமச்சந்திரன் - உலகப்புகழ்பெற்ற திரை நட்சத்திரங்கள்
மணிவாசகர் பதிப்பகம்
(முதற் பதிப்பு - அக்டோபர் 2009)

சி.எஸ் தேவநாதன் - நகைச்சுவை மன்னன் நாகேஸ்
விஜயா பதிப்பகம் (முதற்பதிப்பு- டிசம்பர் 2009)

"கலைவித்தகர்" ஆரூர்தாஸ் - சிவாஜிவென்ற சினிமா ராஜ்ஜியம்
விகடன் பிரசுரம் (முதற்பதிப்பு - டிசம்பா 2008)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.யேசுராசா - பதிவுகள் - அலைவெளியீடு (முதற்பதிப்பு மார்கழி- 2003)

தி.சு.சதாசிவம் (மூலம் அகிராகுரேசவா) - ரஷோமான் திரைக்கதை
ஆழி வெளியீடு (முதற்பதிப்பு - 2007)

திரைப்படக்கலைஞர் ராஜேஷ் - மாபெரும் சினிமா இயக்குநர்கள்
தாமரை பப்ளி கேஷன்ஸ்(பி)லிட்
(முதற்பதிப்பு ஜனவரி 2010)

பா. தீனதயாளன் - கமல்
கிழக்குப்பதிப்பகம் (முதற்பதிப்பு 2009)

**ஆ) தொகுப்புகள்**

நிஜத்தின் உரைகல்லில் நிழல் சினிமா - கீழைக்காற்று வெளியீட்டகம்
(முதற்பதிப்பு டிசம்பர் -2010)

சினிமா திரை விலகும் போது - புதிய கலாச்சாரம் வெளியீடு
(முதற்பதிப்பு - பிப்ரவரி 2004)

ஈரானிய சினிமா - தொகுப்பு ப. திருநாவுக்கரசு
நிழல் வெளியீடு (முதற் பதிப்பு -2009)

**இ) இணையத்தள கட்டுரைகள்**

எஸ்.இராமசந்திரன் - வரலாற்று நோக்கில் வர்மக்கலை
சுகுமாரன் - செட் போடுவதல்ல ஆர்ட் டைரக்ஷன்
ஆனந் அண்ணாமலை - தமிழ் சினிமாவில் கலை : ஹாலிவூட்
புதிய மாதவி - மும்பை தமிழர் அரசியலும் தாதாக்களும்

**ஈ)சிற்றிதழ்கள்**

உயிர்மை - ஜுலை 2008, ஜீலை 2010
நிழல் - மார்ச் 2006, யூன் 2006, ஜனவரி 2007, மே 2007 நவம்பர்-டிசம்பர் 2009,
அக்-டிசம்பர் 2011
காலச்சுவடு - ஆகஸ்ட் 2006, ஜனவரி 2007
ஆகவே - செப்ரெம்பர் -2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இ.சு.முரளிதரன் என்ற இந்த
உற்சாகமானஇளைஞர்.
'நுங்கு விழிகள்', 'நள தமயந்தி',
'புழுவிற்கும் சிறகு முளைக்கும்' ஆகிய
கவிதைத் தொகுப்புக்களை
வெளியிட்டுள்ளார். அண்மைக்
காலங்களில் பின்நவீனத்துவப்
பாங்கான வித்தியாசமான
சிறுகதைகளையும் எழுதிவருகிறார்.

'தமிழ் சினிமாவின் பார்வையில்
ஈழம் - வணிகமாக்கப்பட்டவலிகள்'
என்ற இவரது இந்த நூல் சினிமாவின்
பல தளங்களைப்பற்றியும் பேசுகிறது.
திரைப்படங்களின் பெயர்கள்,
பின்னணிப்பாடல், கதைக்களங்கள்,
திரைக்கதை, நடிகர்கள்,கூறப்படும்
(அழுத்தப்படும்) கருத்துக்கள்
என்றவாறாக..... அத்துடன் ஈரானிய
சினிமா, ஆப்கானிஸ்தான் சினிமா
பற்றிக் கூறுவதோடு றசோமான்,
பதேர் பாஞ்சாலி, பைசிக்கிள் தீவ்,
புறநூந்த கஞவற ஆகிய திரைக்
காவியங்களைப்பற்றியும் பேசுகின்றது.
தமிழ் சினிமாவையும்- உலக
சினிமாவையும் ஒரே நூலில்
அருகருகாக வைத்து அலசிப்
பார்க்கின்ற இந்த முயற்சி
வரவேற்புக்கும் பாராட்டுக்குமுரியது.

குப்பிழான் ஐ. சண்முகன்

MATHI COLOURS
Nallur 021 2229285
978-955-3676-08-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org